பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஜீன் 2022



## எனக்கு நானே போதிமரம்

கவிஞர் செல்வா ஆறுமுகம்

பக்கம் 52

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்®

உதயம் 1972 – ஜூன் 2022

606



ஆசிரியர் / வெளியிடுபவர் :

**அமின் மொஹமெட்**

இணையாசிரியர் :

**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**

நிர்வாக ஆசிரியர் :

**சஃபி மொஹமெட்**

ஆசிரியர் குழு :

**ஹிப்ஸுர் ரஹ்மான்**

**கவிஞர் பாலமுனை பாறூக்**

**கவிஞர் நெல்லை உலகம்மாள்**

**பாவலர்மணி இராம வேல்முருகன்**

**கவிஞர் தென்றல் கவி**

**வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்**

**கவிஞர் பொன்மணிதாசன்**

**கவிஞர் அ. முத்துசாமி**

**கவிஞர் ஈழபாரதி**

ஆலோசகர்கள் :

**பாட்டரசர் கி. பாரதிதாசன்**

**கவிதாயினி சக்தி ஜோதி**


நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,

நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...


Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats,
95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com


புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.



# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

உலகின் சூழலைப் பார்க்கும்போது பயம்கொள்ளவே செய்கிறது. நாட்டுக்கு நாடு பகைமை. அதனால் ஏற்படும் அழிவுகள். இயற்கையில் மாசு. விலைவாசி ஏற்றம். மக்கள் செயலிழக்கும் தன்மை. இப்படி எத்தனையோ அழிவுகளில் தள்ளாடி நிற்கிறோம்.

இனிநாம் என்ன செய்யப்போகிறோம். சுபீட்சமாக, சுகாதாரத்துடன் வாழமுடியுமா? நமக்குப்பின் தொடரும் இளம் சந்ததியினரின் நிலமை என்னவாகும் என்ற கேள்விக்குறிகள் நீண்டுக்கொண்டேப் போகிறது.

என்னுள்ளும் தனிப்பட்ட முறையில் இயலாமை என்பன வயது முதிர்வால் காணத் துவங்கிவிட்டது. இம்மாதம் எனது வயதொன்றும் கூடுகிறது. இதனைத் தொடர்ந்தும் செய்ய முடியுமா என்றொரு கேள்வியும் எழுகிறது.

இயன்றவரைத் தொடருவேன். தள்ளாமையுடன். நல்லுள்ளத் தோழமைகள் தரும் உற்சாகத் துணிவுகளால்தான் இயலாமையிலும் இயன்றதைச் செய்கிறேன். எனது பிறந்த நாளில் வாழ்த்துங்கள்.




நானும் வாழ்த்துகிறேன் உங்களை.
நன்றி!




(ஆசிரியர்)

# சொல் தோழி!

## (தோழி கூற்று!)

மனதிற்குள்ஓர் ஓரத்திலே
மறைப்பதென்னடி!?
உதடிரண்டும் ஒலியில்லாமல்
உரைப்பதென்னடி!?

சினேகிதிக்கும் தெரிவிக்காமல்
எதைமறைக்கிறாய்!?
அனேகமுண்டோ? அறியக்கேட்டால்
பதைபதைக்கிறாய்!?

நேற்றுவரை உந்தன்செய்கை
இப்படியில்லை!
மாற்றத்திற்குக் காரணம்சொல்
விடுவதாயில்லை!

நீயும்நானும் ஒன்றுபட்டோம்
உள்ளத்தினாலே
நிகழ்த்திவிட்டாய் உறவில்விரிசல்
கள்ளத்தினாலே!

கைகள்கோர்த்துக்
கண்கள்பார்த்துக்
கதைகள்பேசினாய்
கதையில்என்ன மாற்றம்?இன்றேன்
மெழுகிப்பூசினாய்?

"தோழியுன்னைப் போல்வருமா?"
சொன்னசொல்எங்கே?
சோழியைப்போல் சுண்டியிழுக்கும்
சிரிப்பொலிஎங்கே?

உதட்டிலென்ன காயம்எந்தக்
கிளிகடித்தது?
உடம்பிலென்ன கீறல்எந்தப்
புலியடித்தது?

கொடியிடையில் வருத்தமென்ன
குழைவதேனடி?
ஓடிச்சென்று கதவுக்குப்பின்
ஒளிவதேனடி?

உனக்குவந்த நோயறியா
சிறுபிள்ளையாநான்?
உனக்குமுன்பே பருவமடைந்த
பெண்ணில்லையாநான்?

என்னைத்தின்ற காதல்தானே
உன்னைத்தின்றது
ஒருநொடியில் எந்தக்கள்வன்
உன்னைவென்றது?

**அகரம் அமுதன்**

# வெளிச்சம்காண
# காத்திருக்கிறேன்

மின்மினி வெளிச்சங்களாய்
வந்து வந்து பளிச்சிடும் நினைவுகள்
எப்படி மன இருளை அகற்றும்?

வெள்ளி நிலா வெளிச்சம் வேண்டும்
வேதனைகள் அகல

நிலவா இல்லை
மின்மினிப்பூச்சியா சொல்...
நிலவென்றால் மட்டுமே
எனக்கு சம்மதம்

என் வானத்தில் எப்போதுநீ
ஒளி வீசப்போகிறாய்?
காத்திருக்கிறேன்
முழு நிலவிற்காய்...

என் இரவு
வெளிச்சப்பூக்காடாகி
ஒளி வீசும்...
முழு நிலவில் குளிக்கும் ஆசையில்
நான் காத்திருக்கிறேன்.

**- தென்றல்கவி தமிழ்ச்சிட்டு**



# தமிழ்நெஞ்சம் அமினார் வாழி



அயராது பணியாற்றும் அண்ணன் - இவர்
அருந்தமிழர் போற்றுகின்ற மன்னன்
வியக்கின்ற இதழ்நடத்தும் நன்னன் - இவர்
விருந்தெனவே கவிதைதரும் கண்ணன்

நூற்றாண்டில் அரைதாண்டிச் சென்று - இவர்
நூலெல்லாம் கொடுத்திடுவார் வென்று
ஊற்றெனவே கவியூறிப் பாயும் - இதழ்
உயர்வான நற்கருத்தை ஆயும்!

நிரவியெனும் சிற்றூரில் பிறந்து - இவர்
நீள்புகழை ஈட்டினாரே சிறந்து
புரவியிலே பாய்வீரர் போல - இவர்
புகழ்குதிரை பாய்தமிழின் தோணி!

பொருளீட்டி உலகாளும் பாரில் - இவர்
பொற்றமிழால் வலம்வருவார் தேரில்
அருள்சுமந்த இறையவனின் பிள்ளை இவர்
அன்புவழி கண்டதில்லை எல்லை!

இன்னும்பல நூறாண்டு வாழ்க! இவர்
எழுகதிரின் நல்லொளியாய் ஒளிர்க
மன்னுபுகழ் தமிழ்நெஞ்சத்(து) அமினார் - இவர்
மாப்புகழைப் பெற்றுலகில் வாழ்க!



தமிழ்நெஞ்சம் அமினாரே வாழி
தமிழ்போல உலகினிலே வாழி
இமயம்போல் உயர்ந்தென்றும் வாழி
எழில்நிலவின் தண்ணொளியாய் வாழி!

பாவலர்மணி **இராம வேல்முருகன்**
வலங்கைமான்

# வழித்துணை

## சோலச்சி
அகரப்பட்டி

“என்னாச்சு... தூங்காம அங்கிட்டும் இங்கிட்டுமா நடந்துக்கிட்டே இருக்காக. வயிறுகியிறு சரியில்லயா...” படுக்கை யிலிருந்து எழுந்து வாசலுக்கு வந்தாள் ராஜேஸ்வரி.

“அர்த்த ராத்திரில நாய்க வேற கத்தி தூக்கத்த கெடுக்குதுக.... ஒடிச்சி... ஒடிச்சி..... ” வாசலில் கிடந்த குச்சியால் தரையை ஓங்கி அடித்தாள். நாய்கள் ஒன்றோடொன்று குரைத்துக்கொண்டே சிதறி ஓடின.

ஏங்க... தூங்காம என்ன பினாத்திக் கிட்டு இருக்கீக...

“ஒன்னும் இல்ல. நீ எதுக்கு எந்திரிச்ச ராஜி. போயி தூங்கு. காலு கைய கழுவிட்டு வந்தர்றேன்..” வாளியிலிருந்த தண்ணீரை எடுத்து கைகால் அலம்பிட்டு படுக்க வந்தவரிடம் “ஏங்க.... பெத்த ஆயி அப்பன தூக்கிப்போட்டு மிதிச்சா பயலுக அடங்குவானுக. உசுரக்குடுத்து சம்பாரிச்சு வக்கணையா ஆக்கிப்போட்டா கஷ்டநஷ்டம் தெரியாம தின்னுட்டு வெடச்சுக்கிட்டு திரியுறானுக. இது நம்ம காலம்மாறி இல்ல. கம்ப்யூட்டர் காலம்ல. கண்டதப்போட்டு கொழப்பிக்காம படுங்க...” போர்வையை இழுத்துப் போத்திக் கொண்டாள்.

இவ என்ன திடுதிப்புனு இப்புடி சொல்றா.... ராஜேஸ்வரியை ஏற இறங்க பார்த்துவிட்டு ஒருக்கணச்சு படுத்தார்.

பத்துப்பதினஞ்சு நாளாவே செய்தித் தாளிலும் தொலைக்காட்சியிலும் மாணவர்கள் பற்றிய செய்தியே ஓடிக் கொண்டிருந்தது. குடித்துவிட்டு பள்ளிக்கூடத்தில் ஆட்டம் போடுவதும் ஆசிரியரை அடிக்க துள்ளிக் குதிப்பதும் மேசைகளை உடைப்பதும் என பரவலாக செய்திகள் வந்த வண்ணம் இருந்ததால் மனசு ஒடஞ்சு போயிருந்தார் செயராஜ் வாத்தியார்.

நமக்கிட்ட அஞ்சாவது படிக்கிற வரைக்கும் புட்டிப்பாம்பா அடங்கி கெடக்குறானுக. ஆறாவது ஏழாவது போயிட்டா மண்டயில கொம்பு மொளச்சு போயிருதோ. சேராத ஆளுகளோட சேந்து பழகாதத யெல்லாம் பழகி பாழாப் போயிடுறானுக. பயலுக கண்ணுல படுறமாறி ஊருஒலகம் பூரா நாசமா போன அசிங்கத்தயே கொட்டி நெறச்சு வச்சுருந்தா பாக்குற பயலுக கெட்டு குட்டிச்சுவரா போகாம என்னப் பண்ணுவானுக. இவனுக மத்தில வாத்தியாருக படுறபாடு வேற அய்யய்யோ... உஷ்.....ஷ்....” கண்களை மூடித் திறந்து முகட்டைப் பார்த்தார். வீடு முழுவதும் இருள் சூழ்ந்திருந்த போதும் மின் விசிறி சுழற்சியிலும் இரவை தனதாக்கி ரம்மியமான பாடல்களை இசைத்துக் கொண்டே இருந்தன கொசுக்கள்.

“ஒவ்வொருத்தனும் தான்தான் ஹீரோனுகிட்டு அலயுறானுக. ஒத்தப் புள்ளனு செல்லம் குடுத்து கண்டது கடியதையும் வாங்கிக்குடுத்தா துமுரெடுத்து மெதப்புலதான் திரிவானுக. கேக்குறத எப்பாடுபட்டாவது வாங்கிக் கொடுத்துட்டு எங்குட்டோ நம்மல விட்டா போதும்முனு நெனச்சா... இன்னும் என்னன்னமோ பண்ணத்தான் செய்வானுக. பாறக்களத்துல பத்துப்பாஞ்சு வருசமா வேல பாக்குறனே

# மௌனம்

இழுத்துச்செல்கிறது
என்னை
உன் நிழல்

நுழைவதேயில்லை
நீ பேசும் சொற்கள்
என் காதில்

அகண்ட விழிப்பார்வை
ஒரு நிலைக்கொள்ளாமல்
சுடர்.

அருகருகே ஜோடியாய்
சேர்த்துப் பார்க்கிறேன்
கோவில் வாசலில்
காலணிகள்.

எழமுடியாமல் அமர்ந்தபடி
முள் குத்திய காலுடன்
கூந்தலில் ஒற்றை ரோஜா

கடித்துக்கொள்ளும் இதழ்
காதலை பற்றிய சொற்கள்
வெளியேற வழியின்றி
திக்குத்தெரியாமல்
முச்சந்தியில் நிற்கிறது
மௌனம்.

**- சாயிராம். தஞ்சாவூர்.**

ஏங்கிட்ட படிச்ச ஒருத்தனாச்சும் இந்தமாதரி அடாவடி பண்ணி கேள்பட்டிருக்கேனா.... கொடுக்குற எடத்துல கொடுக்கனும். நடத்த வேண்டிய எடத்துல நடத்திறனும். ஒடிச்சாதான் மரக்கன்னு நல்லா வளரும்னா அதச் செய்றது தப்பு இல்லயே. ''

''சார்... சின்னப்பள்ளிக்கூடத்துல ஒரே ஊருக்கார புள்ளைக நாப்பது அம்பது பேரு படிப்பானுகளா. பெரிய பள்ளிக் கூடத்துல அப்புடியா... பல ஊர்லருந்தும் வர்றானுக. எவனையாவது திட்டுனாக்கூட ஏதாவது பண்ணிக்கிறானுக. நமக்கிட்ட படிச்ச பயலுகதான் அரசியல்வாதிங்கிற பேருல எதுடா சறுக்குன்னு பாத்து நம்மல பாடாப்படுத்துறானுக'' பெரிய பள்ளிக் கூடத்து வாத்தியார் ஒருவர் சொன்னது நினைவுக்கு வர ராத்திரி பூரா தூங்காம மனச அலயவிட்டுக்கிட்டே இருந்தார் செயராஜ் வாத்தியார்.

எப்போதும்போல சீக்கிரமா எந்திரிச்சு ராஜேஸ்வரி கலக்கிக்கொடுத்த நீராரத்தை வாசலில் நின்று குடித்துக் கொண்டிருந்தார்.

''ராத்திரி பூரா தூங்காம மொன மொனனுக்கிட்டே கெடந்தீக. கொஞ்ச நேரம் அசந்து தூங்குனாதான் என்னவே. அஞ்சுமணிக்கெல்லாம் எந்திரிச்சு வாசல்ல ஆ... னு வானத்தயே பாத்துக்கிட்டு இருக்கீக...'' முனு முனுத்தவளிடம் ''ம்.... முணுமுணுக்குறது ஊருக்கே கேக்குது. ராத்திரி பூரா நீங்க தூங்குனிகளாக்கும். வெளிய வா...ராஜி. வெள்ளி எவ்ளோ பெருசா மொளச்சுருக்கு.''

''அது என்ன இன்னக்கி நேத்தா மொளக்கிது. காலங்காலமாதான் இருக்குது. மேல பாத்தது போதும் உள்ள வாங்க. வாசதெருவுல எந்திரிச்சு போறவுக என்னம்மோஏதோனு நெனக்க போறாக.'' வெங்காயம் தக்காளியை நறுக்கிக்கொண்டு இருந்தாள்.

''எவ்ளோ தூரத்துலதுருந்து நம்மல பாக்குது. நாம பாத்தா கொறஞ்சா போகப்

போறம். ஒனக்கு ஒன்னுதெரியுமா. இந்த வெள்ளிதான் சூரியனுக்கே பூமிய பாக்குறது வழியக் காட்டுது. ம்... வெங்காயம் தக்காளிய ஏங்கிட்ட கொடு நறுக்குறேன்.'' பேச்சின் இழுவையை உள்வாங்கியவள் ''எப்ப பாத்தாலும் பள்ளிக் கூடம்மாறியே வீட்லயும் பாடம் நடத்துனா . நா வேல பாக்குறதா இல்ல ஒங்க பேச்சுக்கு ஈம்... போடுறதா'' சிரித்துக்கொண்டாள்.

றெக்கய அடிச்சுக்கிட்டு அங்கொன் னும் இங்கொன்னுமா சேவலுக கூவத் தொடங்கியது. முக்கத்து கடைக்கி டீக்குடிக்கப் போறவுங்க வாசலில் பேசிக் கொண்டே போனார்கள். வெள்ளியை உலவுபார்க்க அனுப்பியிருந்த சூரியன் மெல்ல எட்டிப்பார்த்தது.

எப்போதும் எட்டுமணிக்குத்தான் குளிக்கவே போகும் செயராஜ் வாத்தியார் பொழுது விடிந்ததும் குளித்து உடை மாற்றிக்கொண்டிருந்தார்.

தூரந்தொலைவுலஏதும்போகனுமா. இல்ல ஆபிசருங்க யாராச்சும் வர்றாங்களா . இவ்ளோ சீக்கிரமா மனுசன் கௌம்புறாரு. கல்யாணமாயி இருபது வருசத்துல இப்புடி அரக்கபறக்க கௌம்புனது இல்ல. ஒன்னும் புரியாதவளாய் தட்டில் சோறு போட்டுக்கொண்டு வந்தாள்.

ராஜியின் முகக் குறிப்பை உணர்ந்து கொண்டவர் ''ராஜி...ஒன்னயக்கல்யாணம் பண்ற வரைக்கும் பள்ளிக்கூடத்துக்கு பாஞ்சு கிலோமீட்டர் பஸ்ல போயி அங்கிட்டு ரெண்டு கிலோமீட்டர் நடந்துதான் போனேன். ரொம்ப வருச மாச்சா. அதான் இன்னயிலருந்து பஸ்ல போகலாம்னு இருக்கேன். வாழ்க்கைங் கிறது வெங்கலம் மாதிரி அப்பதைக்கி அப்பத வெளக்குனாதான் பளிச்சுனு இருக்கும்''

''ம்..... எதுக்கு என்ன உதாரணமோ... நா என்னத்த கண்டேன். நூத்திபத்து ரூவாக்கிமேல பெட்ரோல் விக்கிற வெலயில ஏங்கிட்ட ஏதும் மோடி வித்த காட்டாம இருந்தா சரி'' சிரித்துக் கொண்டாள்.

பை ஒன்றை தோளில் மாட்டிக் கொண்டு ஒரு கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் பேருந்து நிறுத்தத்திற்கு சென்றுகொண்டிருந்தார். வழியில் பார்த்த வர்களிடம் அவரால் பதில் சொல்ல முடியவில்லை.

சார்... வண்டி என்னாச்சு..

நா வேணா கொண்டுவந்து விடவா...

சிறிது நேரத்தில் பள்ளிச்சீருடைகள் காற்றோடு மல்லுக்கட்ட படிக்கட்டில் மாணவர்கள் தொங்கியவாறு பேருந்து வந்தது. ஒன்றிரண்டு பேர் பேருந்தில் ஏறினர். பின்பக்கமாய் முண்டியடித்துக் கொண்டு செயராஜ் வாத்தியாரும் ஏறினார். பேருந்தின் நடுவில் யாருக்கோ பட்டா போட்டது போல் இடம் பொட்டலாய் கிடந்தது. உள்ள இவ்ளோ எடம் கெடக்கு. அப்பறம் என்னத்துக்கு படிக்கட்டுல பத்து பேருக்கு மேல தொங்கிட்டு வர்றானுக.

ஒருத்தன்மேல ஒருத்தன் தோள்ல கை போட்டு காத்துல மிதந்து கொண்டி ருந்தனர். ''டேய் மாப்ள.... ஒஞ்செருப்பு ரோட்டுல ஒரசி நெருப்பு பறக்குதுடா'' படிக்கு மேல் நின்றவர்களில்ஒருவன்கத்தினான்.புல்வயல் அருகே வந்தபோது செருப்பை கழட்டுவிட்டு வேகத்தடையில் டக்கென எறங்கி செருப்பை மாட்டிக்கொண்டு ஓடிவந்து கம்பியைப் பிடித்து ஏறி முடியை சிலுப்பி வலது கையை ஆட்டியபோது உள்ளிருந்த பொம்பளப் புள்ளைங்க அவனையே பார்த்து சிரித்துக்கொண்டிருந்தனர்.

''ஒருநாளு விடாம சொல்லிக்கிட்டு தான் இருக்கேன். எவனாவது விழுந்து சாகப்போறானுக. எங்க தாலிய அறுக்கப் போறானுக'' கத்திக்கொண்டு இருந்தார் நடத்துநர்.

''யண்ணேய்.... எந்தக் காலத்து

லண்ணே இருக்க. போண்ணே...'' நான்கு விரலை தலைமுடிக்குள் விட்டு கோதிக்கொண்டான் ஒருவன். பின்பக்கம் வாசற்படியிலும் இருக்கையிலும் கூத்தும் கும்மாளமுமாக இருந்தது. சிலர் தலை முடியை ஒருபக்கமாய் வயலில் வரப்பு வெட்டியது போல் வெட்டி நான்கைந்து கோடுகளும் போட்டிருந்தனர். முன்பக்க மாய் நீண்டு தொங்கிய தலைமுடியை சிலுப்பிக் கொண்டும் விரல்களால் தள்ளி விட்டுக் கொண்டும் நின்றனர்.

இப்படியெல்லாம் முடி வெட்டலாம் என்று வழிகாட்டியது யார்...? சினிமாவா... இல்லை இவர்களாகவே செய்கிறார்களா...? எது எப்படியோ சினிமாவிலும் நல்லவை எவ்வளவோ கொட்டிக் கிடக்கிறதே... கவர்ச்சிகள் மட்டுமே கண்ணில் படும்படி இருந்தால் எதை உள்வாங்குவது..? எல்லாம் வியாபாரமாகி போனதால் வந்த விளைவுதான். வெயில் படும்வரை புல்லில் ஒட்டியிருக்கும் பனித்துளி போல் சிறு இன்பத்துக்காக வாழ்வை தொலைப்பது எந்த விதத்தில் நியாயம். பேரின்பக் கடல் எது... நாம் செய்ய வேண்டிய பணி எது என்பதை சொல்லித் தராமலேயே நாட்களை நகர்த்திக் கொண்டிருக் கின்றோம்.

நடுவில் உட்கார்ந்திருந்த ஒன்றி ரண்டு பசங்களும் பொம்பளப் புள்ளைகளும் புத்தகத்தை எடுத்து எதையோ மனசுக்குள் வாசித்துக்கொண்டு இருந்தனர். பின்னால் உள்ள படியிலிருந்து பசங்க ளையும் போதெல்லாம் காதுகளை பொத்திக்கொண்டு முகம் சுளித்தனர். இதுதான் கொண்டாட்டம் என்று ஆட்டம் போடுபவர்கள் மத்தியில் இப்படியும் பிள்ளைகள் இருக்கின்றார்களா என எண்ணத் தோன்றியது.

செயராஜ் வாத்தியாருக்கு முன் இரண்டு இருக்கை தள்ளி உட்கார்ந் திருந்த ஒருவன் பக்கத்தில் நின்ன பொம்பளப் புள்ளையின் தொடையில் கிள்ளுவதும் இடுப்பை கிள்ளுவதுமாக இருந்தான். அவனின் சேட்டைகளை ஏற்றுக்கொள்வதுபோல் பதிலுக்கு அவளும் செல்லமாய் அவன் தலையில் கொட்டுவதும் அவன் சிரிப்பதுமாக இருந்தனர். பொதுமக்கள் நான்கைந்து பேர்தான் உட்கார்ந்திருந்தாலும் எவன் எக்கேடு கெட்டா நமக்கென்ன என்பது போல்தான் இருந்தனர். இருவரும் பதினொன்னா வது இல்லாட்டி பன்னென்டாவதுதான் படிக்க வேண்டும் என்பதை யூகித்துக் கொண்டார்.

கம்பியை பிடித்து நின்றுகொண் டிருந்த செயராஜ் வாத்தியார் பொறுமை இழந்து ''ஏன்டா இந்த அழிச்சாட்டியம் பண்றீக. படிக்கிறதுக்கு ஒங்கள பஸ்சுல ஏத்திவிட்டுட்டு ஒங்க தாய்தகப்பன் அஞ்சுக்கும் பத்துக்கும் எங்கேயோ கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்காக. அத நெனச்சுப்பாத்தா இந்த மாதிரி வேல

## மதிதெளிவரோ...



தன்னலம் தன்னிலே..
தன்மதி தொலைத்தவர்
பின்னொரு நாளிலே
பின்புலம் தொலைத்ததும்
இன்னொரு உறவினைத்
தேடிடும் நாள் வரும்
அன்றொரு பொழுதிலே
அறிவரோ.. தன் இழி குணம்...
மதிதெளிவரோ...
இனி ஒரு கணம்...

**மக்கொனையூராள்**

பண்ணுவிகளா'' வாத்தியாரின் குரல் ஓங்கி ஒலித்ததும் முன்பக்கமாய் நின்று கொண்டிருந்த நடத்துனர் ''எங்கிட்டோ பயலும் சிறுக்கிகளும் அடங்குனா சரி'' என்பது போல் தலையாட்டிக் கொண்டார்.

''டேய்.... மாரி... அவரு சின்ன ஸ்கூல் வாத்தியாருடா. எங்க ஊரு பக்கம்தான்டா அவரு வூடு இருக்கு'' கடைசி மூலையிலிருந்து ஒருவன் முணுமுணுத்தான். படியில் நின்றவர்கள் ஒரு படி மேலே ஏறினர். சிறிது நேரம் அமைதி நிலவியது.

தொடையை கிள்ளி விளையாடி யவன் தனது தொடையை இருக்கைக்குள் இழுத்துக்கொண்டு சன்னலை பார்க்க ஆரம்பித்தான். தலையில் கொட்டி விளை யாடியவள் தரையில் நகர்ந்தே முன்பக்கம் சென்று தலையை தொங்கப் போட்டுக் கொண்டாள்.

பேருந்து, பொகக்கொளம் முக்கத்தை கடந்தபோது மீண்டும் ஒன்றி ரண்டு பேர் கடைசி படியில் இறங்கி ஒத்தக் கையை விட்டுவிட்டு தலைமுடியை அவ்வப்போது கோதிக்கொண்டு வீசும் காற்றை விலக்கிக்கொண்டு தொங்கினர்.

அருகே நின்றவர்களிடம் ''எந்த ஊருப்பா நீங்கெல்லாம்...'' செயராஜ் வாத்தியார் கேட்டதும் பக்கத்தில் நின்றவன் தனது ஊரையும் படிப்பையும் சொன்னான். அவன் சொன்ன ஊரில் பத்தாம் வகுப்பு வரை பள்ளிக்கூடம் இருக்கிறது என்பது அவருக்கு தெரியும். அங்க படிக்காம பத்து கிலோமீட்டர் தள்ளி இருக்க ஊருக்கு எதுக்கு வர்றீக. பஸ்ல தொங்கி அலப்பறய கொடுக்குறதுக்கா....தனது முறுக்கு மீசையை தடவிக் கொண்டே, ம்.......உள்ளூர்ல விட்டா கெட்டுப்போயிருவீகனுதானே இவ்ளோ தூரத்துல சேத்துவிட்ருக்காக...... பேச்சை இழுத்தார்.

வாத்தியாருனு பின்னால உள்ள வனுக சொன்னானுக. பாத்தா போலிஸ்

# அழிவற்ற செல்வம் கல்வி

ஆற்ற லோங்க அகத்துள்
ஐயம் நீக்கும் அருமருந்தாம்!
ஊற்றாய்ப் பொங்கி நாளும்
உயரச் செய்யும் நற்றிறனாம்!
வேற்று மனிதர் துயரை
வென்று வாழ வழிகாட்டும்!
தோற்றுப் போகா வண்ணம்
தொடர்ந்தே வளரும் நற்கல்வி

பண்பு படைக்கும் ஞானம்
பாரே போற்றும் பெருஞ்செல்வம்
அன்பாய் வாழக் கற்க
அமைதி பூணும் நம்முள்ளம்!
இன்ப மூட்டும் மாட்சி
ஈசன் தந்த அருளாட்சி!
கண்ணாய்ப் போற்றும் கல்வி
கடவுள் தந்த நல்வரமே!

இம்மை இயக்கும் மருந்தாம்!
இகத்தில் பிறக்கும் நற்றெளிவு
நம்மை உணரும் தன்மை
நல்ல ஆசான் பெருங்கொடையே!
எம்மை வளர்க்கும் வித்தை
ஏற்றம் காணும் வழிகாட்டி
அம்மா காட்டி வளர்த்த
அருமைச் செல்வம் தமிழ்க்கல்வி!

நகுலா சிவநாதன்
ஜெர்மனி



காரு மாறி இருக்காரு. எதுக்குடா வம்பு. கொஞ்ச நேரத்துல ஸ்கூல் வந்துறப்போவுது. உள்ளே நின்றவர் களில் சிலர் எவ்வித சலசலப்பும் இல்லாமல் அமைதி காத்தனர். படியில் தொங்கிக்கொண்டு வந்தவர்களில் சிலர் மேலே ஏறி தலையை சொறிந்துகொண்டே பொம்பளப்புள்ளைகள பார்த்து உதட்டைப் பிதுக்கினர். பேசாம மேலயே நில்லுங்க என்பதுபோல் கண்களால் செய்தியை பரிமாறிக் கொண்டனர்.

நீ என்ன வேணாலும் பண்ணிக்க என்பதுபோல் ரெண்டு பேர் மட்டும் படியில் தொங்கிக் கொண்டு வந்தனர். இருக்கையில் உட்கார்ந்திருந்த பசங்க சிலர் எழுந்து உட்காருங்க சார் என்றனர். தோளை தட்டிக்கொடுத்து அவர்களை உட்காரச் சொன்னார். சிலர் உட்காராமல் எழுந்து கொண்டனர்.

பத்துப் பதினஞ்சு மைல் நடந்தே போயி படிச்சோம். அப்பெல்லாம் சைக்கிள் வச்சுருக்கதே பெருசு. எல்லா வாத்தியாருகளும் பஸ்லதான் வருவாக. எப்பவாச்சும் மழகாலத்துல பஸ்ல போனா உள்ளுக்குள்ள ஓரமா ஒண்டிக்கிட்டே இருப்போம். எந்த வாத்தியாரு கண்ணு லயும் பட்றக்கூடாதுனு நெனப்போம். பஸ்ல ஏதாச்சும் சேட்ட பண்ணுனம் அவ்ளோதான். அதுலயும் அருணா வாத்தியாரு கண்ணுல மட்டும் பட்டோம்னு வையி பள்ளிக்கூடத்துக்கு வந்ததும் நைநைனு நச்சு எடுத்துப்புடுவாரு. இதுக்குப் பயந்துக்கிட்டே எத்தன மைல் னாலும் நடந்தே போயி படிச்சோம். நாலு காச பாக்க பெத்தவுக பட்ட கஷ்டம் கொஞ்சநெஞ்சமுல்ல... ஒத்தக்காசு முட்டாயி பத்து வாங்கி சப்பிக்கிட்டே போன காலம் இப்ப வருமா... பள்ளிக்கூடத்து நினைவுகள் வந்து போனது.

பொம்பளப்புள்ளைக ஏதோ தங்க ளுக்குள் குசுகுசுனு பேசிக் கொண்டனர். உதடுகளின் வாசலை மெதுவாய் திறந்து காற்றின் ஓசையிலேயே சார் வணக்கம் என்பது போல் வலது கையை உயர்த்தினர். பதிலுக்கு செயராஜ் வாத்தியாரும் தலையை ஆட்டி புன்முறுவல் பூத்தார்.

அண்ணாப்பண்ணை முக்கத்தை தாண்டியபோது தொங்கிக்கொண்ட வந் தவர்களில்ஒருவன்நாக்கைமடக்கிவியிங்... வியிங்....கென விசில் அடித்தபோது பேருந்தின் வேகம் குறைந்தது. மாப்ள நோட்ட கொண்டு வந்துருடா என்று சொல்லிக்கொண்டே ஓடும் பேருந்தில் இறங்கினான். பெரிய பள்ளிக்கூடத்தின் வாசலில் பேருந்து நின்றது. செயராஜ் வாத்தியாரைப் பார்த்துக்கொண்டே பசங் களும் பொண்ணுகளும் இறங்கினர்.

நல்லது கெட்டது எதுன்னு வாழ்ற வழியச் சொல்லி வளத்தாதானே புள்ளைகளுக்கு தெரியும். தானாப்புள்ளயா விட்டா காட்டுமாடுமாறி திரிய வேண்டி யதுதான். அப்பறம் குத்துது கொடயுதுங்குறது. ரெட்டை சடை பின்னிக்கொண்டும் தோளில் புத்தகப்பையை சுமந்து கொண்டும் எண்ணற்ற நட்சத்திரங்கள் நடந்து போக பார்த்துக் கொண்டே கடைசி இருக்கையில் உட்காரப் போனார் செயராஜ் வாத்தியார்.

பேருந்து கிளம்பியபோது ஓடிவந்து ஏறிய இருபது வயது இளைஞன் ஒருவன் வாத்தியாரின் கைகளை உரசிவிட்டு கடைசி இருக்கைக்கு சென்றான். கண் சிமிட்றதுக்குள்ள இவன் எங்கிருந்து வந்தான் என யோசிப்பதற்குள் கால்களை அகட்டி உட்கார்ந்து, நடந்து செல்லும் பொம்பளப்புள்ளைக பாக்கனுங்குறதுக் காகவே கை தட்டினான். அவன் கை தட்டலுக்கு யாருமே காது கொடுக்க வில்லை.

காலு பின்னிவுட்டு விழுந்துருந் தான்னா எவனுக்கு நட்டம். அவனது இடது கால் வாத்தியாரின் கால்களை உதைத்துக்கொண்டிருந்தது.

காலமடக்கிஒக்காரக்கூடாதாஎன்று கேட்பதற்கு முன் அவனை கன்னத்தில்

ஓங்கி அறைய வேண்டும்போல் இருந்தது. கீழ் உதட்டுக்குள் எதையோ போட்டு மென்னு அதக்கிக்கொண்டு இருந்தான். அவன் ஏதோ சக்கரவர்த்தியைப் போல் தன்னை காட்டிக்கொள்கிறான் என்பதை உணர்ந்து கோபத்தை வெளிக்காட்டாமல் ''கால ஒடுக்கி வைப்பா'' என்று சொன்னதுதான் தாமதம். யான்...... இவ்ளோ எடம் கெடக்குல அங்கிட்டுப் போயி நிக்க வேண்டியதுதானே நக்கலாக சொல்லிவிட்டு உதடுகளை குவித்து உஸ்ஞ்....உஸ்ஞ் ஒலி எழுப்பினான்.

''படிச்சபுள்ள மாறி இருக்க. இப்புடி நடந்துக்குற. இதெல்லாம் எங்கப்பா படிச்சா...'' தாழ்ந்த குரலில் பேசினார்.

''ம்.... குடுமியான்மலைல அடைக்கன் சாருக்கிட்டதான் படிச்சேன். அதுக்கென்ன இப்ப'' கழுத்தை ஆட்டிக் கொண்டே புளிச்செனா வாசற் படியில் துப்பினான். அவன் துப்பிய எச்சில் வாத்தியாரின் காலை நனைத்தது.

''ம்..... அவர்க்கிட்ட படிச்சிட்டா இப்புடிப் பண்ற'' அவரின் கண்கள் ஈட்டியால் குத்துவது போலிருந்தது. கீழே இறங்கி வா தூக்கிப்போட்டு மிதிக்கிறேன் என்று சொல்வதாகவும் அவனுக்கு தோன்றியது. பேருந்தில் இருந்த ஒன்றிரண்டு பேரும் அவனுக்கு தெரிந்தவர்கள் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டான்.

ம்..... இந்தாளு என்ன வில்லங்கம் புடிச்சவன் மாறி பாக்குறான்.... எச்சில் விழுங்கினான்.

இந்நேரம் பொளேர்னு மொகரையில நாலு விட்ருப்பேன். அடைக்கன் சாரு மொகத்துக்காக பேசாம போறேன்.... நமட்டுச்சிரிப்பு சிரித்துக் கொண்டே பாறைக்களம் நிறுத்தத்தில் இறங்கிய செயராஜ் வாத்தியாரை திருதிருன பார்த்தவாறே குப்புனு வேர்த்துப் போயிருந்த முகத்தை கைகளால் துடைத்துக் கொண்டே கால்களை ஒடுக்கி உட்கார்ந்தான் அந்த இளைஞன்.



# வென்றிடும் காதல்.. விழிகள் வழியே..

தாளிடும் கோலம் தக்கதோர் நாணம்,
வாளிடைப் புருவம் வாய்த்த நல் பருவம்,
நாளிடை நகரும் நங்கை நல் கனவாய்,
ஆளிடை விளையும் அற்புத உறவோ.

தேனொடு மலரோ தேவதை நினைவோ,
மானென விழிகள் மயக்கம் தருமோ?
மேல்விழிப் பார்வை மெல்லிய கோடாய்,
வாள்விழி வழியே வருவது சரியோ.

ஆண்தகை தானோ அடி பணிந்தானோ,
பூண்டதோர் காதல் புகழிடம் இதுவோ?
வேண்டுதல் இங்கே விவரம் சொல்லிட,
நீண்டநல் மௌனம் நிறைமொழி தானோ,

கருதிடும் வாழ்வில் களமென விழியோ,
தெரிந்திடும் வாழ்வில் தெளிவுரை ஏனோ?
புரிந்திடும் உறவாய் பூத்திடும் மலராய்,
விரிந்திடும் காதல் வியப்பென வரவோ.

ஆரம் தழுவிடும் அழகு நல் மார்போ,
வீரம் சொல்லிட விளைந்த நல் தோளோ,
ஈரம் கொண்டவள் இனிதென சாய்ந்திட,
நேரமினிதாய் நெருங்குதல் இனிதோ.

கண்ணின் கருவிழி காதல் சுமந்திட,
மண்ணில் மயக்கம் மலர்ந்திடும் நிலையோ,
விண்ணில் பறக்கும் விடியல் கனவில்,
எண்ணப் பூக்கள் எழிலென விரிவோ.

நன்றென நங்கை நவின்றது தமிழோ,
ஒன்றிய மனங்கள் உணர்வில் பெரிதோ?
வென்றிடும் வாழ்வை விரும்பி யழைத்திட,
இன்றும் காதல் இருமனப் பிணைவோ.

**- பரணி சுப சேகர்**

# அடுப்பூதும் பெண்களல்ல துடித்தெழும் பெண்களன்றோ!



அடக்கிடும் கரங்களை
ஒடுக்கிடப் பிறந்தோம்
அதிகாரம் காட்டினால்
அவதாரமும் எடுப்போம்

அன்பைக் கொடுத்தால்
அடிமையாய்க் கிடப்போம்
அம்புகள் தொடுத்தால்
அத்தனையும் தகர்ப்போம்

அச்சங்கள் கொள்வதில்லை
இச்சகத்தில் நாங்களும்
துச்சமென எண்ணியே
துணிவுடனே வாழ்ந்திடுவோம்

சட்டங்கள் பயின்றும்
திட்டங்கள் தீட்டிடுவோம்
சமுதாயம் சிறந்திடச்
சங்கடங்கள் களைந்திடுவோம்

வீட்டுக்குள் அடைந்துவிடும்
கோழைகள் நாங்களல்ல
சிங்கநடைப் போட்டுச்
சீறியெழவே பிறந்தோமே

ஆணுக்கு நிகராக
ஆளுமையைக் காட்டுகிறோம்
எத்துறைப் பார்க்கினும்
ஈடாகவே சாதிக்கிறோம்

பாலினங்கள் பார்த்துப்
பாரபட்சம் காட்டுவோரும்
வெட்கி நாணும்வண்ணம்
வெற்றிகளைக் குவித்திடுவோம்

கூண்டுக் கிளிகளாய்
அடைத்துவிட நினைக்காதீர்
சுதந்திரப் பறவைகளாய்ச்
சிறகடித்தே பறந்திடுவோம்

மண்ணில் உதித்தது
மாண்புகள் செய்திடவே
விண்ணில் அடிவைத்தும்
விந்தைகள் புரிந்திடுவோம்

அடுப்பூதும் பெண்களல்ல
துடித்தெழும் பெண்களன்றோ
அகிலத்தின் பேராற்றலும்
பெண்ணெனும் பெருஞ்சக்திகளே



இவள் இயற்கை விரும்பி
**அ. வள்ளிபாபு**

# மானிட தேசம்!

மானிட தேசம்
மதிநுட்ப கோசம்
விழித்தால் வீசும்
புலமை வாசம்

மனிதம் காக்கும்
மனித நேயம்
மலரும் காலம்
மறுமலர்ச்சி உருவாகும்

சமூகம் எங்கும்
சமத்துவம் பேணும்
சமாதான சின்னம்
சரியாது வாழ்ந்திடனும்

உபகாரம் பொழியும்
உபத்திரவம் ஒழியும்
உபாதை அழியும்
உவகை மலியும்

நன்மை சுரக்கும்
நப்பாசை மறக்கும்
நலவை இறைக்கும்
நல்லுள்ளம் வேண்டும்

இவை அனைத்தும்
இனிதே நடக்கும்
இன்றைய மானிட தேசம்
இயல்பிற்கு மாறும் நேரம்

**அகீலா ஜவுபர்**
ஏத்தாளை புத்தளம்
இலங்கை.

# பெண்



தாயின் வயிற்றில்
கருவாகி உருவானேன்..
பத்து மாதத்தில்
குழந்தையானேன்..
பெற்றோருக்கு
அன்பு மகளானேன்...
பள்ளிக்கு சென்றேன்
மாணவியானேன்..
பருவம் அடைந்தேன்
பெரிய மனுசியானேன்..
மணவறை சென்றேன்
மனைவியானேன்..
புகுந்த வீடு சென்றேன்
மருமகளானேன்..
பள்ளியறை சென்றேன்
தாயானேன்..
விபத்தில் கணவரை இழந்தேன்
விதவையானேன்...
மகனுக்கு திருமணம் செய்தேன்
மாமியாரானேன்..
பேரன் பிறந்தான்
பாட்டியானேன்..
முதுமை அடைந்தேன்
கிழவியானேன்..
மகன் முதியோர்
இல்லத்தில் சேர்த்தான்..
இப்பொழுது நான்
அநாதையானேன்...

**- சுகுமார் கவி**

# நூல் மதிப்புரை

**மயங்கொலி மனிதர்கள்**

நூலாசிரியர் :
மருத்துவர் தேவி

பக்கங்கள் : 124
விலை : ரூ 150 /- இந்தியா

பாரதி பதிப்பகம் - சென்னை

தொடர்புகளுக்கு :
+91 98408 65737




இலக்கியக் கடலில் கவிதைகள் அலை போன்றவை. காலம் மாறினாலும் இவ்வலைகள் என்னவோ ஓய்வதே இல்லை. மருத்துவர் தேவி எழுதியிருக்கும் 'மயங்கொலி மனிதர்கள்' கூட அவ்வாறுதான். இலக்கியக் கடலில் முக்குளித்தெடுத்த சிறந்த முத்துக்களாக இக்கவிதைகள் மிளிர்வதை வாசிப்பவர்கள் உணர்ந்து கொள்வார்கள். இதில் மக்களின் படிம வளர்ச்சியே பேசுபொருளாகத் தொனிக்க ஒரு வித்தியாசமான கோணத்தினூடாகத், தன் பாணியில் கவிதைகளைப் புனைந்துள்ளார் கவிஞர்.

கற்காலத்து மனிதனுடன் கைக்கோர்த்துப் பயணித்து, பரிணாம வளர்ச்சி கண்ட நவீனமனிதனுடன் கவிதையால் சங்கமிக்கும் இக்கவி மகளின் புதிய பார்வை இலக்கியத்தை ஆரோக்கியமாகக் கரை சேர்க்கும்.

'நீதி காத்தான் நிலம் காத்தான்
நித்திலமாய் குலம் காத்தான்
நிறைவாய் இனம் காத்தான்
நிகரில்லா மன்னனென்ற
பேர் காத்தான்'

என அக்காலத்தில் பாராண்ட மன்னர்களின் செங்கோலாட்சியை விவரிக்கும் இவரின் எழுதுகோல் இன்றைய காலகட்டத்தில் கொடுங்கோலாட்சி செய்து மக்களைத் துன்புறுத்தும் பல அரசியல் தலைவர்களையும் எம் துயர நினைவுகளையும் சற்றே தட்டிப்பார்த்து, ஒப்பீடு செய்ய வைத்துச் செல்கிறது.

'நடைப்பயணம் குறைத்து
நடைப்பயிற்சி செய்கின்றார்
மாட்டு வண்டியும் குதிரை வண்டியும்
மோதலும் தரவில்லை
சாதலும் தரவில்லை காணடா
வாகனம் எரிதல் பலவும்
இக்காலம் தானடா'

ஒரு சில வரிகளில் நவீனத்துவத்தினால் விளையும் பாதிப்புகளை நாசூக்காகச் சாடுவதும் சிறப்பு!

‘கம்பு, ராகி சாமையெல்லாம்
குத்திப் போட்டு பொங்கி வச்சாலே
கமகமன்னு மணக்காதா
கட்டுடலைக் காக்காதா?
எள்ளு கொள்ளு பயிறுகளை
நாள்தோறும் தின்னதாலே
எடை அளவு மாறலயே
எந்திரத்தைத் தேடலயே’

இப்படி அந்தக் கால வாழ்வியல் முறைகள் மனிதரை சுகதேகியாக வாழவைத்த ரகசியங்களைப் பகிர்கிறார்.

கடைசியாக இயற்கையுடன் இயைந்து பண்டைய கால வாழ்க்கையை வாழ்வதே நன்மை பயக்கும் என்ற நிதர்சனத்தை, ஆணித்தரமாக வாசிப்பவர் மனங்களில் விதைத்துச் செல்லும் மருத்துவர் தேவியை இன்றைய காலத்தேவையுணர்ந்த யதார்த்தவாதியாகவே நான் காண்கிறேன்.

காவியநடையுடன் மிடுக்காகப் பவனி வரும் ‘மயங்கொலி மனிதர்கள்’ நிச்சயமாக சரித்திரம் படைப்பார்கள்.

சென்னை பாரதி பதிப்பக வெளியீடாக , 124 பக்கங்களுடன் திகழும் இந்நூலின் விலை 150 /-

தொடர்பு எண் : 9840865737
(பாரதி பதிப்பகம்)

- *தமிழமின்*



# அன்னை தேசம் வீழாது!

*பாவேந்தல் பாலமுனை பாறூக்*

அன்னை தேசம் வீழாது
அவலங்கள் தொடராது
எங்கள் தேசம் நிமிர்ந்து கொள்ளுமே!
நல்லதம்பி,நல்ல தங்கை
உள்ள நாடு வீழாது
எங்கள் தேசம் நிமிர்ந்து கொள்ளுமே!

அன்னை

அநீதி என்றும் தொடராது
அசத்தியம் நிலைக்காது
எங்கள் தேசம் நிமிர்ந்து கொள்ளுமே!
எட்டுத் திக்கும் இருந்து சேரும்
புத்தி யுள்ள பிள்ளைக ளால்
எங்கள் தேசம் நிமிர்ந்து கொள்ளுமே!

அன்னை

அதர்மங்கள் அழிந்து போகும்
அகங்காரம் வீழ்ந்து சாகும்
எங்கள் தேசம் வெற்றி கொள்ளுமே
திறமை கல்வி கொண்ட மக்கள்
ஒருமன தாய்ச் சேர்வ தாலே
வறுமை நிலை மறைந்து போகுமே!
எங்கள் தேசம் வெற்றி கொள்ளுமே!

அன்னை

இனபேதம் மறைந்து போகும்
மதவாதம் ஒழிந்து சாயும்
எங்கள் தேசம் நிமிர்ந்து கொள்ளுமே!
ஒருதாயின் மக்களென
உணர்ந்து கொண்ட இளைஞர்க ளால்
புதிய தொரு மகிழ்ச்சி தோன்றுமே!
எங்கள் தேசம் மலர்ந்து கொள்ளுமே!

அன்னை

# குறுங்கவிதைகள்

## தனித்திருத்தல்

நீண்ட நாட்களுக்குப் பிறகு
பார்த்துக் கொள்ளும்
ஒரு திருமண விழாவில்
உணவோடும் அன்போடும்
பரிமாறப்படுகிறது
இறுதியில் கிழித்தெறியப்பட்ட
உறவினரின் பெயரில்
பாதியாகத் தெரிந்த
தனிமைப்படுத்தல் உறவுகள்...!

## புகையின் வடிவம்

அப்பனுத்குத் தெரியாமல்
நான் விட்ட புகை எல்லாம்
பகையால் நீத்த
அவர் உடலில் மேல்
புகைந்துகொண்டே இருக்கிறது
என்மேல் கொண்ட
அவர்
நம்பிக்கையாய்...!

## உறவாடிய மணம்

என்னைத் கரம் கொண்டு
அள்ளி கொஞ்சக் கொடுப்பனையற்றுச்
சுவரோடு அறையப்பட்ட
தாத்தா பாட்டிக்குப்
படையலிட்டு வரவேற்கிறேன்
வருடா வருட
அவர்களின் திதியில் சூழ்ந்த
சாம்பிராணி புகையில்

## வாகை

வெயிலோடு போட்டியிட்டு
வெற்றிபெறும் ஆத்தாவிற்கு
அவ்வப்போது சூட்டி மகிழ்கிறது
தினமொரு கிழிந்த நிலையில்
படர்ந்த முந்தானை நிழல்...!

## பாய்ச்சல்

அம்புகள் பாய்ந்து
குருதியை பார்த்த பொழுதும்
அளவில்லாமல் பாய்ந்தோடுகிறது
போலி அம்புகளைச் செலுத்திய
விற்களின் துளைகள்
ஈர்த்துவிட்ட விரல்களும் தான்...!

## பெண்ணுருவம்

அலங்காரத்திற்காகவும்
அந்த மூன்று நாட்களுக்கும்
திரை மறைக்கப்பட்ட
அம்மனுக்கு
மஞ்சளும் குங்குமமாய்க்
குழைத்து வைத்திருக்கிறாள்
பக்தியின் திரை மின்னிய பெண்மை
உருவில் அம்மன்...!



# கவிஞர் கார்கவி சேகா

## கருப்பை வேண்டுதல்

ஊர்கூடிய திருவிழாவில்
தோளில் ஒரு குழந்தை
கையில் ஒரு குழந்தை என
யாரோ ஒருவரின் குழந்தைகளுக்கு
கடவுளை காண்பித்த கணவனருகில்
கையில் மூச்சடைத்த பலூன்
கொண்டு வேண்டுதலை
மனதில் அடைத்து
இறுகி நிற்கிறாள் மனைவி
முதற்குழந்தையின் வரவிற்காக.....!

## சுயம்

பல முகங்கள்
கடந்து செல்லும்
காலணிகளை
விட்டு செல்லும் இடமெல்லாம்
கையேந்தலில்
கிழிந்த துணியில்
அமர்ந்து
பொருள் சேகரிக்கிறான்
பிச்சைக்காரன்
வடிவில்
ஓர் கவிதைக்காரன்.....!

## பிழைத்தல்

தினம் ஒரு கப்பில்
கொஞ்சம் தேநீர்
இரண்டு துண்டு ரொட்டிகள்
இவைகளை தின்றதும்
முடிவில்லாது நீள்கிறது
அடுத்தநாள் பசியின்
மீதான பிழைத்தல்...!

## பரிணாமம்

மாமரமும்
தென்னையும்
நிறைந்த கொள்ளையில்
விழுந்த தேங்காய் களை
கொண்டு வந்து தரும் பேரனின்
நடையில் தள்ளாடுகிறது
பாட்டனுடைய தடியின் வயது..!



# கூண்டுகள்...

வாழ்க்கையில்தான்
எத்தனைப் படிகள்...
அத்தனையும் படிப்பினைகள்...

அதிலேறு...இதிலேறு..
அதிலேறாதே..இதிலேறாதே
என்கிறது பல முகங்கள்...

இங்கே இப்போதெல்லாம்
சூழலின் சுற்றத்தில் என்னை நானே
தீர்மானிக்க முடியவில்லை!

யார் யாரோ தேர்வு செய்கிறார்கள்..
என் நடையை...
எனக்கான படிகளை!

அதற்காக என் கால்கள்
தன் நடப்பை
நிறுத்திக் கொள்வதில்லை!

அதனாலே படிகளில் தடம் மாறிக்
கொள்வதுமில்லை...
மாறாக சற்றே தடுமாறி!

ஏற வேண்டாத படிகளில்
நான் ஏறிய போதெல்லாம்
கசப்பான அனுபவங்களின்
அப்பல்கள்!

அதிலிருந்து மீண்டெழுந்து
இறங்கும்போது மனதில் ஒலிக்கும்
ஆயிரத்தெட்டு சோக கீதங்கள்!

நான் ஏறக்கூடாத படிகளில்
பயணம் செய்தவன் என்ற
முத்திரை வேறெனக்கு!

கூண்டில் அடைத்து வளர்க்கப்படும்
ஒரு பறவையின் வலியை
அப்போதே உணர முடிந்தது!

தூண்டிலில் அகப்பட்டு
நிலத்தில் துடிதுடித்து வீழும்
ஒரு மீனின் வாழ்வை புரிய முடிந்தது!

ஏறினால் இறங்குவதும்
இறங்கினால் ஏறுவதும்
பயணத்தில் மட்டுமல்ல..
வாழ்விலும் கூட!

இப்போது எல்லோருமேறும்
படிக்கட்டுகளில் நான்...அங்கும் சில
கம்பிகளும்.. கூண்டுகளும்!

**- ம.சக்திவேலாயுதம்**
நெருப்பு விழிகள்

## ஹைக்கூ



- உதிரும் பூக்கள்
மணம் பரப்புமோ...?
எறும்பு புற்றுகள் .

- கரை தொடும் அலைகள்
வண்ண விளக்கொளியில் நிறம் மாறும்
புதையும் கால் தடங்கள் .

- மகனின் வரவுக்காய் தாய்
கிராமத்து தெருவைப் பார்த்தபடி
வளர்த்த மாடு .

- உணவளிக்கும் சிறுவன் கையில்
உதிர்ந்து கொண்டிருக்கும்
நாயின் முடி .

**- விஜி சிவா**

# உளவியல் கோளாறுகள்

எமக்கிடையில் மிகமோசமான உளவியல் கோளாறுகள் நிலவுகின்றன. அது ஒட்டுமொத்த சமூக வாழ்க்கையில் பின்னடைவையும் சமூகவியல் பிறழ்வு களையும் உண்டுபண்ண பிரதான காரணியாக அமைந்துவிடுகின்றது.

தன்னளவிலான முயற்சியில் சுய முன்னேற்றம் அடையும் ஒருவனின் வாழ் வியலை கண்டு பெரிதும் பொறாமை கொள்வதோடு அதை ஜீரணித்துக் கொள்ள முடியாமல் தங்களை தாங்களாகவே உளவியல் சித்திரவதைக்கு ஆளாக்கிக் கொள்ளும் பல முகமூடி சமூக ஆர்வலர்களை காணமுடிகின்றது.

உண்மையில் இந்தப்போக்கு வெகுஜன ரீதியிலான முதலாளித்துவ கொள்கையை சார்ந்த பண்பியலாகும். இந்தப் பண்புகொண்ட சமூகத்தில் மதிக்கக் கூடிய மாந்தர்கள் குறித்த சமூகத்தின் புற்றுநோய் கலங்களுக்கு ஒப்பனாவர்கள். இவர்களை அழிப்பது மிகக் கடினமான சமூகவியல் வேலையாக இன்று உணரப்பட்டுள்ளது.

உள்ளூர் தொடக்கம் தேசிய மையநீரோட்டம் வரை இந்தவகையான சாரார்கள் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகின்றனர். குறிப்பாக நாம் வாழும் சூழலில் இந்த மனோவியல் தாக்கத்திற்கு அதிகளவில் உள்ளீர்க்கப் படுபவர்கள் சமூக சேவையாளர்களும், அரசியல் வாதிகளும் என்ற மக்கள் மட்டத்தில் பணியாற்றக்கூடிய தரப்பினர்தாம்.



மேற்படி தரப்பார்களில் கடும்போக்கு நடைமுறைகொண்டவர்களும், மிதவாத போக்குகொண்டவர்களும் காணப்படுகின் றார்கள். எது எவ்வாறோ குறித்த மனப்பாங்கு உண்மையில் சமூகவியல் ரீதியான மற்றும் மானிடவளப் பயன் பாட்டியல் மேலாண்மை ரீதியிலான படுமோசமான விளைவுகளை உண்டு பண்ணும் சக்திகொண்டவை. சமூகப் பணியில் ஒருவருக்கு கிடைக்கும் சந்தர்ப்பம், சூழல் மற்றும் வாய்ப்புகள் என்பன குறித்த நபரின் முயற்சி, முதிர்ச்சி மற்றும் சமூகவியல் அந்தஸ்து, மரியாதை, நம்பிக்கை சார்ந்த விடயங்களை பொறுத்து பன்மைத்துவம் அடைகின்றது என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

''எதை நீ தேடுகிறாயோ! அதுவும்; உன்னை தேடுகிறது'' என்ற Zikra Nawhal இன் மேற்கோளை சுட்டிக் காட்டவிரும்புகின்றேன்.

**இஹ்ஷான் JMI**
பிரதம ஆசிரியர் முத்திதழ்

## உறைந்து போன உணர்வுகள்

மறைந்த நினைவிலே
உறைந்த சிராய்வுகள்
நிறைந்த பதிவிலே
விளைந்த உறவுகள்
ஆசைக் கனவிலே
அழியாத தடயங்கள்
ஓசை அதிர்வுக்குள்
ஒளிந்த இன்பங்கள்

இளமை வனப்பிலே
இதயத் துடிப்புகள்
வழமைக் கடமையில்
வழங்கும் பரிசுகள்
தூரத் தொலைவிலே
தொலைத்த நேசங்கள்
தொங்கும் மனதிலே
மங்கும் எண்ணங்கள்

வாழ்க்கைப் பாதைகளில்
வந்த வழக்குகள்
போக்குச் சாட்டுக்களாய்
போதாத முடிவுகள்
நிலவின் முற்றத்தில்
நீங்கா நினைவுகள்
நெஞ்சம் நிறைந்துள்ள
நீதிக் காட்சிகள்

ஆசை உள்ளத்தின்
ஆனந்த மாற்றங்கள்
பாசப் பிணைப்பிலே
பட்டத் துன்பங்கள்
மாசுகள் குறைந்த
மகிழ்ச்சித் தூறல்கள்
கண்ணின் விழியிலே
காதல் மொழிகள்

உள்ளத்தின் ஆழத்தில்
உறைந்தப் பதிவுகள்
உலகம் இருக்கும்வரை
உணர்வின் அசைவுகள்
உறவுகள் உறைகின்ற
உன்னத உணர்வுகள்
ஓசைகள் அற்ற
ஒருயிர் வார்ப்புகள்

புவனேஸ்வரி சண்
ஹட்டன், இலங்கை

## கலையால் இணைவோம்

சங்க இலக்கியம் படித்திடுவோம்
சங்கீதமும் அழகாய்ப் பயின்றிடுவோம்
இங்கிதமாய்க் கலைகள் அறிந்திடுவோம்
பங்கயமாய் உள்ளம் மலர்ந்திடுவோம்

பாரதியின் கனவில் சிறந்திடுவோம்
பாரினில் புதுமைப் பெண்ணாய்
இருந்திடுவோம்
அச்சம் இனிமேல் துரத்திடுவோம்
இச்சகத்தில் இனிமை விதைத்திடுவோம்

இலக்கியக் கருவூலத்தில் மூழ்கிடுவோம்
இலக்குகள் தெளிவாய்த் தெரிந்திடுவோம்
இதயம் அமைதியில் தெளிந்திடுவோம்
இப்புவியில் சாந்தி வளர்த்திடுவோம்

மூத்த தமிழில் மூழ்கிடுவோம்
மூச்சுக் காற்றில் முடித்திடுவோம்
மூதுரை வாழ்க்கையில் ஏற்றிடுவோம்
மூதறிஞரின் வரிகளை உணர்ந்திடுவோம்

திருக்குறள் திவ்வியம் திளைத்திடுவோம்
திருந்திட இதயங்கள் விரும்பிடுவோம்
ஐம்பெரும் காப்பியம் அறிந்திடுவோம்
ஐக்கியம் பெருமையென வாழ்ந்திடுவோம்

பண்டைத் தமிழின் பண்பறிவோம்
பட்டறிவு நம்மில் பகிர்ந்திடுவோம்
கலைகளின் களஞ்சியம் கண்டறிவோம்
களைகளை வேருடன் களைந்திடுவோம்

இலக்கிய நன்னெறி வழியறிவோம்
இடுக்கண் களைந்திடப் புறப்படுவோம்
இனங்களைக் கலையால்
இணைத்திடுவோம்
இலங்கையின் பிரசையாய்த்
தலைநிமிர்வோம்.

- மக்கொனையூராள்

# அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

கட்டளைக் கலித்துறை

அன்பில் குழந்தையை ஆளும் கடவுளும் அன்னையன்றோ
கன்னல் சுவையினில் கட்டி யணைத்திடும் காவியமே .
என்றும் உலகினில் ஏற்றம் தருகிற ஏணியன்றோ .
மன்றில் மகளென வந்தேன் மனத்தினில் மாட்சிமையே !!

தந்தை நமக்கெனத் தந்திடும் பாசம் தரமிகுமே !
சிந்தை முழுமையும் சீர்மிகும் அன்பு சிறந்திடுமே .
மந்தை மனிதரில் மாசிலா நேசம் மணந்தருமே .
விந்தை உலகினில் வீசிடும் காற்றும் விசித்திரமே !!

மண்ணில் பிறந்தநம் மாதா பிதாவும் இறைவனன்றோ .
கண்ணில் தெரிகிற காவல் புரியும் கருவியன்றோ .
எண்ணம் சிறப்பென எட்டும் வகையில் எமதுயிரே . .
விண்ணில் உலவிடும் விந்தை மனிதம் வியப்புடைத்தே !!

தந்தையும் தாயும் தரணியில் தெய்வம் தமிழெனவே
முந்தையர் வாழும் முதுகுடி நம்மின் முழுமுதலே .
சிந்துவும் கங்கை சிறப்புடை பொன்னி வழியெனவே
உந்திடும் சக்தி உயிரென வாழும் உறவெனவே !!

பண்புடன் நாளும் பரிவாய் மலர்ந்திடும் பாசமன்றோ
அண்டக வாழ்வி லறிவாய் அனுதினம் ஆக்கினரே
மண்டிலம் தன்னில் மலராய் மறுமுறை வேண்டுமன்றோ
உண்டிடும் யாவும் உயிராய் வழங்கிடும் ஊற்றுமன்றோ !!

**சரஸ்வதி பாஸ்கரன்,**
திருச்சி, தமிழ்நாடு



'அ'

# அன்பின் அரிச்சுவடி

## நூல் விமர்சனம்

நூல் வகை :
குழந்தைகள் எழுதிய
முதல் தன்முனைக்கவிதை நூல்
தொகுப்பாசிரியர் :
அன்புச்செல்வி சுப்புராஜ்
பக்கங்கள்: 112
வெளியீடு : நிவேதிதா பதிப்பகம்
விலை : 110/-










''நாளைய சமுதாயம் இளைஞர்கள் கையில்'' என்றார் அப்துல் கலாம். அதனை மெய்ப்பிக்கும் விதமாக இன்றைய குழந்தைகள் தான் நாளைய இளைஞர்கள் என்பதை கருத்தில் கொண்ட கவிஞர். அன்புச்செல்வி சுப்புராஜூ அவர்கள் தன்முனைக்கவிதைகள் என்னும் விதையை குழந்தைகள் மனதில் அன்பின் சங்கமம் சிறுவர் உலகம் மூலமாக விதைத்தார். அந்த விதை இன்று விருட்சமாக 25குழந்தைகள் எழுதிய முதல் தன்முனைக்கவிதை நூல் «அ- அன்பின் அரிச்சுவடி» என்னும் பெயரில் நம் கைகளில் தவழுகிறது.

தமிழின் முதல் எழுத்து 'அ' . தமிழில் 'அ' என்ற எழுத்து மிகவும் சிறப்புடையது. ஒரு குழந்தை முதன்முதலாக எழுத ஆரம்பிக்கும் பொழுது 'அ' என்று தான் எழுத வைப்பார்கள். அதுபோல் நம் வாழ்வில் 'அ' என்ற எழுத்தில் ஆரம்பித்து கல்வியை நமக்கு அறிய வைத்த ஆசிரியரையும் மறக்க முடியாது.

அ - அன்பு, அரவணைப்பு, அச்சம், அர்ப்பணிப்பு, அழுகை இப்படி நவரசங்களும் நிறைந்து. இவ்வளவு சிறப்புகள் கொண்ட எழுத்தில் இந்த புத்தகம் வந்திருப்பது மிகச் சிறப்பு.

இதில் கவிதைகள் எழுதிய 25 குழந்தைகளும் அன்பு, இயற்கை, சமூகம், கொரோனா,. ஆசிரியரின் கனவு, நாம் மறந்து போன பழங்கால நினைவுகள், ஒற்றுமை, சுதந்திர உணர்வு, பாரம்பரியம், சுகாதாரக்கேடு... பல வகையான உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாக கவிதைகளை வடிவமைத்து உள்ளார்கள் என்பது இந்நூலின் மற்றுமொரு சிறப்பாகும்.

கொரோனா என்ற ஒரு பெரும் தொற்று மனித வாழ்க்கையில் ஏற்படுத்திய நிகழ்வுகள் ஏராளம். இதனை சு.பிரவந்திகா பார்க்கும் விதம் இந்த சுதந்திர பூமியில் சுதந்திரமாகக் காற்றைக் கூட சுவாசிக்க முடியவில்லை என்று கூறும் வரிகள் மிகவும் வலி நிறைந்தது. அதுபோல் கோ.மகிழினி கூறும் வரிகளில் குழந்தைகளுக்கு சுதந்திரம் கிடைத்தது. பள்ளிக்கு செல்லாததால் ஒழுக்கம் இல்லாமல் போய் விட்டது என்று கூறுகிறார் இது மிகவும் உண்மையானது....இவர்கள் இருவரின் கவிதை வரிகள் இதோ....





ஓடி விளையாடுவதற்கு
துணையுடன் செல்கிறோம்
விளையாடும் வாய்
கவசத்தால் மூடியிருக்கிறது.

**சு. பிரவந்திகா**

கொரோனா வந்ததால்
சுதந்திரம் கிடைத்தது
பள்ளிக்குச் செல்லாததால்
ஒழுக்கம் கெட்டது.

**கோ.மகிழினி**



தந்தையின் பாசத்தை இதை விடச் சிறப்பாக யாரும் சொல்ல முடியாது. வீட்டில் எப்பொழுதும் நம் கூடவே இருக்கும் அம்மா கூட குடும்பத்திற்காக தான் படும் கஷ்டத்தை சில நேரங்களில் நம்மிடம் கூறி விடுவார்கள். ஆனால் ஒரு தந்தை ஒரு பொழுதும் தன் வலிகளை வெளிக்காட்ட மாட்டார் என்பதை உணர்த்தும் விதமாக சரவணபாண்டியன் அவர்களின் கவிதை அமைந்து இருந்தது மிகச் சிறப்பு.. அவரின் கவிதை வரிகள் இதோ....



குழந்தைகளின் மகிழ்ச்சிக்கு
அப்பா உழைத்தார்
தன் வலிகளை
மறைத்துக் கொண்டு......

**பா.பு. சரவணபாண்டியன்**



இயற்கையைப் பற்றிய ஒவ்வொரு குழந்தைகளின் கவிதைகளும் பல கருத்துக்கள் நிறைந்ததாகவும் பல சிந்தனைகளை உள்ளடக்கியதாகவும் அமைந்து இருந்தது மிகச் சிறப்பு. மழையைப் பற்றி பூங்குழலி அருள்பாலன் கூறும் பொழுது மழையை இரசிக்க முடிந்தவரால் அதில் நனைய முடியவில்லை. அந்த வருத்தத்தை போக்க அதில் காகித கப்பல் விட்டு மனதை தேற்றிக் கொள்கிறார். அடுத்ததாக அனிஸ்குமார் இயற்கையைப் பற்றி கூறும் பொழுது மரங்கள் நிறைந்து இருப்பதால் பாட்டி வீட்டிற்கு செல்லப் பிடித்து











இருக்கிறது எனக் கூறுகிறார் .வானத்தில் பல வகையான நிகழ்வுகள் நடந்து கொண்டு இருக்கும் நேரத்தில் வானத்தில் மேகங்களுக்கு இடையே எட்டிப் பார்க்கும் நிலாவை அதற்கு நட்சத்திரங்களுடன் திருவிழா நடப்பது போல் கற்பனை செய்து கூறும் க.ம. அல்வாஃபிகாவின் கவிதை மிகச் சிறப்பு. அடுத்ததாக கௌதம் பாலாஜி அவர்கள் இயற்கையை நமக்கு எல்லா வளத்தையும் தரும் தாய் என்று கூறிவிட்டார் மிகச் சிறப்பு கண்ணா. சாய்ஸ்ரீநிதி மழை நேரத்தில் தவளை போடும் சத்தம் இரவு நேரத்தில் அமைதியானச் சூழலில் ஒருவித பயத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்துகிறது என்பதை மிக அழகாகக் கூறியுள்ளார்.. ஒவ்வொரு வீட்டிலும் நடக்கும் சுப நிகழ்ச்சிகளை உணர்த்தும் விதமாகக் வீட்டு வாசலில் வாழை மரம் உயர்ந்து இருக்கும். தலைமுறை வாழையடி வாழையாக வளர வேண்டும் என்பதற்காகவும் வாழை மரம் கட்டுவார்கள் என்பதை உணர்த்தும் விதமாக ரமேஷ் குமார் ஸ்ரீவிகாஷ் - ன் கவிதை அமைந்து இருந்தது மிகவும் பாராட்டுக் கூறியது. இந்த உலகில் காற்று இல்லாமல் எந்த உயிரும் உயிர் வாழ முடியாது எனவே காற்றை நமக்கு தரும் இயற்கையை காக்கக் வேண்டும் என்பதை உணர்த்தும் விதமாகவே தோ. ம. மோனிகாவின் கவிதை அமைந்து இருப்பது மிகவும் அற்புதம்....இவர்கள் ஏழு பேர்களின் கவிதை முத்துக்கள் இதோ.....

பொழியும் மழை
நனையாமல் ஏக்கத்துடன் பார்க்கிறேன்
காகிதக் கப்பலை விட்டு
சமாதானம் அடைகிறேன்......

**பூங்குழலி அருள்பாலன்**

மரங்கள் நிறைய
இருப்பதால் பிடிக்கிறது
கிராமத்தில் இருக்கும்
பாட்டி வீடு......

**பா. அனிஸ்குமார்**

குட்டிமேகங்கள் இடையே
எட்டிப்பார்க்கும் நிலா
நட்சத்திரங்களுடன் இணைந்து
நடக்கிறது விழா...

**க.ம. அல்வாஃபிகா**



சூரியனை சுற்றும்
நீலவண்ணப் பூமி
இயற்கை வளங்களை
அள்ளித்தரும் தாய்..

**கௌதம் பாலாஜி**

கொட்டும் மழை
சத்தமிடும் தவளை
இரவு நேரத்தில்
பயம் தருகிறது..

**சாய்ஸ்ரீநிதி**





பிறர் வாழ
தன்னை இழக்கும்
வாழையடி வாழையாய்
வாழும் வாழைமரம்....

**ரமேஷ் குமார் ஸ்ரீவிகாஷ்**



இயற்கையான மரம்
பசுமையைத் தரும்
இலவசமாகக் காற்று
கொடுக்கும் வரம்..

**தோ.ம. மோனிகா**



ஒரு மனிதனுக்கு எப்பொழுதும் அவன் செய்யும் தொழில் தான் முதல் தெய்வம். குப்பைகளை நம்மிடம் இருந்து வாங்கி செல்லும் தொழிலாளி குடிக்க தண்ணீர் கேட்டால் கூட சிலர் தருவது கிடையாது. குப்பைகளை மக்கும் குப்பை மக்காதக் குப்பை என பிரித்து தான் தர வேண்டும் என அரசாங்கம் அதனை சிலர் மொத்தமாக நெகிழிபையில் போட்டு தந்து விடுகிறார்கள் அதனை பிரிக்கும் ஒவ்வொரு வரும் நம்மை போல சக மனிதன் தான் என்பதை உணர்த்தும் விதமாக தா.உ. ஜான்வி அவர்கள் தூய்மை பணியாளர் பற்றி எழுதிய கவிதை அமைந்து இருந்தது மிகச் சிறப்பு. அவரின் கவிதை வரிகள் இதோ..

வீசியெறிந்த குப்பைகளைத்
தரம் பிரித்தனர்
தூய்மைப் பணியாளர்களின்
சேவை வலித்தது.

**தா.உ. ஜான்வி**



மாறி வரும் குடும்பம் சூழ்நிலைகளில் நாம் மறந்து போன பல நினைவுகள் மற்றும் விளையாட்டுகளை நம் கண் முன்னே கொண்டு வருகிறது தா.உ. பூர்வி மற்றும் சாய்ஹரிணி எழுதிய கவிதைகள் மிக அருமை. அவர்களின் கவிதை வரிகள் இதோ....



குடும்பத்தோடு அமர்ந்து
நிலாச்சோறு
உண்ட அனுபவம்
மகிழ்வைத் தந்தது

**தா.உ. பூர்வி**



சொப்புச் சாமான்களில்
சமைத்து தந்தேன்
சுவைத்தவர்கள்
அருமை என்றார்கள்
செ.சாய்ஹரிணி



ஒற்றுமைக்கும் சுறுசுறுப்புக்கும் இலக்கணமாக மனிதர்கள் எப்பொழுதும் குறிப்பிடுவது எறும்பைத்தான். மழைக் காலத்திற்காக வெயில் காலத்தில் உணவை சேமிக்கும் உழைப்பாளி எறும்பு அதை நினைவுப் படுத்தும் விதமாக ஜீ. மைத்ரேயீ அவர்களின் கவிதை அமைந்து இருந்தது. அவரின் கவிதை வரிகள் இதோ...

சாரை சாரையாய்
செல்லும் எறும்பு
சுறுசுறுப்பாய்
உழைக்கும் எறும்பு
ஜீ.மைத்ரேயீ



ஒரு சில விஷயங்கள் செய்யக்கூடாதவை என்று தெரிந்தும் மனிதன் அதனை செய்து கொண்டு தான் இருக்கிறான். இதனை உணர்த்தும் விதமாக கமல் சங்கர் எழுதிய கவிதையில் நெகிழியை ஒழிக்க நிறைய விளம்பரங்கள் வந்ததாலும் அது ஒழியவில்லை. மனிதன் அதன் உபயோகத்தை தவிர்க்கவும் இல்லை என்பதை கூறியது மிகச் சிறப்பு. அவரின் கவிதை வரிகள் இதோ.....

நெகிழி மண்ணுக்குக்கேடு
விளம்பரம் வந்தது
கடைக்கு செல்ல
கையில் நெகிழி
செ.ப.கமல் சங்கர்



நம் தாய்த்திருநாடு சுதந்திரத்தை பெற நிறைய தியாகிகள் இரத்தம் சிந்தி இருக்கிறார்கள். அவர்களின் கூட்டு முயற்சியால் நாம் இன்று சுதந்திரத்தை அனுபவித்து கொண்டு இருக்கிறோம். இதை எந்த ஒரு இந்திய குடிமகனும் மறக்க கூடாது என்பதை உணர்த்தும் விதமாக ஸ்ரீலேகாவின் கவிதை வரிகள் அமைந்து இருப்பது மிக அற்புதம்... அவரின் கவிதை முத்துக்கள் இதோ..



அன்று தியாகிகள்
சிந்திய இரத்தம்
இன்று சுதந்திர நாட்டில்
மகிழ்ந்து இருக்கிறோம்
செ. ஸ்ரீலேகா

அடுத்ததாக சமூக உணர்வை தூண்டும் விதமாக விவசாய நிலத்தை அழித்து அதில் அடுக்கு மாடி வீடு கட்டும் மனிதன் தான் மாடி தோட்டம் அமைத்து நிலத்தில் இயற்கையாக கிடைப்பவற்றை மாடியில் பெற முயற்சிகின்றான். என்று கூறும் பா.நித்யாவின் சமுகம் சார்ந்த பார்வை மிகச் சிறப்பு. அவரின் கவிதை வரிகள் இதோ...

நிலங்களை அழித்து
அடுக்குமாடி கட்டினோம்
மாடிமேல் ஏங்குகிறது
அழகிய மாடித்தோட்டம்

**பா.நித்யா**

அம்மாவின் அன்பு அளவிட முடியாதது. அந்த அன்புக்கு என்ன பரிசு தரலாம். அவரின் குழந்தை தரும் முத்ததை விட சிறப்பான பரிசு அவருக்கு வேறு எதுவாக இருக்க முடியும். என்பதை உணர்த்தும் விதமாக அமைந்து இருந்தது நேகாவின் கவிதை. அடுத்ததாக

ஹெர்மஸ் ஜெஸ்வின் அவர்கள் அம்மாவை பற்றி கூறும் பொழுது குழந்தைகள் எல்லொருக்கும் மழையில் நனைய மிகவும் பிடிக்கும். நனைந்தவுடன் அம்மா திட்டுவார்களே என்ற நினைப்பும் சேர்ந்து வந்து விடும் என கூறுவது மிக அற்புதம். அடுத்ததாக இரயில் ஓடும் பொழுது வரும் சத்தத்தை அதன் அசைவை அம்மாவின் தாலாட்டுடன் ஒப்பிடுகிறார் யூவிஸ் டெல்வின் அவர்கள் மிகச் சிறப்பு கண்ணா. இவர்கள் மூவரின் கவிதை வரிகள் இதோ...

அம்மாவிற்கு என்ன
பரிசு தரலாம்
அழகு முகத்தில்
அன்பு முத்தம்

**ஜெ.சி.நேகா**

மழையில் நனைந்தேன்
மகிழ்ச்சி கொண்டேன்
அம்மாவை நினைத்தேன்
அச்சத்தோடு நின்றேன்.

**ஹெர்மஸ் ஜெஸ்வின்**

தொட்டில் நித்திரையாய்
இரயில் பயணம் சுகமானது
அம்மாவின் தாலாட்டாய்
இரயிலின் சத்தம் கேட்கும்

**யூவிஸ் டெல்வின்**

நாம் ஒரு செயலை செய்ய நினைக்கும் பொழுது பலவிதமான கவனச்சிதறல்கள் வரும். அதனை உணர்த்தும் விதமாக பட்டாம்பூச்சி கூட நம் கவனத்தை சிதறடிக்கும் என்பதை மு.அமீனா ரிஜ்வான் அவர்கள் சிறப்புற கூறியுள்ளார்... அவரின் கவிதை வரிகள் இதோ...

கவிதை எழுத
தாளுடன் அமர்கிறேன்.
எழுத விடாமல்
எதிரில் பட்டாம்பூச்சி

**மு.அமீனா ரிஜ்வான்**

நாளைய சமுதாயத்தை உருவாக்கு பவர்கள் ஆசிரியர்கள். அந்த ஆசிரியர் நேரம் கருதி வேகமாக எடுக்கும் பாடங்கள் மாணவர்களுக்கு புரிவது இல்லை என்பதை விளக்கும் விதமாக அமைந்து இருந்தது மு.ஆஃபினா ரிஜ்வான் அவர்களின் கவிதை. அடுத்தப் படியாக ஆசிரியர் தரும் ஊக்கத்தினால் வீட்டுப்பாடம் கூட எளிதானது என்பதை உணர்த்தும் விதமாக ஷமீஹா ஷம்ரின் யாகூப் அவர்களின் கவிதை அமைந்து இருந்தது. வகுப்பறையில் ஆசிரியர் வர தாமதம் ஆகும் நாமே ஆசிரியராக மாறி பாடம் நடத்துவது அவர் வரும் ஓசை கேட்டதும் எழுதியதை கரும்பலகையில் இருந்து அழித்து விட்டு வந்து தன் இடத்தில் எதுவும் தெரியாதது போல் அமர்ந்து கொள்வது இதனை எடுத்துரைக்கும் விதமாக அமைந்து இருந்தது ஷஸ்மியா பாத்திமா யாகூப் அவர்களின் கவிதை. இவர்கள் மூவரின் கவிதை துளிகள் இதோ....

அமைதியாக அசையாமல்
அமர்ந்திருக்கும் மாணவர்கள்
ஆசிரியர் நடத்திய பாடம்
எதுவும் புரியவில்லை.

**மு.ஆஃபினா ரிஜ்வான்**

வீட்டுப்பாடம் வேகமாக
எழுத வைத்தது
ஆசிரியை கொடுக்கும்
நட்சத்திர மதிப்பெண்

ஷமீஹா ஷம்ரின் யாகூப்

ஆசிரியை வருவதற்குள்
கரும்பலகையில் அழிந்து விடும்
ஆசிரியையாக நான்
நடித்து எழுதிய பாடம்.

ஷஸ்மியா பாத்திமா யாகூப்

''தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா»!'' இந்த வரிகளை நினைவு கூறும் விதமாக தமிழனின் பெருமையை பறைசாற்றுவது நம் பாரம்பரியம், கலை, பண்பாடு. நம் வீரத்தை பறைசாற்றும் விதமாக அமைந்து இருப்பது நம் தற்காப்பு கலையான சிலம்புக்கலை. இதனை வெளிப்படுத்தும் விதமாக தமிழ் இனியன் கவிதை அமைந்து இருந்தது மிகச் சிறப்பு. அவரின் கவிதை வரிகள் இதோ...

குச்சியை சுற்றினால்
எதிரி பயந்து ஓடுவான்
தற்காக்கும் சிலம்பக்கலை
தமிழரின் பாரம்பரியம்

செ. தமிழ் இனியன்

இந்நூலில் 25 குழந்தைகளும் எழுதிய அனைத்து கவிதைகளுமே அருமை. அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

இந்நூலுக்கு தன்முனைக்கவிதையின் தந்தை கவிச்சுடர் க. நா. கல்யாணசுந்தரம் ஐயா மற்றும் கவிஞர் அனுராஜ் ஐயா இருவரும் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார்கள். கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி, கவிஞர் விஜயகல்யாணி சுபாஷ், அன்பின் சங்கமம் சிறுவர் உலகம் தலைவர் சு. சுப்புராஜூ ஐயா இவர்கள் எல்லாம் வாழ்த்துரை மிகவும் சிறப்புடையது. அதுமட்டுமல்லாமல் இந்நூலின் இறுதியில் பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் எழுதிய வாழ்த்து கவிதைகளும் இடம் பெற்று உள்ளது மிகச் சிறப்பானதொன்றாகும். இவ்வளவு சிறப்புகள் மிகுந்த நூலினை நிவேதிதா பதிப்பகம் தேவகி இராமலிங்கம் அவர்கள் அச்சிட்டு நம் கைகளில் தந்துள்ளார்கள்.

இந்த இடத்தில் இந்நூலுக்காக உழைத்த இந்நூலின் தொகுப்பாசிரியர் கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜூ அவர்களைப் பற்றி அவசியம் கூற வேண்டும். கவிதை உலகில் ஹைக்கூ, புதுக்கவிதை என்பது பலருக்கும் தெரியும். அதுபோல தன்முனைக்கவிதைகளும் பேசப்பட வேண்டும் என்று நினைத்த அன்புச்செல்வி அம்மா தன் தன்முனை படைப்பாளர் பேரவை என்ற புலனக்குழுவில் கவிதைகள் எழுதி வந்த 25 பெண் படைப்பாளர்களை கொண்டு முதல் பெண்கள் தொகுப்பு நூலான மகரந்தம் தூவும் மலர்களை சென்ற ஆண்டு மார்ச் 8ம் தேதி மகளிர் தினத்தன்று கொண்டு வந்தார். அதன்பின்பு அன்பின் சங்கமம் சிறுவர் உலகம் புலனக்குழு வழியாக பெற்றோர் மற்றும் குழந்தைகளுக்கு தன்முனைக்கவிதை எழுத பயிற்சி அளித்து வருகிறார். அதில் 25 குழந்தைகள் எழுதிய தன்முனைக்கவிதைகளை அன்னையர் தினமான மே 8 ம் தேதி வெளியீட்டு விட்டார். அடுத்தாக இந்த குழந்தைகளின் பெற்றோர்கள் எழுதிய மற்றும் எழுதிக் கொண்டு இருக்கும் கவிதைகளையும் அடுத்த தொகுப்பு நூலாக நிச்சயம் கொண்டு வருவார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இவரின் பணி தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.....

**லக்ஷ்மி செந்தில்**
சென்னை



# நிலன் நவிலன்

**சு. பிரவந்திகா**
சென்னை - 72



நிலன், நவிலன் இரண்டு பேர் களோட அப்பாவும் மதுரைல ஒரே இடத்தில் வேலை பார்த்து வந்தாங்க. மேலமாசிவீதியில பக்கத்து, பக்கத்து வீட்டில இருந்தாங்க.

இரண்டு பேர்களோட குடும்பமும் நெருங்கிய நட்பா பழகுனாங்க. நிலனும், நவிலனும் சாப்பிடறது, விளையாடுறது எல்லாமே ஒன்னாவே பண்ணுவாங்க. ஒரே பள்ளிக்கூடத்தில படிச்சாங்க. தூங்குற நேரந்தவிர எப்பவும் ஒன்னாவே இருப்பாங்க. ஒருத்தர் இல்லாம ஒருத்தர பார்க்கவே முடியாது.

இப்படி இருக்கும் போது ஒருநாள் நிலனோட அம்மா, அப்பாவும், நவிலனோட அம்மா, அப்பாவும் தோட்டத்துல உட்கார்ந்து ஏதோ பேசிக்கிட்டே இருந்தாங்க. நிலனும், நவிலனும் விளையாண்டு முடிச்சிட்டு வீட்டுக்குப் போனதும் அவங்க பேசுறது கேட்டு அழுக ஆரம்பிச்சிட்டாங்க.

காரணம் என்னன்னா நிலன் அப்பா வேலை பார்க்கிற இடத்தை சென்னைக்கு மாத்திட்டாங்க. அதனால நிலன் குடும்ப த்தோட சென்னைக்கு போகணும். அதான் நிலனும், நவிலனும் அழுதுட்டாங்க.

ஐந்து நாள்களில் நிலனும், அவ னோட குடும்பமும் சென்னைக்கு கிளம்பி போயிட்டாங்க. அதற்கடுத்த சில நாள்கள் அழுதுகிட்டே இருந்த நவிலனும், நிலனும் போகப்போக அழுகைய நிறுத்திட்டாலும் ஒருத்தரை ஒருத்தர் மறக்காம நெனைச்சிக் கிட்டே இருந்தாங்க .

ஐந்து வருசம் கழிச்சு நவிலனோட அப்பாவுக்கும் சென்னைக்கு மாற்றல் வந்தது. நவிலனுக்கு நிலனைப் பார்க்கப் போறோம்னு ஒரே மகிழ்ச்சி. சென்னை போனதும் “நிலனோட வீடு எங்கப்பா” னு அப்பாகிட்ட கேட்டான்.

“தெரியல நவிலா, விசாரித்து சொல்றேன்'' அப்பா சொன்னதும் “எப்படியாவது கண்டுபிடிச்சிடலாம் அப்பா” நம்பிக்கையோட பதில் சொன்னான் நவிலன்.

கொஞ்ச நாள்ல நவிலன புதுப் பள்ளிக்கூடத்துல சேர்த்தாங்க. அங்கு நிலனப் பார்க்கணும் அப்படிங்கிற ஆர்வத்துல ஒவ்வொரு வகுப்பா போய் தேடினான். உணவு இடைவேளை, சிற்றுண்டி இடைவேளை எல்லாம் தேடியும் நவிலனால நிலனைப் பார்க்கவே முடியலை.

ஒருநாள் காலைல சீக்கிரமே வந்த நவிலன் பள்ளி மைதானத்தில் இருந்த மரத்தடியில் உட்கார்ந்து இருந்தான். அப்ப அவன் தோளை ஒரு கை பிடித்து அசைத்தது. திரும்பிப் பார்த்தால் அங்கு நிலன் நின்றிருந்தான்.

நிலனைப் பார்த்ததும் ‘‘டேய்... நிலா” மகிழ்ச்சியோட எழுந்தான் நவிலன்.

“எப்படா மதுரை வந்தீங்க” நிலன் கேட்க

“ஒரு வாரமாச்சு, உன்னைத்தான் பார்க்க முடியலை'' நவிலன் பதில் சொன்னான்.

“அதுவாடா, கொஞ்சம் உடம்பு சரியில்லை, அதான்டா பள்ளிக்கு வரலை. உன்னைப் பார்த்துட்டேன்ல... இனிமே எப்போதும் சரியா இருக்கும் நவிலா” நிலன் சொன்னதும் இரண்டு நண்பர்களும் மகிழ்வுடன் வகுப்புக்கு போனார்கள். ■

# டியானும் - கியானும்



ஒரு காட்டுல ஒரு அம்மா குருவியும் அப்பா குருவியும் இருந்துச்சாம். அதுக்கு ரெண்டு பெண் குட்டி குருவிகள் இருந்துச்சாம் அந்தக் குருவிகளோட பெயர் என்னன்னு தெரியுமா? டியான் மற்றும் கியான். டியானும், கியானும் பக்கத்துல இருக்குற பள்ளிக்கு தினமும் படிக்கும் போவாங்களாம். குருவிங்க இரண்டும் எப்போதும் எல்லோருடனும் தோழமையோடு இருக்குமாம். ஒருநாள் அதோட வகுப்புல புதுசா ஒரு மாணவர் சேர்ந்துதாம் அது யாரு தெரியுமா? அது ஒரு முள்ளம்பன்றி அதோட பேரு பூபா. வகுப்பாசிரியர் ஒட்டகசிவிங்கி பூபாவை அங்க இருக்குற எல்லாருக்கும் அறிமுகப்படுத்தி வச்சாங்களாம். ஆனா வகுப்பில் இருக்கிற அத்தனை மிருகங்களும் அந்த முள்ளம்பன்றியை தன்னோட பக்கத்துல உட்கார வச்சுக்க தயங்கினார்கள். பூபாவுக்கு ரொம்ப வருத்தமாயிடுச்சு. அதை பார்த்ததும் டியானும் கியானும் தன்னோட பக்கத்துல உட்கார பூபாவுக்கு இடம் கொடுத்தாங்க. பூபாவுக்கு ரொம்ப சந்தோஷமாயிடுச்சு. அது குருவிகளுக்கு நன்றி சொல்லிட்டு அதோட பக்கத்திலேயே ரொம்ப சந்தோசமா உட்கார்ந்தது. அதிலிருந்து மூன்று பேரும் நல்ல நண்பர்கள் ஆயிட்டாங்க.

அப்படியே ஒரு ரெண்டு வாரம் போச்சு, அதுக்கு அடுத்த நாள் பூ பாவோட பிறந்தநாள். டியானும் கியானும் பூபாவுக்கு ஒரு நல்ல பிறந்தநாள் பரிசு குடுக்கணும் ன்னு முடிவு செஞ்சாங்களாம். என்ன செஞ்சாங்க தெரியுமா? ஸ்பான்ஜ்ஜை சின்னச் சின்ன துண்டா வெட்டி அழகா ஒரு டப்பாவில் போட்டு அலங்கரிச்சு மேலே "இனிய பிறந்த நாள் வாழ்த்துகள் பூபா" னு எழுதி வச்சாங்க.

பூபாவின் பிறந்த நாளும் வந்தது. வகுப்பிலே எந்த நண்பர்களும் பூபாவிற்கு வாழ்த்து சொல்லவேயில்லை. பூபாவுக்கு ரொம்ப வருத்தமாயிடுச்சு. அப்ப தான் டியானும் கியானும் பூபாவிற்கு பிறந்த நாள் வாழ்த்து சொல்லி அவங்க கொண்டு வந்த பரிசை கொடுத்தாங்க. பரிசை பிரித்து பார்த்த பூபாவுக்கு ஒன்னுமே புரியலை. டியானும் கியானும் டப்பாவிலிருந்த ஒவ்வொரு ஸ்பான்ஜா எடுத்து பூபாவோட முதுகுல இருக்கிற முட்கள் மேலே குத்தி விட்டாங்க. அப்புறம் பூபாவை கட்டி பிடிச்சு பிறந்த நாள் வாழ்த்து சொன்னாங்க. இப்ப பூபாவோட முட்கள் யாருக்கும் குத்தாது. டியானையும் கியானையும் பார்த்த மத்த நண்பர்களும் பூபாவை கட்டி பிடிச்சு பிறந்த நாள் வாழ்த்து சொன்னாங்க. பூபாவிற்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. டியானுக்கும் கியானுக்கும் நன்றி தெரிவிச்ச பூபா எல்லோருடனும் சந்தோஷமாக பிறந்த நாளை கொண்டாடியது. அன்னைக்கு மட்டுமில்லாம மற்ற எல்லா நாளும் வகுப்பில் எல்லாரும் நண்பர்களாய் ஒத்துமையாய் இருந்தாங்க.

மையக்கருத்து - யாரையும் அவர்கள் உருவத்தை வைத்து நாம் வெறுக்க கூடாது.



**ர.கீர்த்தனா**
ஏழாம் வகுப்பு
*அம்பத்தூர்,
சென்னை



## நன்றி சொன்ன காகம்

காகம் ஒன்று பறந்து வந்து
மரத்தில் அமர்ந்தது
பசித்த வயிறு சத்தமிட
சோர்ந்து இருந்தது
தூரத்தில் வரும் சிறுவன் கையில்
தின்பண்டம் இருந்தது
சிறுவன் கையில் உணவை
காகம் பார்த்தது
பறந்து சென்று உணவைப்
பறிக்கத் திட்டம் போட்டது

மரத்திலிருக்கும் காகத்தை
சிறுவனும் பார்த்தானே
கையில் இருக்கும் தின்பண்டத்தை
பாதி எறிந்தானே
கா கா கா என்று அழைத்தே
உணவை தந்தானே

சிறுவனின் செயலைப் பார்த்து
காகம் மகிழ்ந்தது
தட்டிப் பறிக்க நினைத்ததை
எண்ணி வருந்தியது
பறந்து வந்து காகமும்
உணவை உண்டது
கா கா கா என்று சத்தமாய்
சிறுவனுக்கு நன்றி சொன்னது

**ஜனனிகுமார்**
நாகப்பட்டினம்

தன்முனைக் கவிதைகள்..

## பஞ்சபூதம்

வீட்டையும் கட்டிடத்தையும்
தாங்குகிறது பூமி
தன்னை தோண்டினாலும்
பொறுத்துக் கொள்கிறது
•
தூய்மையாய் ஓடும்
ஆற்று நீர்
தெரிந்தே குப்பைகளை
வீசும் மனிதர்கள்
•
எங்கெங்கும் நாடோடியாய்
சுற்றிவரும் காற்று
புயலாகவும் தென்றலாகவும்
உலவுகிறது மனிதர்களிடையே...
•
எல்லைகள் இல்லாத
பரந்த வானம்
பகலிலும் இரவிலும்
வெவ்வேறு நிறங்களில்
•
தெறித்திடும் கோபம்
தீயைப் போல அச்சமூட்டும்
பேரழிவை ஏற்படுத்தும்
சிறு பொறியும்
•

**பா.பு.சரவண பாண்டியன்**
ஏழாம் வகுப்பு,
நாகை.





## பெண் எழுத்தாளர்

# கனகா பாலன்

தென்காசி மாவட்டம் வெள்ளாகுளம் ஊரில் பிறந்து தற்போது சென்னையில் வசித்து வருகிறார். கனகா பாலன்.இவர் கல்வித்துறை பற்றிக் குறிப்பிடு கையில் ஆசிரியர் பட்டதாரி, இஞ்சினியரிங் பட்டதாரி என பட்டங்கள் முடித்தாலும் தற்போது இல்லத்தரசியாக வாழ்ந்து வருகிறார்.

இவர் முகநூல் வழியாக 2017 ஆம் ஆண்டு எழுதத்தொடங்கியதாக கூறினார். பொழுது போக்கிற்காகவும், மனமாற்றத்திற்காகவும் தேர்ந்தெடுத்த வழிகளில் இதுவும் ஒன்று எனவும் எப்போதும் இத்தனை பேர் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார்களா? என்பதை ஆச்சர்யமாகக் காட்டியது தனது உள்ளங்கையில் தவழ்ந்திருந்த கைபேசி. அதன் மூலமே இவருக்கும் தொடர்ந்து எழுத வேண்டுமென இலக்கியத்தில் ஆர்வம் வந்ததாக குறிப்பிட்டார்.

தலையும் புரியாமல் வாலும் புரியாமல் திக்கித் திணறி கற்றுக் கொண்டதில் விருப்பீடு தொடங்கி தனிப் பதிவு போடும் அளவுக்கு இரண்டு மூன்று மாதங்களில் கவிதை எழுத தெரிந்து கொள்ள முடிந்தது. நல்ல மனிதர்களை அடையாளங்காட்டி இன்றளவும் தன்னை உலகுக்கு வெளிக்காட்டிக் கொண்டிருப்பது முகநூல் எனவும் அங்குதான் தனது எழுத்துப் பயணம் தொடங்கியது என்பதையும் பெருமையாகவே கூறுவேன் எப்போதும் நான் எனக் குறிப்பிட்டார்.

இதுவரையில் இலக்கியத்துறையில் நிறைய மேடைகளில் நிறைய சான்றிதழ்கள், எண்ணற்ற போட்டிகளில் பரிசுகளைப் பெற்றதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் இவர் ஆனந்தவிகடன், கணையாழி, கல்கி, வாரமலர், ராணி, இன்னும் பல மாத வார இதழ்களில் தனது கவிதைகளும், சிறுகதைகளும் வெளிவந்துள்ளதாக குறிப்பிட்டார்.

இவர் நூல் வெளியீடு பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்.

- "என் கனா யாழ் நீ"
- "அகயாழின் குரல்"
- "உன் கிளையில் என் கூடு "

என்ற மூன்று கவிதை நூல்களும், சமீபத்தில் சிறுகதை நூலொன்று வெளியிட இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் கவிதை என்பது நம்மை பாதித்த அல்லது நம்மை மகிழ்வித்த ஒன்றுக்கு சொற்களையிட்டு நிரப்பி எல்லோருக்கும் பகிர்ந்தளிக்க விரும்பி, அதை எழுத்தின் வழி ஆக்குதல் தான் கவிதை எனக் கூறுகிறார்.

எதையோ பொருள்கொண்டு கவிதை வடித்திருப்பான் கவிஞன். ஆனால் வாசிப்பவனின் மனநிலைக்கு ஏற்றவாறு பொருந்திப் போகும் வித்தை, ஒரு சிறந்த கவிதையொன்றே தானறியும் எனவும் சமூகம் சார்ந்து எழுதும் கவிதைகள், காலத்திற்கும் நின்று பேசுமென்பது தன் கருத்து எனவும் குறிப்பிடுகிறார்.

மேலும் கவிதையில் எத்தனையோ

வகைகள் இருக்கின்றன. வாசிப்பவனின் உணர்வினை சிறிதேனும் அசைத்துப் பார்க்கும் கவிதைகள்தான் இன்று விரும்பப் படுகின்றன எனவும் அழகுச் சொற்களை மட்டும் வைத்துக்கொண்டு உட்பொருளின்றி எழுதப்படும் கவிதைகள் அந்நேரத்து ரசனை அவ்வளவே நிலைத்து நிற்காது எனவும் கூறுகிறார்.

எளிதில் அதே போல் புரியாதது போல் கவிதை எழுதுதல் தான் சிறந்த கவிதையென்று மார்தட்டிக் கொள்ளும் கூட்டமும் உண்டு. புரிவதற்கு சிரமப்படும் கவிதைகள் வாசிப்பவனுக்கு ஒரு வித சலிப்பை உண்டாக்கி கடந்து போகச் செய்துவிடும் எனக் குறிப்பிடுகிறார்.

உட்கார்ந்து பேசக்கூட நேரமில்லாத மனிதர்கள். ஒரு கவிதை புரியும்வரை நேரம் செலவழித்து மீண்டும் மீண்டும் வாசிக்கப் போகிறார்களாயென்ன?

பாரதி சொன்னது போல் பாமரனும் புரிந்து கொள்ளும் படியாக உள்ள கவிதை காலத்தை வெல்லும் என்பது நானறிந்த உண்மை எனக் கூறுகிறார்.

மேலும் எழுத்துத் திறனைத் தாண்டி எத்தனை விருப்பீடு, கருத்திடு விழுகிறது, அதைப் பொறுத்தால் அவன் பிறரால் திரும்பிப் பார்க்கப்படுகிறான் எனவே சவால்களை கடந்து செல்லுங்கள் எனக் கூறுகிறார்.

இவர் இலக்கியத்துறையில் சந்தித்த சவால்கள் பற்றிக்கேட்ட போது இவ்வாறு தெரிவித்தார்.

தான் பெண் என்பதால்தான் வரவேற்பு கிடைத்ததே தவிர கவிதைக்கல்ல என பலர் கூற ஓஹோ, இப்படியா சொல்கிறீர்கள், எனது எழுத்தே இனி பேசுமென உள்மனச் சவாலோடு ,புதிதாக வேறொரு ஐடி உருவாக்கி ,பெயரும் மாற்றி, முகப்பு படமின்றி எழுத்துக்கள் மட்டுமே என் பலம் என்று வேட்கை கொண்டு எழுதினேன். நல்ல வரவேற்பு கிடைத்தது என கூறினார்.

இன்றளவும் குறுக்கே புகுந்து ஏதாவது, வேண்டுமென்றே குறைகூறித் திரியும் நபர்கள் இருக்கத்தான் செய்கி றார்கள். கண்டு கொள்வதில்லை எனக் கூறுகிறார் கனகா பாலன்

மேலும் வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களுக்கு இவர் கூறுவதாவது: “காணும் ஒவ்வொன்றிலும் கவனத்தைக் கூராக்குங்கள்., நிறைய வாசியுங்கள், குறைய எழுதினால்கூட பரவாயில்லை. என்னிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு சொற்களுக்கும் வலு உண்டென்பதனை முழுதாக நம்பி, உங்களது படைப்புகளை உருவாக்குங்கள்” எனக் கூறுகிறார்.

கவிதை எழுதுவதால் என்ன பயன் கிடைக்கிறது என இன்று பலராலும் கேட்கப்படும் கேள்வியாக இருப்பதால் அதற்கும் தனது கருத்தைக் குறிப்பிடுகிறார்.

பணம் தான் பலன் என்று நாம் பழகியிருக்கிறோம். அதனால் தான் கவிதை எழுதினால் கோடீஸ்வரி ஆகிவிட முடியுமா என்று ஏளனக் கேள்வி வைக்கப்படுகிறது.

வசதி வாய்ப்பு தராத ஒன்றை, உறவுகள் தராத மனநிலை ஒன்றை ஒரு கவிஞனால் கவிதை எழுதுவதன் மூலமாக தனக்குத்தானே பெற்றுக் கொள்ள முடியும்.

கவிதை எழுதுவதன் பலன் கவிதையாகவே வாழ்தலைத் தரும் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம் எனக் கூறுகிறார் கனகா பாலன்

தகவல் சேகரிப்பு
**மஜினா உமறு லெவ்வை**
மாவடிப்பள்ளி, இலங்கை.

# காதல்

ஆதாரமாய் வந்து உள் நுழைந்து!
அன்பினில் ஊறி சுகம் விளைந்து!
இரவு பகலாய் உறக்கம் தொலைந்து!
இளமைக்காலம் முழுதும் அலைந்து!
வாழ்க்கைப் பாதையது ஓடி வளைந்து!
வர்ணம் பூசிய காலங்கள் கழிந்து!
உதிரத்தில் நாளும் பூக்கோலம் வரைந்து!
ஆயிரம் மொட்டுக்கள் உணர்வுக்குள் மலர்ந்து!
ஆகாயம் நோக்கி சிறகடித்து பறந்து!
ஆனந்த தாண்டவம் மனம் அடைந்து!
அகத்தின் உள்ளிறங்கி தினம் குடைந்து!
ஈருடல் ஒருயிர் ஆன காதல்!!
ஆருடம் பொய்யாக்கி போன காதல்!!
தேரேறி திருவிழா கண்ட காதல்!!
மின்மினிக் கண்களில் கொண்ட காதல்!!
தள்ளாடும் நிலை தெளிந்த காதல்!!
நில்லாமல் பெருமழை பொழிந்த காதல்!!

**லீ.லியாகத்அலி.**

# யாரறிவர்

மனச்சஞ்சலத்தின்
மாயப் பிம்பமாய்...
என்னுள் விழுந்த
நீங்காக் கேள்விகளின்
தேடலாய்...

ஊடுருவிச் செல்லும்
ஒற்றைப் பார்வையை
தன்னுள் மறைத்தே
வைத்தாய்..

காற்றைவிட
விரைந்து செல்லும்
காதல் மொழிகளின்
சங்கேதம் யாரறிவார்........

புவனாபாபு ❤
நாகை.

# தன்முனை



●

நெகிழ்வித்த நேசமொன்று
தெரிந்தே கை நழுவியது
துளிர்த்த கண்ணீருக்குக் கவசமானது
உதட்டுப் புன்னகை ...

●

வேறுபாடுகளின் பிணைப்பில்
அழுந்திப் போகிறது
அவசியமற்ற புரிதல்கள்
அர்த்தமற்ற மெனக்கெடல்கள்!

அன்புச்செல்வி சுப்புராஜு

# ஒற்றை இறகு

வானிலிருந்து மெல்லச்
சுழன்று, சுழன்று இறங்குகிறது
ஒற்றை இறகு

என்னிடம் பகிரேன்
இரகசியமாய்த் தழுவும் காற்றின்
பிடியினின்றும் மெல்ல நழுவி
இலக்கை எட்ட விரைகிறது.

எங்கும் நில்லாமல்
யாரின் பிடியிலும் அகப்படாமல்
பூமி தொட்டு விண்ணவனின்
காதல் பகிர்ந்து
மண் சாய்ந்தது அந்த இறகு

அன்புச்செல்வி சுப்புராஜு

# யாழினியின் வெற்றித்தருணம்

## கார்த்தி டாவின்சி

அந்த ஓட்டலின் அகண்ட வரவேற்பறையில் ஆட்கள் சிலர் அங்கும் இங்குமாய் நின்றிருந்தனர். மாலை வேளையில் திரைப்படப் பாடலொன்றின் மெல்லிய கரோக்கி இசை காற்றை நிரப்பி வைத்திருந்தது. ஓட்டல் ரிசப்சனிஸ்ட் கிளம்புவதற்கு தயாராகிக் கொண்டிருந்தார். ஓட்டலின் மேலரங்கில் அன்று மாலையில் ஒரு பாவரங்கம் நடைபெறவிருந்தது. காற்றில் மிதந்து வரும் இசைக்கு ஏற்ப பாடல் வரிகளை மனதிலும் சத்தமின்றி வாயிலும் பாடியபடி நின்றிருந்தாள் யாழினி. அழகிய ரோஸ் நிறப்புடவை அணிந்திருந்தாள். அன்றையப் பாவரங்கின் கூட்ட நேரத்திற்கு சற்று முன்பாக வந்துவிட்டாள். அதனால் அரங்கிற்குள் போகாமல் கீழே வரவேற்பறையிலேயே மற்றவர்களுக்காக காத்திருந்தாள். அரங்கிற்கான நேரம் தொடங்க இன்னும் சிறிது நேரம் இருந்தது.

அப்போது ஓட்டலின் முதலாளி தனது பணியாளருடன் அங்கு வந்தார். பருத்து போய் வயது அறுபதில் இருந்தார். ஓட்டலின் வரவேற்பறையில் பணியாளரிடம் ஏதோ பேசிக்கொண்டு நின்றிருந்தார். அவரைப் பார்த்த யாழினி தெரிந்தவர் என்பதால் நலம் விசாரிக்கலாம் என்று நினைத்தாள். அவரை நோக்கி நடந்தாள். காலணி சத்தம் உணர்ந்தவர் யாரென்று பார்த்த உடனே கேட்டார்.

‘இங்க என்னம்மா பண்ற.?’ அவளைப் பார்த்ததும் கேள்வியை மட்டும் முன்வைத்து கணீர் குரலில் கேட்டார் அந்த ஓட்டல் முதலாளி. அவரது கேள்வியில் குறைந்தளவு சகஜத்தன்மைகூட இல்லை. ‘வணக்கம் சார். நல்லா இருக்கீங்களா.?’ முதலில் மரியாதையைப் பதிவுசெய்துவிட்டு மேற்கொண்டு நலம் விசாரித்தாள் யாழினி.

‘சொல்லுமா. இங்க என்ன பண்ற நீ.?’ மீண்டும் கேள்வியே முன்னே நின்றது. ஆனால் அதில் எந்த மரியாதையும் இல்லை.

‘மேல.. மீட்டிங்,’ பாதி வரியில் இருக்கும்போதே அவளைத் தடுக்கும் விதமாய் சொன்னார் முதலாளி.

‘நீ அங்கல்லாம் போகாத.’ ஒரேயடியாய் சொன்னார்.

‘நானா.?’ ஒரு நொடிக்கு தோன்றிய அதிர்ச்சியுடன் தன் நெஞ்சை நோக்கி கை காட்டியவாறே கேட்டாள் யாழினி.

‘அங்கல்லாம் போகக்கூடாது. யோவ்... வெளிய அனுப்புயா.’ என்று தன் பணியாளிடம் வேலையை ஏவிவிட்டு பத்து எட்டில் தன் அறைக்குள் நுழைந்து கொண்டார் ஓட்டல் முதலாளி. இட்ட பணியை செவ்வனே செய்ய பணியாள் தயாராய் இருந்தார். யாழினி ஏதோ சொல்ல முற்பட்டாள். ஆனால் அந்த பணியாளரும் அவளை மேற்கொண்டு பேசவிடாமல் நிறுத்து என்று சைகை காட்டினார். அவரது முகமோ இறுக்கமாக



இருந்தது. வாசலைக்காட்டி வெளியேறச் சொன்னார். மீண்டும் ஏதோ சொல்ல முற்பட்டவள் யாரும் கேட்கமாட்டார்கள் என்பதால் பேச்சை வாய்க்குள்ளேயே வைத்துக்கொண்டாள்.

நீண்ட வராண்டாவில் அவமானத் தோடு மெதுவாக நடந்து வாசல் கதவருகே வந்தவள் மனதில் அப்போது நிறைய ஓடிக்கொண்டிருந்தது. அப்போது வெளி யிலிருந்து உள்ளே வந்து கொண்டிருந்த வெண்பா யாழினி வெளியே வருவதை பார்த்து முகம் மலர்ந்து பேசினாள்.

'ஆஹா.. யாழினி.. நேரத்துக்கு வந்துட்டீங்களா.? இன்னும் கொஞ்ச நேரத்துல எல்லாம் தயாராகிடும். மேல போலாமா.?' யாழினியை அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள் வெண்பா. யாழினி மீண்டும் உள்ளே வருவது கண்டு பணியாளர் அவளைத் தடுக்க நினைத்து அவளை நோக்கி ஓடிவந்தார்.

'இந்தாம்மா நில்லும்மா. மறுபடி எங்க போற.? அதுவும் கெஸ்ட்டுகூட. அவர்தான் வெளியப்போகச் சொன்னா ருல்ல.' அவர்களை நோக்கி வந்தவரை கைக்காட்டி நிறுத்தினாள் வெண்பா. வெண்பாவைப் பார்த்தும் மேல் தளத்தில் நடக்கும் நிகழ்வுக்கு வந்திருப்பாள் என்று புரிந்து கொண்ட பணியாளர் யாழினியைப் பார்த்தபோது அரங்கிற்கு வந்திருக்கிறாள் என்று புரிந்து கொள்ளாமல் தனது சர்வ அதிகார முதலாளி சொன்னதையே நினைத்துக் கொண்டிருந்தார். அவருக்கு தெரிந்தது அவ்வளவுதான். வெண்பா கைக்காட்டியதால் மட்டும்தான் அவர் நின்றார். வெண்பா மனதில் எழுந்த கேள்விகள் சில வெளிப்பட்டன.

'இருங்க சார். ஏன் தடுக்கிறீங்க.?

'ஓனர் இந்த பொண்ண மேல போகக்கூடாதுன்னு சொல்லிஇருக்காங்க. நீங்கப் போங்க. இந்த பொண்ணு யாரையும் டிஸ்டர்ப் பண்ணாம நான்

பார்த்துக்கிறேன்.' பணியாளர் இப்படி சொன்னதைக் கேட்டதும் வெண்பாவுக்கு புரியவில்லை. ஓனர் ஏன் யாழினியைத் தடுக்கிறார் என்று யோசித்தாள்.

'இவங்க ஏன் மேல வரக்கூடாது.? என்னாச்சு.?' வெண்பா கேட்டாள். பணியாள ருக்கு அதற்கான விடை தெரியாது. பதில் சொல்லத் தவறினார்.

'இன்னிக்கு மீட்டிங் நடக்குதில்ல.?' இருவரும் அங்கே பேசுவதை பார்த்துக் கொண்டே மனதுக்குள் ஓடும் கேள்விகள் நிறைந்த ஞாபகங்களைத் தொகுத்து கொண்டாள் யாழினி.

ஆமாம். இங்கே அவளுக்கு காரண மில்லாமலேயே கரணம் போட வேண்டி யிருந்தது. சில மாதங்களுக்கு முன்பு இதே ஓட்டல் நிறுவனத்தில் வரவேற்பறையில் பணியாற்றியவள் அவள். தனது தோழிகள் மூலம் வேலைக்கு ஆள் தேவை என்று அறிந்து இந்த நிறுவனத்தில் பணியில் சேர்ந்தாள். பேருக்குதான் ரிஷப்சனிஸ்ட். எந்த நேரத்தில் எப்படி வேண்டுமானாலும் பணி செய்ய வேண்டி இருந்தது. வரவேற்பறையில் பணி இருந்தால் அங்கே இருப்பாள். பணிபுரியும் பெண்கள்யாரேனும்வராமல்போனால்அன்று பாத்திரங்கள் கழுவப்படும். அல்லது தளம் தளமாக வராண்டாக்கள் துடைக்கப்படும். இரவிலும் தங்கி வேலை செய்தாள். வேலை இப்படி இருந்ததால் அடிக்கடி அவளது அம்மா மட்டும் வீட்டில் தனியாக இருந்தார். அப்போதெல்லாம் வேலைக்கு நேரகாலம் பாகுபாடு ஏதும் இன்றி, சொன்னால் சொன்னபடி எனத் தொய்வின்றி உழைப்பைக் கொடுத்தாள். அவளுடன் வேலை செய்யும் பணியாட்கள் அவ்வப்போது சொல்வார்கள்.

'இங்க வேலை செஞ்ச ரெண்டு பேர் வந்துட்டாங்கன்னா உனக்கு இவ்வளவு வேலை இருக்காது. நீ பாட்ல உன் வேலைய மட்டும் பாக்கலாம். இந்தக் கஷ்டமே இருக்காதுமா.' யாழினி சரியென்று தலையாட்டுவாள்.

தொடர்ந்து இரவுகளில் பணி யாற்றுவதில் உடல்நலம் பாதிக்கப்பட்டது. தன் அம்மா சொல்லியும்கூட கேட்காமல் ஆணைப்போல இரவுகளிலும் வேலை பார்த்தாள். தலைவலியில் ஆரம்பித்தது இறுதியில் மருத்துவமனை படுக்கைவரை கொண்டு போய்விட்டது. அவனை சில நாட்களுக்கு வேலை செய்யாமல் ஓய்வு எடுக்கச் சொல்லி அறிவுரைகள் கொடுக்கப்பட்டன. மேலும் சில நாட்கள் ஓய்வில் இருந்து விட்டு மீண்டும் பணிக்கு திரும்பினாள் யாழினி.

உடன் பணி புரிந்தவர்கள் மட்டும் அவளை நேரில் பார்த்து நலம் விசாரித் தனர். முதலாளி அவரிடம் விளக்கம் எதுவும் விசாரிக்காமல் ஒன்று மட்டும் சொன்னார்.

'உடம்ப முழுசா சரி பண்ணிக் கிட்டுதான் வேலைக்கு வரணும். சரியா.?'

'சரிங்க சார்,' என்று பதிலளித்தாள் யாழினி. அப்போதும் உடல்நலத்தையும் மீறி வேலையே முக்கியம் என்று நினைத் தாள் யாழினி.

மீண்டும் பழையபடியே பணியைத் தொடர்ந்தாள் யாழினி. எந்த வேலையும் பாகுபாடின்றி உழைத்தவளுக்கு நாள் கணக்குகூட சரியாகத் தெரியாமல் போய்விட்டது. பகலில் பணிக்கு வந்து மறுநாள் காலையில் வீட்டிற்கு சென்று மீண்டும் மாலை பணிக்கு திரும்புவாள் வீட்டில் இருக்கும் நேரம் குறைந்தபடி இருக்க, அவளது சம்பளம் உயரவில்லை. வேலையை அதிகம் சுமத்திய முதலாளி அதனால் உடல் நலம் பாதிக்கப்பட்ட அவளை ஒருமுறைகூட மருத்துவமனைக்கு வந்து பார்த்தது இல்லை. ஆனால் வேலைக்கு மட்டும் ஆள்தேவை என்பதால் யாழினியை இரவிலும் வேலை வாங்கிய முதலாளி இதைப்பற்றி எல்லாம் எதையும் யோசிக்காமல் தன் பணியை செய்வதில் மட்டுமே கண்ணாய் இருந்தவளுக்கு அன்றுதான் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

•
எதையும் தாங்கும்
மனப்பக்குவம் இல்லை
ஆசைகள் ஒவ்வொன்றும்
நிராகரிக்க படும்போது
•
கிடைத்த பொருளுக்கு
மனதில் மதிப்பில்லை
அதனை இழக்கும்போது
அந்த பொருளை தேடுகிறது
•
தீராத கோப
குமுறல்கள் அகத்திலே
அதனால் விளைகிறது
தேவையற்ற பயன்

**பவித்ரா**

முதலாளி அழைத்தார் என்று சொல்லப்பட்ட உடன் தன் பணியை நிறுத்தி வைத்துவிட்டு அவரிடம் சென்றாள். முதலாளியின் அறையில் அவளுக்கான சம்பளம் காத்திருந்தது. அறைக்குள் நுழைந்தவளை சம்பளத்திற்காக கையெழுத்துப் போடச் சொன்னார் முதலாளி அற்பமான சம்பளத்தை எண்களில் காட்டியது அந்த சம்பள ரசீதுச்சீட்டு. கையெழுத்தை போடும்போதும் சம்பளத்தை அவளது கைகளில் கொடுக்கும் போதும், ஒழுங்கா வர்றதுமில்ல. வேலையும் செய்றதில்ல,' என்று முணுமுணுத்துக்கொண்டே கொடுத்தார். காதில் விழும் வார்த்தைகள் கேட்டபோது லீவானதால் தன்னை இப்படி சொல்கிறார் என்று நினைத்துக் கொண்டாள். ஆனால் தன்னை ஒரேயடியாக தூக்கி எறிந்துவிட்டு பேசுகிறார் என்று அறியாமல் பணத்தை வாங்கிக் கொண்டாள்.

'உன் நம்பரை தந்துவிட்டுப் போமா. ஏதாவதுன்னா நான் கூப்பிடுறேன்,' என்று சொன்னார் முதலாளி. இதன் அர்த்தம் புரிந்தபோது அவளுக்கு நெஞ்சு படபடத்து போனது.

பெண்ணானாலும் ஆணுக்கு நிகராக நேரம் பார்க்காமல் உழைத்தவள். தனது வேலையைத் தாண்டி மற்ற வேலையையும் சேர்த்து இழுத்துப்போட்டு செய்தவளுக்கு இப்போது வேலை பறிபோய் இருந்தது. பேசுவதற்கு வார்த்தை இல்லாமல் அந்த இடத்தில் உணர்வற்ற நிலையில் நின்றாள். நொடிகள் மிக மெதுவாகவும் மிக வேகமாகவும் நகர்வதைப்போல தோன்றியது. பேச வராத நிலையில் மெல்ல பேசினாள்.

'உடம்பு சரியில்லன்னுதான் சார் லீவு போட்டேன். ஆனா எந்த வேலையும் பாக்கி வைக்கல சார்.' மெல்லிய குரல் ஒலித்தது. எனக்கு முழுநேரமும் வேலைக்கு ஆள் வேணும்மா. அதவிடு. நீ ஃபோன் நம்பர் குடுத்துட்டுபோ.நான்கூப்பிடுறேன்.கௌம்பு. தயாரித்து வைத்த பதில் என்று இரண்டாம் முறையாக அவர் சொல்லும்போது புரிந்தது யாழினிக்கு. தன்னை வேலை இழக்கச் செய்ய இன்னும்கூட பதில்களும் காரணங்களும் இருந்ததையும் உணர்ந்தாள். கிளம்பு, கிளம்பு என்று உதாசினமாய் கூறிவிட்டு தனக்கு வேறு வேலை இருக்கிறது என்று காட்டிக்கொண்டிருந்தவரிடம் மேற்கொண்டு எதையும் கேட்க முடியாமல் அவ்விடத்தை விட்டு போனாள். பலவித கேள்விகள் அனைத்துக்கும் விடையின்றி போனது.

அன்று போனவள் இன்றுதான் இந்த ஓட்டலுக்கு நிகழ்ச்சி வந்திருந்தாள். முதலாளி என்ற மரியாதைக்காகப் பேச வந்தவளுக்கு கேள்வியும் புறக்கணிப்பும் நிகழ்ந்தது. அந்த கேள்விகள் மட்டும் மனதில் அப்படி ஒலித்துக் கொண்டிருந்தன. ஆனால் அங்கிருந்தவர்களைக் கண்டதில் அவளது கேள்விகள் தகர்ந்து பதில்கள் வரிசையாக தோன்றின. ஒரு பதில் அவள் எதிரிலேயே நின்று வெண்பாவுடன் பேசிக் கொண்டிருந்தது. தன்னை வெளியே போகச் சொன்ன பணியாளர்தான் அந்த பதில். மறுபுறம் இன்னொரு பதில் ரிஷப்சனில் வேலையை முடித்து ஓட்டலை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தது.

தான் வேலை இழக்கவில்லை, தனது வேலை பறிக்கப்பட்டிருந்தது என்பதை உணர்ந்தாள். தேவைக்கு மட்டும் பணியாற்ற தன்னை ஒரு எந்திரமாக பயன்படுத்தியதும் தேவையில்லை என்றானதும் புறக்கணிக்கப்

பட்டு தூக்கி எறியப்பட்டதும் அவளுக்கு புரிந்தது. ஒருசில நிமிடங்களில் அவளுக்கு தெளிவு கிடைத்தது. மனது கோபத்தில் கொதிக்கத் தொடங்கியது. இப்போது தனக்கு எதிராக இருந்த சூழலைப் பார்த்து அதை சரியானபடிக்கு கையாள நினைத்தாள்.

'வெண்பா.' யாழினி அழைத்தாள். 'நீங்க மட்டும் இல்லன்னா இவங்க என்ன மறுபடியும் அவமானப் படுத்தி யிருப்பாங்க. சரியான நேரத்துல தடுத்திங்க. ரொம்ப நன்றி.' சொல்லி முடித்தவள் பணியாளரைப் பார்த்தாள்.

'முதலாளிய பாக்கணும்.' வெண்பாவும் பணியாளரும் அவளையேப் பார்த்தனர் கொண்டனர்.

'ஓட்டல் முதலாளி மிஸ்டர் ராம் குமாரைப் பாக்கணும்.' மீண்டும் ஒருமுறை அழுத்தமாக கூறினாள் யாழினி. அவளது குரல் உறுதியுடனும் தீர்க்கமாகவும் முடிவுடனும் இருந்தது. அவளது முகம் தெளிவாக இருந்தது.

'இப்பதானம்மா பாத்துட்டு போனாரு.' பணியாளர் மறுக்கும் தொனியில் சொன்னார்.

'ஹலோ மிஸ்டர். நீங்க இங்க ஏற்கனவே வேலை செஞ்சிட்டு நடுவுல கொஞ்ச நாள் வராமலிருந்தவர்தானே.? சரியானபடி சம்பளம் தரலன்னு வேலையை விட்டிங்க. அப்புறம் கேட்டபடி சம்பளம் கெடச்சதும் திரும்ப வந்து சேந்திருக்கீங்க சரிதானே.?' தன்னைப்பற்றி சரியாகச் சொல்கிறாள் என்பதால் பணியாளர் சிறிது நேரம் அவளையேப் பார்த்தார்.

'உங்கள மாதிரியே ரிஷப்சன்லயும் ஒரு லேடி வந்திருக்காங்க. ரெண்டு பேரும் வந்து ஆறு மாசங்கூட ஆகல. சரிதானே.?' அவள் சொல்ல சொல்ல எதிரிலிருந்த பணியாளருக்கு வாயடைத்துப் போனது. சிறிது நேரம் முன்பு தன் முதலாளி இப்பெண்ணை வெளியே அனுப்பும்படி சொன்னபோது எதுவும் சொல்ல

# களஞ்சியம்

அத்தை நட்டு வைத்த செடிகள்
அத்தனையும் செழித்து
வளர்ந்து விடுகின்றன
வீட்டின் முற்றத்தில் இருக்கும்
கரும்பச்சை, துளசி,
மருதாணி, வெயில் ரோஜா,
எல்லாம் அவள் வைத்ததே
அத்தைக்கு அத்துணை கைவாகு

பாட்டியின் சமையலில்
ரசம், கோதுமை தோசை,
சோள தோசை,
எல்லாம் அவ்வளவு
ருசியாக இருக்கிறது
அவளது கைப்பக்குவம் அப்படி

மகப்பேறு என்றால்
ஊரில் எல்லோரும்
பத்மா மருத்துவமனையைத்தான்
நாடுகின்றனர்
அந்த மருத்துவச்சி
கைராசி மிக்கவர்

கைவாகு
கைப்பக்குவம்
கைராசி எல்லாம் ஒன்றுதான்

பலவற்றைக் குறிக்க
ஒரு சொல் மட்டுமே
இருக்கும் மொழியல்ல
ஒரு பயிரை விதைக்க
பல விதைகள் இருப்பதைப் போல
ஒரு பொருளைக் குறிக்க
பல சொற்கள் கொழிக்கும் மொழியே
கட்டற்ற கலைக்களஞ்சியம்.

- மு.ஆறுமுகவிக்னேஷ்

முடியாதபடிக்கு நின்றவளா இவள் என்று ஆச்சர்யித்துப்போய் நின்றார்.

'நீங்க போனதும் இந்த வேலைக்கு நான் வந்தேன். நல்லபடியா வேலை செஞ்சாலும் என்ன வேலையவிட்டு ஏன் தூக்குனார்னு அப்ப எனக்கு புரியல. ஆனா இப்ப ரொம்ப நல்லாவே புரியுது. உங்க ரெண்டு பேரோட வேலையும் நான் ஒரே ஆளா செஞ்சேன். ஆனாலும் வேலை இல்ல. நீங்க வந்ததும் உங்களால எனக்கு வேலை போச்சு தெரியுமா.?' பணியாளர் என்ன சொல்வது என்று தெரியாமல் முழித்தார்.

'வெண்பா அந்த ஓட்டல் முதலாளிய பார்த்துட்டு மேல போலாம். ஓகேவா.?'

வெண்பாவுக்கு எல்லாம் புரிந்தி ருக்க உடன் சென்றாள். கதவைத் தட்டிவிட்டு அனுமதி கேட்டு உள்ளே செல்ல விரும்பாமல் நேரடியாக முதலாளி யின் அறைக்குள் நுழைந்தனர் இருவரும்.

'ஹலோ சார், என்னை ஏன் வேலைய விட்டு நீக்குனீங்க? சொல்லுங்க.?' முதல்முறையாக திடமான குரலில் பேசும் யாழினியைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். ஹோட்டல் முதலாளி ராம்குமார். வெண்பா உடன் இருக்க, தன் மனஉறுதி திண்ணமாய் வெளிப்பட, தனக்கான நியாயத்தைக் கேட்டு நின்றாள்.

'உங்களுக்கு ஆள் வேணும்னா வேலை செய்யவும் வேணாம்னா வேலை யிலிருந்து தூக்கவும் நாங்க என்ன மெஷினா.?' வெண்பா பார்த்திருக்க முதலாளி எந்த பதிலும் சொல்லாமல் இருந்தார்.

'லீவு போட்டேன்னுதானே அன்னைக்கு கிளம்ப சொன்னிங்க.? உங்க இஷ்டத்துக்கு என் மேல வேலையைத் திணிச்சிட்டதால என் உடம்பு சரியில்லாம போனது. வேறவழி இல்லாமதான் லீவு ஆனது. நான் லீவு போட்டதுதான் தப்புன்னா, அதுக்குகாரணமே நீங்கதானே.?'

யாழினி அன்று இதே இடத்தில் எப்படி கேள்விகளால் மனம் பதறி நின்றாளோ அதே இடத்தில் மனதை திறந்து கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள். தனது மனஉறுதி இத்தனை திடமாக இருக்கும் என்று அவள் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை.

'முதலாளிங்கிற மரியாதைக்காக இவர் என்ன வேலை சொன்னாலும் நான் தட்டாமல் செஞ்சேன் வெண்பா. ஆனா அன்னிக்கு இதே வாயால ஒழுங்கா வர்றதுமில்ல, வேலையும் செய்றதில்லனு பொய்சொல்றாருங்க. இவரெல்லாம் முதலாளியா.? ஓட்டல் முதலாளி பல்லைக் கடித்துக்கொண்டிருந்தார்.

'ஓராள் மேல ரெண்டாள் வேலைய ஏத்திட்டு உடம்பு சரி இல்லாம லீவ் போட்டா ஒழுங்கா வேலைக்கு வர்றதில்லைனு முணுமுணுத்தார். தப்பு இவராலயா என்னாலயா?' தன் குட்டு வெளியாவதை கண்டும் அவரால் எதுவும் பேசமுடியாதபடி இருக்க, யாழினியின் கேள்விகள் அவரை அம்புகள்போல தாக்கின.

'கடைசியா வெளிய போகும்போது எனக்கு கொடுத்த சம்பளமும் கம்மி. ரெண்டாள் வேலைக்கும் சம்பளம் கணக்கு போட்டா உங்களால தர முடியுமா.? இந்த ஓட்டலுக்காக அம்மாவையும் தனியா விட்டுட்டு பலநாள் ராத்திரில வேலை பாத்ததனாலத்தான் எனக்கு உடம்பு கெட்டு போச்சு. பெட்ல சேத்துட்டாங்க. ஆஸ்பிட்டல் பெட்டுல கெடந்தப்போக்கூட இவர் வந்து பாக்கல. திரும்பி வந்தப்ப லீவ் எல்லாம் பரவாயில்லை. ஒடம்ப சரிப்பண்ணிட்டு வாம்மானு இந்த வாயால தான் சொன்னாரு. அதே வாயால ஒழுங்கா வர்றதில்லனு புழுகுறாரே. இது என்ன வாயோ. வேலை தரேன்னு சொல்லிட்டு இப்படி கொஞ்ச நாள்ல வெளியே போகச் சொல்றாருன்னா இவர் பண்றது ஏமாத்து வேலைதானே.?' இன்னும் யாழினி முழுமையாகச் சொல்லி முடிக்கவில்லை.

‘எனக்கு முன்ன வேலை செஞ்ச ரெண்டுப் பேர் ஏன் வேலையவிட்டு நின்னாங்கனு தெரியுமா வெண்பா.? சொல் லுட்டுமா சார்.?’ முதலாளிக்கு தூக்கிவாரிப் போட்டது.

‘அவங்க சம்பளத்தப் பொய்க் கணக்கு எழுதி தின்னிருக்காரு. அவங்களுக்கு சந்தேகம்வரவும்தான் அவங்க ரெண்டுபேரும் வேலையைவிட்டுநின்னுட்டாங்க.அப்புறமா நான் வந்தேன். வேலைய வாங்கிட்டு லீவுனு சொல்லி வெளியே அனுப்பிட்டாரு. ஏன் திடீர்னு அனுப்புறாருன்னு அப்ப புரியல. அந்த ஸ்டாஃப்ஸ் ரெண்டு பேரும்தான் முழு ஹோட்டல் நிர்வாகமும். அவங்க இல்லாம போனதால என்ன வச்சு சமாளிச்சிட்டாரு. வேறவழி இல்லாம அவங்க கேட்ட சம்பளத்துக்கு சம்மதிச்சு வேலைக்கு சேத்துக்கிட்டாரு. கடைசியில என்னையத் தூக்கி வெளியே போட்டுட்டாரு. கொஞ்ச நாளுக்கு சமாளிக்க என்ன பயன்படுத்திக்கிட்டது இவரு சரியான ஏமாத்து பேர்வழினு காட்டிடுச்சி. இது நியாயமா.?’ யாழினியின் கேள்விகளைத் தாங்க முடியாத முதலாளி தன் பணியாளரை அழைத்தார். ஆனால் அவளது சொற்களின் கொதிப்பு வெளியிலிருந்த பணியாளரையும் கட்டியிருந்தது. அதனால் முதலாளி கூப்பிட்டும் அவர் உள்ளே வர மறுத்து வெளியே நின்றார்.

‘முதலாளியாச்சேனு மரியாதைக்காக வந்து வணக்கம் சொல்றேன். ஆனா இவரு அன்னைக்கு மாதிரி என்ன வெளிய அனுப்புறதுலயே இப்பவும் குறியா இருந்தாருங்க. வெளிய அனுப்புனு மட்டும் சொல்லிட்டு இங்க வந்துட்டாரு. நடந்த எதுவுமே தெரியாம அவரும் என்ன வெளியப் போகச் சொல்லி கொஞ்ச நேரத்துல என்ன கலங்க வச்சிட்டாங்க. அதான் உண்மைத் தெரிஞ்சும் ஏன் சும்மா இருக்கனும்னு பேசிட்டேன் வெண்பா.’ யாழினி நியாயப்படி பேசுவதனால் ஓட்டல் முதலாளி வாயடைத்து போய் இருந்தார்.

‘இதுக்கெல்லாம் நீங்க மன்னிப்பு கேட்டாகனும் மிஸ்டர். ராம்குமார்.’ வெண்பா சொன்னதைக் கேட்டு கோபமாகப் பார்த்தார் முதலாளி. ‘இல்லன்னா லேபர் அப்யூஸ் கேஸ்ல ஒட்டுமொத்த ஓட்டலும் பாதிக்கப்படும். பரவாயில்லையா.?’ வெண்பா நுட்பமாகச் சொன்னாள். ஆனால் முதலாளி ராம்குமாரோ கோபத்தில் இவர்களை ஒன்றும் செய்ய முடியாமல் மீண்டும் தன் பணியாளரை அழைத்தார். அவர் உள்ளே வரவேயில்லை. அவரது கோபத்தைப் பார்த்து வெண்பா கேட்டாள்.

‘என்ன சார்? எங்கள எதும் சொல்ல முடியலயேனு பாக்கிறிங்களா.? இல்ல நிகழ்ச்சிய நிறுத்திடலாம்னு நெனக்கி றிங்களா.? நியாயமா நாங்கதான் உங்கமேல கோபப்படனும். எங்க மீட்டிங்க கேன்சல் பண்ணுங்க பாப்போம். இங்க நடந்த லேபர் அப்யூஸை மீடியா ப்ரெஸ்னு இப்பவே லைவ் போடுவோம். பரவால்லயா.?’

சரியாக மாட்டிக்கொண்ட முதலாளி ராம்குமாருக்கு கோபம் தலைக் கேறினாலும் தன்னால் எதுவும் செய்ய முடியாது என்று ஒருவழியாக உணர்ந்து கொண்டார்.

பிறகுதான் அவரது இருகரங்களும் கூம்பின. ‘இவரு மன்னிப்பு கேட்டு யாருக்கு லாபம்.? அதைவிட, இனிமே யாருடைய உழைப்பையும் இவர் திருடக்கூடாது. அதை உறுதிப்படுத்த சொல்லுங்க. அதுக்கு நாம இனிமே இவரைக் கணக்குல வைக்கனும்.’ இதைக்கேட்ட வெண்பா சரியென்று தலையாட்டினாள். அதற்கு பிறகுதான் அவர்கள் அரங்கிற்கு சென்றனர்

மேலரங்கில்நிகழ்ச்சிதொடங்கியது. அரங்கில் கௌரவிக்கப்பட்ட இருவரில் ஒருவராக யாழினி நின்றாள். கடைசியாகப் பேசத் தொடங்கினாள். யாழினி அரங்கில் கரவொலியால் பாராட்டப்பட்டுக் கொண் டிருக்க, தன் அறைக்குள் காதில் புகை வராத குறையாகக் கரவொலிகளைக் கேட்டுக் கொண்டிருந்தார் ஓட்டல் முதலாளி ராம்குமார். ■



# அகம் நோக்கு


## முனைவர் ப. கற்பகராமன்

M.A.,M.A.,M.A.,M.Phil.,Ph.D.,

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்

சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி

சேலம் - 636 003


பார்க்கும் பார்வையை இரண்டு விதமாக நாம் அமைத்துக்கொள்ள வேண்டும். ஒன்று நமக்குப் புறத்தே பார்க்கும் பார்வை. இது நம்முடைய வெளித்தோற்றத்தை மட்டுமே உணர்த்தி நிற்கும். மேலும், உலகிலுள்ள அனைத்தையும் காண்பிப்பதும் இந்தப் புறத்தோற்றமே. இந்தப் புறத்தே பார்க்கும் பார்வையையும் தாண்டி, இன்னொரு பார்வையும் நமக்கு வேண்டும். அதுவே அகநோக்கு. நம்முடைய அகத்தே நாம் பார்க்கும் பார்வை. இந்தப் பார்வையே நம்மை நமக்கு உணர்த்தும்.

நாம் செய்கின்ற ஒவ்வொரு செயல்களும் நம்மை இந்த உலகிற்கு இனம் காட்டிக்கொண்டே இருக்கும் என்பதை உணர்ந்துகொண்டோமானால், நமக்கும் நம்மைச் சார்ந்தவர்களுக்கும் ஒருபோதும் தீங்கு செய்ய நமக்கு மனம் வராது.

அகம் தூய்மையாக இல்லாத காரணத்தினால்தான் அனைத்து வகையான கெடுதல்களையும் நாம் செய்கின்றோம். அடுத்தவர்களுக்குக் கெடுதல் செய்வதோடு நின்றுவிடாமல், நமக்கு நாமே கெடுதல் செய்கின்றோம் என்பதே வலிகளைத் தரும் உண்மையாக உள்ளது.

நமக்கான இடத்தில் யார்யாரையோ வைக்கின்ற காரணத்தால், நமக்காக இடத்தில் நம்மை வைத்து அழகு பார்க்கத் தவறிவிட்டோம். நமக்குள் யார்யாரோ வந்ததனால் நாமும் யார்யாரோவாகவே வெளிப்படுகின்றோம். இதன் விளைவு நாம் நம்மை முழுமையாக இழந்துகொண்டு வருவது.

நாமே நம்மை இழந்து விட்டோமானால் நம்மை யார்தான் மீட்டெடுப்பது? உண்மையான நாம் நம்முடைய அகத்திற்குள் இருக்கின்றோம். நாம் இருக்கக் கூடிய அகத்தைத் தொலைத்துவிட்டு, புற உலகத்தில் நம்மைத் தேடுவதில் ஒரு பயனும் இல்லை.

புற உலகில் நம்மைத் தேடத் தேட, ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் நம்மை நமக்கே அடையாளம் காட்டுவர். ஏனெனில் நம்மைப் போல் அகத்தைத் தொலைத்தவர் இங்குப் பலர் உண்டு. அவர்கள் அனைவரும், அன்றாடம் வாழ்வதற்காக பல்வேறு உருக் கொள்பவர்கள், பச்சோந்தியும் அவர்களிடம் தோற்றுவிடும்.

ஆனால் அகத்தை நாம் நோக்க> நோக்க இறைவனின் மானுடத் தத்துவம் நமக்கு விளங்கும். பிறப்பின் ரகசியம் தெளிவுபடும். இதுவரை நாம் வாழ்ந்துவந்த பொய்யான வாழ்வும், ஆரம்பம் முதலே இறைநிலை வழங்கிய புனிதமான வாழ்வும் முறையாகத் தெரியவரும்.

வெறும் எலும்புகளும், நரம்புகளும், ரத்தமும், சதையும் மட்டுமே சேர்ந்ததல்ல இந்த உடம்பு. காலத்திற்குக் காலம் பல்வேறு பரிணாமங்களை இந்த உடம்பு அடைந்து வளர்ந்து வருவதற்கு அவசியமாக அமைவது நம்மிடமிருக்கும்

உணர்வு. விலங்குகளிலிருந்து நம்மைப் பிரித்து மனித இனமாக முன்னேற்றம் அடையச் செய்ததும் இந்த உணர்வுகளே என்பதில் எந்த ஐயமுமில்லை.

இத்தகைய உணர்வுகளைக் கொண்டே நம்முடைய அகத்தை நோக்க வேண்டும். ஒவ்வொரு நொடியும் நாம் நம்மை உள்நோக்கித் தேட முயற்சிக்க வேண்டும். இந்த முயற்சி பல்லாயிரக்கணக்கான கேள்வி களை தருவதோடு அவை அனைத்திற்கும் விளக்கத்தையும் தந்துதவும்.

நம்முடைய தோல்விகள் அனைத் திற்கும் காரணம் நம்முடைய புறத் தேடல்களே. தொலைத்த இடத்தில் மட்டுமே தொலைந்த பொருள் கிடைக்கும். தொலைத்த இடத்தினை மறந்துவிட்டு, வேறு இடங்களில் தேடுவது என்பது



வீணான செயல் என்பதை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

எலும்புகளும் நரம்புகளும் சதையும் சேர்த்து அமைக்கப்பட்ட நம்முடைய உடலுக்குள், பல்வேறு வினாக்களுக்கும் விடையாய், ஆன்மாவை அமைத்துள்ளது இறைநிலை. இந்த ஆன்மா அழிவற்றது> ஆசைகளற்றது, வினைப் பதிவுகளைப் பதியவைத்திருப்பது.

உண்மையான நாம் என்பது இந்த ஆன்மாதான். இதற்கு நண்பனும் இல்லை. எதிரியும் இல்லை. அனைத்திற்கும் மூலமாய் இருக்கின்ற ஆதிப் பரம் பொருளிலிருந்து ஒரு பகுதியாக நம் உடலில் வந்திணைந்ததே இந்த ஆன்மா.

பிறவிகள்தோறும் சேர்கின்ற வினைப் பதிவுகள் முற்றிலுமாக நீங்கியதும் மீண்டும் ஆதிப் பரம் பொருளோடு இணைந்துவிடும் தன்மை கொண்டது இந்த ஆன்மா. ஒவ்வொரு முறையும் வினைப் பதிவுகளைத் தீர்ப்பதற்காகப் பிறவியெடுக்கும் நாம், தீர்ப்பதற்குப் பதில் சேர்த்துக்கொண்டே செல்கின்றோம். இவ்வாறு நாம் சேர்த்துக் கொண்டே செல்வதற்கு அக நோக்கு இல்லாததே காரணமாகும்.

நமக்குள் இருக்கின்ற ஆன்மாவை உள்நோக்கித் தேடினால் மட்டுமே நம்மை கண்டுபிடிக்க இயலும். அவ்வாறு நம்மை நாம் இனங்கண்டு விட்டோமானால், நம்முடைய பிறவியின் ரகசியம் குறித்த தெளிவு நமக்குக் கிடைக்கும். அந்தத் தெளிவே, நம்முடைய வினைப்பதிவுகளை நீக்க உதவும். மேலும், வினைப் பதிவுகளை நீக்கிய நம்மைப் பிறவா நிலைக்குக் கொண்டு சென்று இறைநிலையோடு இணைக்கும்.

எனவே நம்மை நாம் உள்நோக்கித் தேட ஆரம்பிப்போம். அகத்துக்குள் இருக்கின்ற ஆன்மாவைக் கண்டு ஆனந்தமாயிருப்போம். ■



# ஸ்ட்ரெஸ்
# மன அழுத்தம்


## Dr. ஃபஜிலா ஆசாத்
(International Life Coach - Mentor - Facilitator)


*"the next time you feel slightly uncomfortable with the pressure in your life, remember no pressure no diamonds. pressure is a part of success*
*- eric thomas*

அடுத்த முறை உங்கள் வாழ்க்கை உங்களை அழுத்தி நீங்கள் கொஞ்சம் தர்மசங்கடமாக உணரும் போது புரிந்து கொள்ளுங்கள். வெற்றியின் ஒரு பகுதியே அந்த அழுத்தம் . அழுத்தம் இல்லை என்றால் வைரங்கள் இல்லை. – எரிக் தாமஸ்

ஸ்ட்ரஸ்... இன்று இந்த வார்த்தையை சொல்லாதவர்களே இல்லை என்று சொல்லும் அளவு இந்த software யுகம் stressful யுகமாகவே பலருக்கும் இருக்கிறது.

வாழ்க்கையில் ஏற்படும் பிரச்னையின் அழுத்தத்தை விட ஸ்ட்ரெஸ்ஸால் ஏற்படும் பாதிப்பே பலரையும் மகிழ்ச்சியற்று தவிக்கச் செய்கிறது.

வேலை, குடும்பம் பணம்,படிப்பு என்று எதை எடுத்தாலும் அன்றாட வாழ்க்கையே அத்தனை ஸ்ட்ரெஸ்ஸாக இருக்கும்போது, இதில் எங்கிருந்து மனதில் மகிழ்ச்சி வரும் என்று கேட்பது இயல்பு.

நீங்கள் அன்றாடம் செய்யக் கூடிய வேலையை விட அதிகமான வேலையை செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டால், உடன் மூச்சுத் திணறி ஸ்ட்ரெஸ்ஸாக உணர்கிறீர்கள். ஏதோ ஒரு தருணத்தில், அலுவலகத்திலோ, படிக்கும் பள்ளியிலோ, அல்லது குடும்பத்தில் அப்பா, அம்மா, கணவன், மனைவி என்று யாராவது ஏதாவது கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுவிட்டால், நெஞ்சு படபடத்து முன்

நெற்றியில் வேர்வை பிசுபிசுக்க நாக்கு உலர்ந்து ஸ்ட்ரெஸ்ஸாக உணர்கிறீர்கள். அந்த படபடப்பும் பரபரப்பும் மனதை அழுத்த, எனக்கு ஏதோ செய்கிறதே, ஏன் என் விதி என்னை இவ்வளவு சிரமப்படுத்துகிறது என்று பதைபதைத்து பாதிப்புக்கு உள்ளாகிறீர்கள்.

ஆனால், ஸ்ட்ரஸ் உண்மையில் உங்களுக்கு நல்லது தான் செய்யும் என்கிறது அமெரிக்காவில் நடந்த நீண்ட கால ஆய்வு ஒன்று.

பல்லாயிரம் பேர்களிடம் பல ஆண்டு களாக நடத்தப்பட்ட அந்த ஆய்வின் முடிவில் ஸ்ட்ரெஸ் 'நண்பனுக்கு நண்பன், விரோதிக்கு விரோதி' என்பதாக கண்டறியப் பட்டுள்ளது. நான் ஸ்ட்ரெஸ்ஸாக இருக்கிறேன் இது என்னைப் பாதிக்கும் என்று ஸ்ட்ரெஸ்ஸை ஒரு விரோதி போல் நினைத்து படபடக்கும் மனநிலையே உடையவர்களை மட்டுமே ஸ்ட்ரெஸ் பாதிக்கிறது, பல நோய்களுக்கும் மூல காரணமாகிறது. ஸ்ட்ரெஸ்ஸால் எனக்கு பாதிப்பில்லை என்று எண்ணக் கூடியவர்களுக்கு ஸ்ட்ரெஸ்ஸால் நன்மையே விளைகிறது, என்று ஸ்ட்ரெஸ்ஸைப் பற்றி அந்த ஆய்வு ஆறுதலான புதிய தகவல் தருகிறது.

அதாவது, உண்மையில் உங்களு டைய எதிர்மறை எண்ணங்களே எந்த ஒரு பாதிப்பையும் ஏற்படுத்துகிறது. எந்த ஒரு வேலைப் பளுவும், பிரச்னைகளும் நேர்மறை எண்ணத்தோடு கையாளப் படும்போது அது உங்கள் செயல் திறனை அதிகப் படுத்தி உங்கள் ஆரோக்கியத்தை வளப்படுத்தும். அதே நேரம், இந்த வேலை எனக்கு ஸ்ட்ரெஸ்ஸாக இருக்கும், இது எனக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்ற எண்ணம் உங்களுக்கு எழுந்தால் நிச்சயம் பாதிப்பும் எழுந்து விடும். சுருக்கமாக சொன்னால் ஸ்ட்ரெஸ்ஸில் இல்லை பாதிப்பு. அது உங்கள் எண்ணத்தில் தான் இருக்கிறது என்கிறது அந்த ஆய்வு.

'ஜீனோம்' இயல் வளர்வதற்கு முன்னர் தான் ஸ்ட்ரெஸ் என்றால் மனதை, உடலை பாதிக்கக் கூடியது என்ற தவறான நம்பிக்கை ஊடுருவி இருந்தது. இன்று DNA விலே இருக்கிற local adaptation syndrome பற்றி தெரிய வரும்போது, நம்முடைய ஆழ்மனதின் ஆற்றல் அறியப்படும்போது, நம்முடைய சக்தி நம்முடைய தேவைக்கும், சூழலுக்கும் ஏற்ப விரிவடையும் தன்மை வாய்ந்தது என்பது உணரப்படுகிறது.

உண்மையில், வேலையின் அளவோ, திடமோ எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. அதை நீங்கள் விரும்பி செய்கிறீர்களா, விரும்பாமல் செய்கிறீர் களா என்பதைப் பொறுத்தே அது பாஸிட்டிவ் ஸ்ட்ரெஸ்ஸா கவும், நெகட்டிவ் ஸ்ட்ரெஸ்ஸாகவும் மாறுபடுகிறது. அதைப் பொறுத்தே உங்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. ஒரு வேலையை விரும்பி செய்யும் போது அந்த பாஸிட்டிவ் ஸ்ட்ரெஸ் உங்கள் local adaptation syndrome மை விரிவடைய செய்து, அந்த வேலையை செய்வதற்கான ஆற்றலைத் தந்து விடும். அந்த ஆற்றல் உங்கள் செயல் திறனை கூட்டி நீங்கள் வேண்டியதை அடையச் செய்கிறது. ஸ்ட்ரெஸ்ஸாக நீங்கள் எண்ணக்கூடிய ஒரு வேலை, நீங்கள் விருப்பத்தோடு செய்யும்போது மகிழ்ச்சி தரக்கூடியதாக மாறி விடுகிறது. நீங்கள் விருப்பமின்றி செய்யும்போது கடினமானதாக உங்களை பாதிக்கக் கூடியதாக உங்களை அழுத்துகிறது. ஆக, கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு உங்கள் மனநிலையை நீங்கள் மாற்றிக் கொண்டால் எந்த சூழ்நிலையையும் மகிழ்ச்சியானதாக மாற்றி விடலாம்.

ஹார்வர்ட் யுனிவெர்சிட்டியில் பல் வேறுவிதமான மாணவர்களிடம் திடீரென்று பரபரவென கேள்விகள் கேட்கப்பட்டது. அவர்கள் நிதானிப்பதற் குள் கேள்விகள் சரமாரியாக வந்து விழுந்தன. சுற்றிலும் பார்வையாளர்களும் ஆய்வாளர்களும் குறுகுறுவென பார்த்துக்

கொண்டிருக்க, கேள்விகளால் திணறி ஒரு பிரிவு மாணவர்கள் முகம் சிவந்து அவமானமாக கூனிக் குறுகி, விழி பிதுங்கி நெர்வஸாக நடுங்கிப் போனார்கள். ஆனால் அதே சூழலில் இருந்த மற்றொரு பிரிவு மாணவர்கள் அதிக திறமையோடும், ஆற்றலோடும், எந்த கேள்விகளுக்கும் சமாளிக்கக் கூடிய வல்லமையோடு எல்லா கேள்விகளுக்கும் திறம்பட பதில் சொல்லி கைதட்டல்களை அள்ளிச் சென்றார்கள்.

சோஷியல் ஸ்ட்ரெஸ்ஸின் விளைவு களை அறிய ஹார்வர்ட் மாணவர்களிடம் பல்வேறு சரமாரியான கேள்விகள் கேட்டு அன்று நடத்தப்பட்ட அந்த ஆய்வின் முடிவு ஸ்ட்ரெஸ்ஸின் பல்வேறு இரகசியங்களை உடைக்கிறது.

அந்த ஹார்வர்ட் மாணவர்களை ஆராய்ச்சியாளர்கள் இரு பிரிவினராக பிரித்து, ஒரு பிரிவினரிடம், உங்களை பல கேள்விகள் கேட்டு பல்வேறுவிதமான ஸ்ட்ரெஸ்ஸுக்கு உட்படுத்துவோம். உங்கள் நெஞ்சு படபடக்கும், உங்கள் முன் நெற்றியில் வியர்வை சுரக்கும், நீங்கள் மூச்சுத் திணறிப் போவீர்கள். ஆனால் புரிந்து கொள்ளுங்கள். உண்மையில், இந்த ஸ்ட்ரெஸ்ஸால் உங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. உங்கள் படபடக்கும் நெஞ்சமும், உங்கள் மூச்சுத்திணறலும் இந்த பரபர சூழலை சமாளிப்பதற்கேற்ப உங்கள் உடல் உங்களை தயார் படுத்துவதால் ஏற்படுவது. இது இயற்கை மனிதனுக்கு வழங்கியுள்ள அருட்கொடை. இதனால் உங்கள் மூளைக்கு அதிகம் ஆக்ஸிஜன் செலுத்தப் படும், அதன் காரணமாக உங்களால் விரைவாகவும் அதே சமயம் கூர்மையாகவும் சிந்திக்க முடியும். இது கடினமான சூழ்நிலைகளில் இருந்து உங்களை தற்காத்துக் கொள்வதற்காக உங்கள் உடல் தன்னிச்சையாக செயல் படுத்தும் நிகழ்வு. அதனால் நீங்கள் நேர்மறை எண்ணத்தோடு இந்த சூழலை அனுகுங்கள் என்று விழிப்புணர்ச்சி கொடுக்கப்பட்டது. அப்படி தயார் செய்து அனுப்பப்பட்ட மாணவர்கள் திடமாகவும் மிகுந்த ஆற்றலோடும் செயல்பட்டனர். அப்படி விழிப்புணர்ச்சி கொடுக்கப்படாத மற்றொரு பிரிவு மாணவர்கள் பயத்திலும், படபடப்பிலும் எதிர்மறை எண்ணத்திலும் நடுங்கி பாதிப்புக்கு ஆளானார்கள்.

ஆக.. பிரச்னையோ, சூழலோ, உங்களுக்கு எந்தக் கெடுதலையும் தராது உங்கள் மனநிலை நேர்மறையாக இருந்தால் எதையும் சமாளித்து உங்கள் சூழலை மகிழ்ச்சியானதாக மாற்றிவிடும் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ட்ரெஸ்ஸாக இருக்கும்போது உங்களுக்கு வேண்டியவர்களையோ, நண்பர்களையோ உங்கள் மனம் தேடிச் செல்லும். அவர்களின் அன்பான வார்த்தை கள் பெரும் ஆறுதலாக இருக்கும். இதற்கு அந்த பரபர நேரத்தில் pitutory gland சுரக்கச் செய்யும் oxytocin என்ற Harmone தான் காரணம். இந்த oxytocin க்கு இன்னொரு பெயரே caring hormone. இது நம்மை யாராவது கேர் பண்ண மாட்டார்களா என ஏங்க வைக்கும். அப்படி கிடைக்காத போது இன்னும் ஸ்ட்ரெஸ் அதிகரித்து மனம் மகிழ்ச்சியற்று தவிக்கிறது. இந்த நேரத்தில் உங்களுக்கு யாருடைய கேரும் கிடைக்கவில்லையென்றால் தயங்காதீர்கள். உடனே நீங்கள் யாருக்காவது விழிப்புணர்ச்சியோடு கேர் எடுத்து உதவி செய்யுங்கள். உங்கள் மனம் அமைதி அடையும். ஏனென்றால் இந்த oxytocin ஹார்மோன்க்கு தேவை ‘கேர்’ அது நீங்கள் பெறுவதாகவும் இருக்கலாம். கொடுப்பதாகவும் இருக்கலாம்.

அன்றொரு நாள்.. பர்மாவில் உள் நாட்டுக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு மக்கள் நாட்டை விட்டே தப்பித்தோம் பிழைத்தோம் என்று குடும்பம் குடும்பமாக வெளியேறுகிறார்கள். அடர்ந்த காடு, மலை மேடு, புதை மணல் என்பதாக அவர்கள் வேகவேகமாக தாண்டிச் செல்லும் போது, அந்த கூட்டத்தில் இருந்த வயதான தந்தை ஒருவர் மற்றவர்களுக்கு ஈடு கொடுத்து நடக்க

முடியாமல் தள்ளாடுகிறார். தன்னால் மற்றவர்கள் பாதிக்கப் பட வேண்டாம் என எண்ணிய அவர், தன் மகனை அழைத்து, 'என்னால் அதிகம் நடக்க முடியவில்லை. என்னால் உங்களுக்கு சிரமம் வேண்டாம். நான் இப்படியே இங்கேயே இருந்து விடுகிறேன். என்னைப் பற்றிக் கவலைப் படாமல் நீங்கள் உங்கள் பயணத்தைத் தொடருங்கள்' என்று பிடிவாதமாக சொல்கிறார். தந்தையால் நடக்க முடியவில்லை தான். ஆனால் அவரை எப்படி தன்னந்தனியே அந்த அத்துவானக் காட்டில் விட்டுச் செல்வது என்று யோசித்த மகன், தந்தையிடம் தன் மகனை, அவரின் சிறு பேரப் பிள்ளையைக் கொடுத்து, 'அப்பா, இவனாலும் நடக்க முடியவில்லை. தூக்கிக் கொண்டு போவது எனக்கும் சிரமமாக இருக்கிறது. நீங்கள் இங்கேயே இவனை வைத்துக் கொள்ளுங்கள், இனி, இவன் உங்கள் பொறுப்பு' என்று தன் மகனை தன் தந்தை வசம் கொடுக்கிறார். தன் உயிரைப் பற்றிக் கவலைப் படாத அந்த பெரியவர் பேரப் பிள்ளையை மகன் இங்கு விட்டுச் செல்ல போகிறான் என்றவுடன் பதைபதைத்துப் போகிறார். இந்த சிறு பிள்ளையை உன்னால் கூட்டிக் கொண்டு போக முடியவில்லையென்றால், நான் கூட்டி வருகிறேன் என்று சிறுவனை வாரி அணைத்துக் கொண்டு, அவனை பாதுகாக்க வேண்டுமே எனஉந்துதலோடு, வேகவேகமாக நடந்து, மற்றவர்களுடன் சேர்ந்து நாடு கடக்கிறார். இந்த உண்மைக் கதை நமக்கு சொல்வது ஒன்றுதான். விருப்பமும் பொறுப்பும் இருந்தால் எதுவும் ஸ்ட்ரெஸ் இல்லை. இருந்தாலும் அந்த ஸ்ட்ரெஸ்ஸால் நன்மையே விளையும். அது உண்மையில் உடலில் திடத்தையும் வேகத்தையும் அளித்து தனக்கு முன் எழும் எந்த சவாலையும் எதிர் கொண்டு வெற்றியையும் மகிழ்ச்சியையும் தருகிறது. அதை நாம் புரிந்து கொள்ளும்போது, நம் மனநிலை நேர்மறையாக மாறும்போது எந்த சூழ்நிலையும் மகிழ்ச்சியானதாக மாறிவிடுகிறது.

# ஊக்கம் பெற

மனித எண்ணங்கள் பலவிதம் அவர்கள் ஒவ்வொரு நொடியிலும் முகங் கொடுக்கும் சூழ்நிலைகளைப் போலவே. அதனால்தானே மறதி சிலவேளைகளில் வரப்பிரசாதமாக அமைகின்றது!

மகிழ்ச்சியான தருணங்களில் சிறு மனக்கசப்பு ஏற்பட்டாலும் அதனை ஆழமாகக் கருதிக் குறைபட்டுக் கொள்வதில் பெரும்பாலானோர் சிரத்தை காட்ட மாட்டார்கள். அதற்கு மாறாக கவலையான தருணங்களில் ஏற்படும் சிறுமகிழ்ச்சியை எண்ணி நிறைவடைப வர்கள் மிக அரிது.

அப்படியானவர்களுக்கு ஆறுதல் எனும் பெயரில் அளிக்கப்படும் சில அனுதாபங்கள் சிலவேளைகளில் பாதிக்கப் பட்டவர்களை இன்னுமின்னும் கவலையில் ஆழ்த்தும் அதேநேரம் அவர்களது தன்னம் பிக்கையைப் பலவீனப் படுத்தி தாழ்வு மனப் பான்மையை அதிகரிக்கும்.

கவலையைப் பகிர்ந்து கொள்வதாக எண்ணி அக்கவலைகளை இரட்டிப் பாக்கும் அனுதாபங்களைவிட ஊக்கத்தை உண்டாக்கும் ஆரோக்கியமான ஆறுதல் களும் வழிகாட்டிகளுமே சிறந்தவை.அவை நிச்சயம் அவர்களது மனக்குழப்பங்களைத் தீர்த்துக் தெளிவு பெறுவதற்கான திறவு கோலாகஅமையலாம்.

ஷஹானி முஸவ்விர்
அவிஸ்ஸாவலை.
இலங்கை.



# ஹைக்கூ

•
விடுமுறை நாட்கள்
உணவு தேடி வருகின்றன
வகுப்பறைக்கு குருவிகள்

•
உச்சி வெயிலில் பயணம்
காலுக்கு அடியில் ஒளிந்து கொண்டது
நிழல்

•
கூட்டை கலைக்க மனமில்லை
திசைமாறிய பறவைகள்
திரும்ப கூடும்

•
யாருடைய வருகைக்காக
பூக்கள் தூவுகிறதோ
சாலையோர மரங்கள்

•
அடர் இருட்டில் இலைமறைவில்
விட்டு விட்டு ஒளிவீசுகிறது
மின்மினிப்பூச்சி

•
ஆழிப்பேரலைக்குள் மூழ்கி
மலைமுகட்டில் மறைகிறது சூரியன்
கூடடைய விரைகிறது காகம்

**ச. ராஜ்குமார்,**
திருப்பத்தூர் மாவட்டம்

# ஒருதலை காதலின் வேர்கள்

ஒரு
பூவின் மேல் அமரும் பட்டாம்
பூச்சியை போல்
என் காதல்
உனக்குள் அமர்ந்து பறந்து
எழுகிறது

அந்தியில்
நீ பேசும் ஒவ்வொரு சொல்லின்
சப்தமும்
மஞ்சள்
வெயிலில் கலந்த
ஒலி கலவையாய் ஒளிர்ந்து
ஓடுது

உன்
இதழில் பட்டெழுந்த காற்றின்
முத்தத்தின் ஈரம்
மெதுவாக
சாரல் தூவி என்னை நடுங்க
செய்கிறது

என்
அடர்ந்த இருளில்
கவிதை நெருப்பினில் நினைவுகளை
தீ மூட்டி
தனிமையில் காய்கிறேன்

மர உச்சிக்
கிளையிலிருந்த முறிந்த இலையை
போல்
மேலிருந்து கீழே விழுகிறேன்
உன்
பாதம் பட்டாவது
மீண்டும் தளிரட்டும் என் ஒருதலை
காதலின் வேர்கள் ...

**- கவிஞர் பாக்கி**

## கனியின் சுவையாய்...

திசைகள் எங்கும் மின்னும்
திகட்டா இசையை மீட்டிட
விளைந்த விருந்தே இன்பத்
தேனாய் கூட்டிக் கொழிக்கும்
வசந்தம் வந்திட வானவில்
வண்ணமாக உதிக்கும்

கசந்திடும் துயர்கள் போயிட
காதல் உசுப்பி அசைந்தாடும்
சோலையாய் நெஞ்சில்
அன்பால் முழுகி இசைந்தாடும்

சங்கின் ஒலியில் ஊதும்
தமிழொளி இல்லம் தேடி
வந்தே கனியின் சுவையாய்
சுவைத்து தங்கும் கவிதை
நுங்காய்ப் பருகி இன்பம்
பொங்கும்

**ரஞ்சினி சந்திரமோகன்**
(நிலவழகன்)

## துளிப்பாக்கள்

•
சலனமற்ற நீர்நிலை
மீன்கள் கிடைக்கும்வரை
தொடரும் கொக்கின் தியானமும்
•
மக்கள் முகம் சுளிக்க
ஒரு கழுதை ரசிக்கிறது
மற்றொரு கழுதை கத்துவதை
•
உச்சி வெய்யிலின் ஆசை
புத்தனின் விரலில்
மின்னுகிறது மோதிரமாக
•
வகை வகையாக உண்ணும்
பிச்சைக்காரனின் கனவை சிதைத்தது
ஒரு சில்லறையின் சத்தம்
•
சிறகால் அசைத்த
பறவையின் கூட்டை
அசைத்துப் பார்க்கும் காற்று

**சா.கா.பாரதி ராஜா,**
செங்கல்பட்டு



## ஹைக்கூ

•

பழங்கள் நிறைந்த மரம்
மரமெங்கும் தென்படுகின்றன
ஓடிவிளையாடும் அணில்கள்.

•

அந்தி சாயும் நேரம்
தென்னங்கீற்றை மெருகூட்டுகிறது
மறையும் சூரியன்.

•

திறந்திருக்கும் சன்னல்
தினமும் கேட்கின்றன
புறாக்கள் குனுகும் ஓசை.

•

மரத்தடியில் சருகுகள்
தனித்துவமாய் தெரிகிறது
பழுத்த இலை.

•

மரமெல்லாம் பூக்கள்
நறுமணத்தை கடத்துகிறது
சட்டென வீசும் மென்காற்று.

**ச. கோபிநாத்**

சேலம்

## நேர்காணல் :
## தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன்



கவிஞர் அதியமான்
கவிஞர் செல்வா ஆறுமுகம்
இராம வேல்முருகன்
பாலு கோவிந்தராசன்
கவிஞர் விக்டர்தாஸ்

# எனக்கு நானே போதிமரம்

**கவிஞர் செல்வா ஆறுமுகம்**

ஒரு கருத்த ஒல்லியான தேகம்! அதனுள்ளே அணையாது நிற்பது தமிழ்த் தாகம்! எல்லாரும் வளமையைப் பாடினால் இவர் மட்டும் வறுமையைப் பாடுவார். தமிழ்க்கவிதைக்குழுமங்கள் அனைத்திலும் பங்கு பெற்று அசத்தும் தோழர்.. ஆழ்ந்த தமிழறிவு அடக்கமே அணிகலனாய் வலம் வரும் நண்பர். சமீபத்தில் தனது தன்முனைக் கவிதைத் தொகுப்பான போன்சாய் மரங்கள் எனும் கவிதைத் தொகுப்பை வெளியிட்டவர். ஆம் கவிஞர் செல்வா ஆறுமுகம்தான் அந்தக் கவிஞர் இம்மாதம் தமிழ்நெஞ்சத்திற்காகத் தனது அனுபவங்களைத் தருகிறார். அவரை நேர்காணல் செய்கிறார் நமது ஆசிரியர் குழுவில் உள்ள தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன். இதோ கவிஞரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் கவிஞர் தரும் சூடான சுவையான பதில்களும்... வாசகர்களுக்காக... வாருங்கள் உள்ளே...

1. தங்கள் பெயர் இயற்பெயரா? புனைப்பெயரா?

இயற்பெயர் : செல்வம் முக நூலில் ஏகப்பட்ட செல்வங்கள் இருப்பதால் என் தந்தையின் பெயரை பின்னால் சேர்த்துக்கொண்டு செல்வா ஆறுமுகமாக இருக்கிறேன். அதனால் உங்கள் அனைவரின் மனதிலும் இப்போதும் ஏறுமுகமாகவே இருக்கிறேன்.

2. தமிழ் மீது ஆர்வம் வரக்காரணம் என்ன?

ஆர்வம் எல்லாம் ஒன்றுமில்லை ஆரம்பத்தில் என்னை கட்டாயப்படுத்தி உள்ளே தள்ளினார்கள்.

என் பள்ளிப்பருவத்தில் எனக்கு தமிழாசிரியராக இருந்த ஐயா சட்டையப்பன் அவர்களை சொல்லலாம். இவர்தான் என் தமிழுக்கு பிள்ளையார் சுழி போட்டவர். ஏழாம் வகுப்பு படிக்கும்போது பாரதியார் பிறந்த நாள் விழா பள்ளியில் நடத்தப்பட இருந்தபோது ஒரு சிலரை மட்டும் தெரிவு செய்து ஆளாளுக்கு ஒரு கவிதை எழுதிக்கொண்டு வந்து அதை மேடையில் வாசிக்க வேண்டும் என்று கட்டளை இட்டார்கள்.

நான் வரமாட்டேன் எனக்கு எதுவும் தெரியாது என எவ்வளவு சொல்லியும் என் தமிழாசிரியர் கேட்கவில்லை

வேறு வழியில்லாமல் நானும் கவிதை ஒன்று எழுதிக்கொண்டு அதை மேடை யிலும் வாசித்துவிட்டு ஒரு பரிசினையும் பெற்றேன் என்பதுதான் சிறப்பு.

அது பாரதியின் தலைப்பான : அச்சமில்லை... அச்சமில்லை என்பதாகும். இதுவே என் முதல் கவிதை. பரிசு : எவர்சில்வர் தட்டு - இன்னும் எனக்கு அந்தத் தட்டில்தான் சாப்பாடு. அப்போது பெற்ற அந்தப் பாராட்டு தல்கள்தாம் என் தமிழ் மொழியின் ஆர்வம் எனலாம்.

போன்சாய் மரங்கள் என்ற நூலைத் தஞ்சைத்தமிழ் மன்றத்தில் பேராசிரியர் முனைவர் காந்தி துரை அவர்கள் வெளியிட கவிஞர் செல்வா ஆறுமுகத்தின் துணைவியார் திருமதி செல்வி அவர்கள் முதல் பிரதியைப் பெறுகிறார்



3. வரலாற்றில் முனைவர் பட்டம் பெற்றுள்ளீர்களாமே உண்மையா?

நான் படித்தது முதுகலை வரலாறு. அதன் பிறகு ஆசிரியர் பணிக்குச் செல்லப் பயன்படுமே என்று இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கம் எனும் தலைப்பில்ஆராய்ச்சி செய்து M, Phil. பட்டம் பெற்றேன்

நான் M, Phil. படித்ததாலோ என்னவோ முனைவர் பட்டம் வந்து ஒட்டிக்கொண்டது

4. முனைவர் பட்டம் பெற்றும் ஏன் தனியார் நிறுவனத்தில் வேலை?

அதன் பிறகு வாழ்க்கைப் பயணம் என்னை வேறு பாதைக்கு தானாகவே அழைத்துக்கொண்டுவிட்டது.

ஆசிரியர் வேலை கிடைக்க தாமதமாகிக் கொண்டே வர வர வீட்டில் வறுமை.. வேறு வேலைக்கு ஏதேனும் சென்றாக வேண்டிய கட்டாயம் பசி என்பது... இலட்சியங்களைச் சாகடித்துவிடும் கிடைத்த வேலைகளில் என்னை ஈடுபடுத்திக்கொண்டதில் வயிற்றை கழுவவே வாழ்க்கை என்னைத் தின்றுக்கொண்டிருந்த வேளையில்... ஆசிரியனாக ஆக வேண்டும் என்ற கனவு கடைசி வரை கனவாகவே போய்விட்டது..

5. காவல் துறையில் பணியாற்றினீர்களாமே? எப்போது ஏன் அப் பணியை விட்டுவிட்டீர்கள்?

இதற்கு பதில் எழுதுவதென்றால் நிறைய பக்கங்கள் பிடிக்கும்.

ஆகவே சுருக்கமாகச் சொல்கிறேன். சென்ற கேள்விக்கு ஒரு வரியில் சொல்லியிருப்பேன்... கிடைத்த வேலை களைச் செய்தேன் என்று..அப்படிச் செய்த ஒரு வேலை நான் காவல் துறைக்கு Informer - ஆக இருந்தது

நிறைய கூலி வேலைகள் செய்தேன். அப்படிச் செய்த சில வேலைகளில் கட்டப் பஞ்சாயத்தும் ஒன்று. அப்போது... உள்ளூர் தொழிலதிபர்கள் முதல் அரசு உயர் அதிகாரிகள் வரை பலருக்கும் நான் கையாள். பந்தமாக அவ்வப்போது காவல் நிலையங்களில் விசாணைக்கு கூப்பிடுவார்கள் அப்போது அடிக்கடி சென்று வந்ததில் சில காவல் துறை அதிகாரிகளின் தொடர்பு கிடைக்க Informer-ஆக வரியா...?என கூப்பிட்டார்கள்.. அதற்குப் பணமும்தருகிறேன்என்றதின்பேரில் இரண்டு பக்கமும் உழைக்க ஆரம்பித்தேன்.

Under Ground - ல் வேலையும் செய்வது.... அதை காவல் துறைக்கும் போட்டுக் கொடுப்பது. (டகால்டி வேலை)

இரண்டு பக்கமும் வருமானம் பார்த்தேன். அப்படியே காலம் உருண்டோட ஒரு கால கட்டத்தில் என் உடல் வாகும் பேச்சுத் திறமையும் எதையும் சமாளிக்கும் திறனும் என்னிடம் காவல் துறை கண்ட காரணத்தால் நான் காவல் துறைக்கு முழுநேர ஊழியனாகத் தேவைப்பட்டேன்.

சொந்த ஊரிலேயே வேலை.போக்கு வரத்துக்கு காவல் மிக மகிழ்ச்சியாக நான் என்னை உணர்ந்த நேரம்

ஒரு வருடம்... அதன் பிறகு காலால் துறை.

நானும் சும்மா மூன்று முகம் அலெக்ஸ் பாண்டியன் கணக்கா சும்மா கிழிச்சிட லாம்... பெயர்த்துடலாம் என்று எண்ணித் தான் போனேன். என்ன செய்வது...? நான் என்னை மிகத் துயரமாக என்ன உணர்ந்த நேரம்.

காலால் பணி என்பது..காபி டீ வாங்கி வருவது, உயர் அதிகாரிகளின் வீட்டு வேலைகளை செய்வது... பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திலிருந்து அழைத்து வருவது, நாயை மருத்துவமனைக்கு கூட்டிச் செல்வது... இதுதான். உயர் அதிகாரிகளின் ஏவலாளாகாவே இருந்ததில் என் தன்மானம் எனக்கே எதிரியாக மாறிவிட்டது. நான் இயல்



ஐம்பெரும் கவிஞர்கள் என்றழைக்கப்படும் கவிஞர்(அமரர்) ராஜகுருரத்தினம், கவிஞர் செல்வா ஆறுமுகம், கவிஞர் ராஜ சாரதி, கவிஞர் காதர்பாட்சா, கவிஞர் சையத் யாகூ ப்

பாகவே ரொம்ப திமிர் பிடித்தவன். நான் ஒரு வேலையாளாக வேலை பார்க்க என் உணர்வு (வயசு அப்புடி) ஒத்துபோகவே இல்லை. ஒரு காலகட்டத்தில் என்னை நானே வெறுப்பு கொண்டு வேலையை விட்டு விட்டு வந்துவிட்டேன்.

அதன் பிறகு நடந்ததெல்லாம் இரண்டாம் பாகம் போட்டு எழுதலாம். அவ்வளவு இருக்கிறது..

6. தமிழ்க்கவிதைகளில் எந்த வகைக் கவிதை எழுதப்பிடிக்கும்? எது படிக்கப் பிடிக்கும்?

இந்த நடை அந்த நடை என்றெல்லாம் இல்லை எல்லா நடைகளுமே எழுதப் பிடிக்கும்... படிக்கப் பிடிக்கும்.

படிப்பவரின் உணர்வுகளைத்தட்டி எழுப்பும் வலிமைமிக்கச் சொற்கள் எதுவாயினும் அந்தத்தப் பாவகைக் கேற்ப அது தன் வலிமையை தீர்மானித்துக் கொள்ளும்.

நானும் அப்படிதான் எழுதுகிறேன்.. அப்படிதான் வாசிக்கிறேன்.

7. மங்கலங்கிழாருக்கும் உங்களுக்குமான தொடர்பு என்ன?

இந்தியாவில் மொழி வாரி மாகாணம் பிரிக்கப்பட்டபோது... இன்றைய நம் திருத்தணி ஆந்திர மாநிலத்தோடு இணைக்கப்பட இருந்தது.

அவர் காலத்தில் அமைச்சராக இருந்த எம். பக்தவத்சலம் தலைமையில் தமிழர் மாநாடு ஒன்றை திருத்தணியிலும், அதன் பின்னர் ம.பொ.சி. தலைமையில் ஒரு மாநாடும் நிகழ்த்தினார்.

சித்தூர் மாவட்ட தமிழ்ப் பகுதிகள் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதற்காக காந்திய வழியில் அறப்போராட்டம் நிகழ்த்தி சிறை சென்று உயிர்நீத்தவர் அவரது அறப்போராட்டத்தின் காரணமாகவே இன்றைய நம் திருத்தணி நம் தமிழகத்துடன் இணைக்கப்பட்டது.

இதை கொண்டாடும்விதமாக 2002 ஆம் ஆண்டு திருத்தணி ஊரில் அவரது

பெயரில் ஒரு படிப்பகம் அமைப்பதென தீர்மானிக்கப்பட்டது

அப்போது நான் தமிழ் ஒளி என்ற இலக்கிய அமைப்பின் தமிழ் நாடு மாநில ஒருங்கிணைப்பாளர்.

ஆந்திர மாநில ஒருங்கிணைப்பாளர். நீங்கள் அனைவரும் அறிந்த ஐயா சேலம் பாலன் அவர்கள் இதன் நிறுவனர்: ஐயா கதிர் முத்தையன் அவர்கள்.

இவர்களது அழைப்பின் பேரின் அந்நிகழ்வில் நான் கலந்துகொண்டு அந்த மாநாட்டை சிறப்புற நடத்திக் காட்டினேன். அது மட்டுமல்லாது என் வீட்டில் என் நூலகமாக இருந்த என் நூலகத்தில் இருந்த பல நூற்றுக்கணக்கான புத்தகங்களை அந்தப் பதிப்பகத்திற்கு நண்கொடையாகக் கொடுத்திருந்தேன்.

மங்கலங்கிழாருக்கும் எனக்கும் உள்ளத் தொடர்பு இதுவன்றிவேறொன்றுமில்லை.

இந்த மாநாட்டில் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் அது மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகப் பேராசிரியர் க ப வளனரசு அவர்கள் நிகழ்த்திய உரை.

என் தமிழ் இனப் பற்றுக்கு இவர் ஆற்றிய அந்த மூன்று மணி நேர உரை என் இதயத்தையே இடம் மாற்றி வைத்தது எனலாம்.

நானும் என்னை ஒரு எழுத்தாளனாக என்னை நான் இத்தனை நாள் என்னை நினைத்திருந்த வேளையில்... இவரது பேச்சு என்னை ஒரு உணர்வாளனாக மாற்றியது எனலாம்.

8 உங்கள் வாழ்க்கையைப் புரட்டிப் போட்ட நிகழ்வு எது?

கேள்வி எண் 5 ன் தொடர்ச்சிதான் என் வாழ்க்கையைப் புரட்டிப்போட்ட பதிலாக இரண்டாம் பாகம்.

காவல் துறை வேலையை விட்டுவிட்டேன் என்று சொன்னேன் அல்லவா...அதன் பிறகு நடந்தவை எல்லாமும் சொல்லவே இல்லையே. (எங்கே சொல்ல விட்டிங்க...?)

ம்...

வேலையை விட்டுவிட்டேன் என்று வீட்டில் வந்து சொல்ல தைரியம் இல்லாததால்... (சொன்னாக்கா பெரிய களேபரம் நடக்கும்... தெரியும் எனக்கு...)

அதனால் இதிலிருந்து எப்படித் தப்பிப்பது என யோசித்து ஒரு முடிவெடுத்தேன்.

அதாவது... நான் வீட்டை விட்டு வெளி யேறுவது என்பது..துணிச்சலான முடிவு தான் என்ன செய்வது...வேறு வழி...?

கையில் காலணா காசில்லாமல், மாற்றுத் துணி கூட இல்லாமல், (உள்ளாடையையும் சேர்த்து) எதுவுமே இல்லாமல் வெறுங் கையோடு கிளம்பிவிட்டேன்

இது என் உலகம். நான் ஒரு தேசாந்திரி. வாழுடா மவனே வாழ்க்கையை என்று...

ஆனால் வீட்டில் சொன்னது பொய். அதாவது : ஒரிசாவில் புயல் பேரிடராம்... தமிழகக் காவல் காவல் துறையின் சார்பாக நான் அங்கே செல்கிறேன்..

வருவதற்கு ஒரு மாதமாகும் என்று பொய் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டேன். அப்போதெல்லாம் அலைபேசி இல்லாத காலகட்டம் அது.

இந்தியா முழுவதும் சுற்றினேன்.

கோதாவரி ஆற்றங்கரையில் கனரக வாகனங்கள் கழுவினேன்... கிடைத்த இடத்தில் தூங்கினேன். கிடைத்த இடத்தில் சாப்பிட்டேன். சுவரொட்டிகளைக் கிழித்து அதை போர்த்திக்கொண்டு உறங்கினேன்.

கனரக வாகனங்களில்தான் பெரும்பாலும் இலவசமாகப் பயணித்தேன். குண்டூரில் (ஆந்திரா) காய்கறி மார்க்கெட்டில் மூட்டைத் தூக்கினேன். கிடைத்ததைப் பகிர்ந்து உண்டேன்... நினைத்த இடங்களில் உறங்கினேன்...நொய்டாவில் (உத்திர பிரதேசம்) ஒரு இரவு ஒரு வழிப்பறி கும்பலால் (பத்துக்கும் மேற்பட்டோர்) தாக்கப்பட்டடேன். வழிப்பறி செய்ய வந்தவர்கள் என்னிடம் காசு இல்லை என்பதை அறிந்து வெறுத்துப்போய் நிறைய நிறைய அடித்தார்கள்.ஒருத்தன் இரண்டு பேர் என்றால் சமாளிக்கலாம். (நான் காவல்துறை ஆளாயிற்றே... அப்போது செல்வாவுக்கு செம்ம உடம்பு... சும்மா எஸ்சிஸ் பாடி) ஒருத்தன் இரண்டு பேர் என்றால் சமாளிக்கலாம்.

பத்துப்பதினைந்துபேரென்றால்எப்படி...? உதையை வாங்கி கொண்டு சும்மா இருந்தேன். இப்படி பலஅனுபவங்கள்...

கடலூரில் தொடங்கிய என் பயணம் இந்தியாவின் மூலைமுடுக்குகளுக்கெல் லாம் என்னைப் பயணிக்க வைத்தது...

இந்த காலகட்டத்தில் என்னிடம் ஒரு பைசா இல்லை. மாற்றுத் துணிகூட இல்லை. ஒரேயொரு ஆடைதான் ஆனால் அனைத்து மக்களையும் சந்தித்தேன்... இந்தியாவின் அனைத்து இடங்களிலும் பயணித்தேன்... அனைத்துமக்களையும் அறிந்தேன். ஒரு நாளைக்கு மூன்று வேளையும் உண்டேன்.. நான் என்னை மனிதனாக உணர்ந்தேன்...

இதன் மூலம் நான் தெரிந்து கொண்டது ஒன்றே ஒன்றுதான்... அதாவது... ஒரு மனிதன் வாழ்வதற்கு காசு தேவையில்லை... வாழ வேண்டும் என நினைக்கும்போதுதான் காசு தேவைப் படுகிறது என்பதை.

கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஒரு தேசாந்திரி வாழ்க்கையை. வாழ்ந்தேன். இதைப் பாடமாக எனக்கு உணர்த்திய



பணி செய்யும் அலுவலகத்தில்...

இந்த நிகழ்வே என் வாழ்க்கையைப் புரட்டிப்போட்ட நிகழ்வு எனலாம்.

வீட்டை விட்டு வெளியேறிய பின்பே புத்தன் ஞானம் அறிந்தானாம். நானும் அவ்வாறே.. அவனுக்கு கிடைத்தது போதிமரம்...எனக்கு நானே போதி மரம்.

9. சென்னை மொழியில் அசத்துவது எப்படி?

அது வேறொண்ணுமில்லே வாத்தியாரே. இந்த டாணாக்காரன் (போலீசு காரன்) ஜோலியிலே குந்துக்கினுகீறது மின்னாடி கொஞ்ச தபா மெட்றாசு காசி மேட்டுல மீனு யாவாரம் பாத்துக்கினுக்கிருந்தேன். அப்போ வந்து நாக்குல குந்திகிச்சி இந்த மெட்றாசு பாஷை. உடு நைனா... இதுவும் திருநவேலி தமிழ் மாரி ஒரு பாரம்பரியம் சொல்லுற தமிழ்த்தானே வாத்தியாரே...

இதுக்கெல்லாம் மாமே நானு ஜகா வாங்க மாட்டேன் ஆமா. உட்டாலங்கடி கிரி கிரி.. நாம பாஷை ஊசிப் போவா வட கரி ஆமாம் மாமே. கொய்யால... எவனாச்சும் மெட்றாசு பாஷையை காமா சோமான்னு சொன்னான்னு வெச்சுக்க அவனை நெஞ்சங் கூட்டுல இருக்குற மாஞ்சா சோத்த எடுத்துருவேன் ஆமா.

சொல்லிவெய்யி அவங்களாண்ட... யாருகிட்ட...;? கொய்யால...வந்துருவேன் வகுந்து...




நூல்வெளியீட்டு விழாவில் கவிஞர் செல்வா ஆறுமுகம்

10. உங்கள் முதல் நூல் எது? எப்போது வெளியிட்டீர்கள்?

மதிப்பிற்குரிய இந்திய ஜனாதிபதி ஐயா அப்துல் கலாம் அவர்கள் 2002- ல் இந்திய ஜனாதிபதி ஆனபோது. அவரைப் போற்றிப் புகழும் விதமாக ஒரு கவிதை எழுதினேன்.

ஒரேயொரு கவிதைதான் 20 - பக்கங்கள் அச்சு செலவுக்கு அப்போது காசில்லை..கைப்பட 50 க்கும் மேற்பட்ட பிரதிகள் எழுங்கள் எழுதி.. அப்போது கடலூர் மாவட்ட அரிமா சங்க நிர்வாகியாக இருந்த டாக்டர் திரு திருமலை மூலமாக பாரதிதாசன் கலை இலக்கிய நற்பணி மன்றத்தின் சார்பாக வெளியிடப்பட்டது.இதுவே என் முதல் நூல் கையெழுத்துப்பிரதியாக வெளிவந்தது)

11. உங்கள் நூல்வெளியிட்டின் சிறப்பு என்ன?

சிறப்பு எனச் சொல்ல வேண்டுமெனில்... என்னுடைய ‘போன்சாய் மரங்கள்’ பற்றிச் சொல்லலாம். இது தன்முனைக் கவிதைகளின் தொகுப்பு. அதன் அணிந்துரை ஐயா. இராம வேல்முருகன். இதுவே ஒரு சிறப்புதான்... பட்டி தொட்டி முதல் செல்வா எனும் பெயரை உச்சரித்துக்கொண்டே இருக்கிறது. இன்னுமொரு சிறப்பு என்றால் இந்த நூலை தஞ்சைத் தமிழ் மன்றம் வெளியிட்டது இதுவே மிகச் சிறப்பு எனலாம்...

12. நீங்கள் பணியாற்றும் நிறுவனத்தில் உங்கள் பணி என்ன?

Seniorexecutive–Logistics–சரக்காளுனர்.

13. உங்கள் நிறுவனத்தில் தமிழைப் பயன்படுத்த வலியுறுத்துவீர்களா?

அதற்கான வாய்ப்புகள் வரும்போது அதை வலியுறுத்துவேன்.

14. பணம் வாழ்க்கைக்கு அவசியமா? மனிதர் அவசியமா?

கேள்வி எண் 7 க்கான பதில்தான்...

பணத்தை வைத்துக்கொண்டு நாம் நமது உள்கட்டமைப்புகளை மட்டுமே தீர்மானிக்க முடியும். உணர்வுகளின் கட்டமைப்பை பணம் என்பதைத் தாண்டித்தான் உணர முடியும். அதற்கு என் வீட்டை விட்டு வெளியேறிய பயணம் நல்ல உதாரணம்.

15. விக்டர்தாஸ் என்னும் இரத்தினம் குறித்து...

கவிதைகளின் காலக் குறிப்பு...
சொல் வன வித்தகன்...
அனைத்தையும் தாண்டி....
மனித நேயன்....
உணர்வுகளின் மதிப்பாளன்.
அனைத்திற்கும் மேலே அவன் ஒரு தமிழ் இலக்கியத்தின் Encyclopedia என் தமிழ்ச்சேவைக் குழுமத்தின் முதலாம் ஆண்டுவிழாவில் வெளியிட்ட காவியக் களஞ்சியம் நூலுக்கு இவர் எழுதிக்கொடுத்த அணிந்துரை உலகில் இதுவரை வெளியிட்டப் புத்தகங்களுக் கெல்லாம் மிகச்சிறந்த அணிந்துரை. ஏனெனில்... விக்டரே - ஒரு காவியம். விக்டர் - என் உடன் பிறப்பு.

இதற்கும் மேலே என்ன சொல்ல...

16. பொன்மணிதாசன் எனும் தங்கம் குறித்து...

இவர் தங்கமல்ல... தமிழின் அங்கம்..

நான் இவரை வாழும் கண்ணதாசன் என்றே சொல்வேன். என் நட்பு வட்டத்தில் நான் உணருகிற இமயம். என் பல்கலைக் கழகம். நான் கவிதைப் பழகும் கரும்பலகை.

17. கவிக்கோ துரைவசந்தராசன் எனும் சிங்கம் குறித்து...

ஆகா... என்னை உசுப்பி விட்டத் தங்கம். என் உணர்வை தட்டியெழுப்பிய சிங்கம். கவிக்கோ என்பதன் அர்த்தம் அறிந்த உண்மை கோ. அது – கவிக்கோ துரைவசந்தராசன்

18. தங்கள் வாழ்க்கைத் துணையைப் பற்றி..

எனது வாழ்க்கையை தி மு / தி பி - (திருமணத்திற்கு முன்பு.. திருமணத்திற்கு பின்பு என இரண்டு வகையாக எழுதலாம்) ஏனெனில்... நான் திருமணத் திற்கு முன்பு - மனிதன் மாதிரி... திருமணத்திற்கு பின்பு - முழு மனிதன். காரணம் அவள்.. என் தோழி... என் தோழன்... என் காதலி... என் மனைவி... என எல்லாமே அவள்தான்.. எனக்குள்ளும் ஒரு ஆக்க சக்தி இருக்கிறது என என்னுள் உணர வைத்த ஒருத்தி... உன்னால் முடியும் என ஒவ்வொரு முறையும் என்னைத் தட்டியெழுப்பும் ஒரு வேட்கை.

இவள் மட்டும் எனக்கு வாய்க்காமல் இருந்திருந்தால் என் வாழ்க்கைப் பயணம் வேறு திசையில் சென்றிருக்கும்.

19. தங்கள் குழந்தைகள் பற்றி.. எப்படியெல்லாம் என் பிள்ளைகள் இருக்க வேண்டும் என நினைத்திருந்தேனோ... அதன் படியே என் பிள்ளைகள் இருவருமே பெண் பிள்ளைகள். ஓவியம்... கைவினைப் பொருட்கள் தயாரித்தாள்... படிப்பிலும் ஆளுமை... கவிதை எழுதுதல்.... பள்ளிக்கூடத்தில் நடக்கும் பேச்சுப் போட்டி. கட்டுரைப் போட்டி - என எல்லாவற்றிலும் அசத்துகிற பிள்ளைகள்... (எல்லாமே என் DNA - லிருந்து கடத்தப்பட்டிருக்க வேண்டும் என நினைக்கிறேன்) இவர்கள் என்மீது வைத்திருக்கும் அன்பு அந்த வானத்தை விடவும் பெரிது...

எல்லோரது வீட்டிலும் பிள்ளைகள் அப்பா வீட்டிற்கு வரும்போது... அய்யய்யோ அப்பா வந்தாச்சு.. என்பதாகத் தான் இருக்கும்... என் வீட்டில் நான் உள்ளே நுழைந்தால் -

ஹையா... அப்பாவந்தாச்சுஎன்பதாகத்தான் இருக்கும்.

அய்யய்யோ... அப்பா வந்தாச்சு. ஹையா... அப்பா வந்தாச்சு... இரண்டுக்கு மான வேறுபாடுகளை நீங்கள் உணர வேண்டுமெனில் அது என்வீடு ஒன்றுதான்..

என் பிள்ளைகள். என் பேர் சொல்லும் பிள்ளைகள். இறைவனுக்கு நன்றி.

20. ஞாயிறு ஒரு நாள் விடுமுறையிலும் இலக்கியப்பணிக்காக அலைவதை இல்லத்தில் கடிந்து கொள்கிறார்களா?

இல்லை

### 21. ஒரு வரியில் பதில் தருக

1. ஆண்டாள்

கடவுளைக் காதலித்து மானுடத்திற்கே ஒரு மரியாதை தந்த மகத்துவம்.

2. மீரா

கண்ணனின் உள்ளத்தையே மீட்டிய தம்புராவின் தந்தி..

3. மணிமேகலை

சீத்தலைச்சாத்தனார் உலக மக்களுக்கு வழங்கிய இலக்கிய அட்சயப் பாத்திரம்.

4. கண்ணகி

காப்பியத்தின் வழியே காவியமாய் ஆனவள்... தமிழினத்தின் கதாநாயகி.

5. மாதவி

இலக்கியம் அறிந்தோரால் மட்டுமே அறியப்பட்ட கற்புக்கரசி... இன்னும் இவளை பற்றி அறியாமலேயே இருக்கிறது தமிழினம்.

6. கம்பன்

கடவுளின் காதலையெல்லாம் விருத்தத்தில் கவி கவியாய் பாடிவிட்டு... அம்பிகாபதி காதலுக்காக ஒரு வெறுத்த கவிகூட எழுதாமல் போன உலக மகா கவிஞன்.

7. இளங்கோவடிகள்

உலகப் பெரும் காப்பியத்தை ஒரு காற்சிலம்பில் வைத்து கதை சொன்ன கவிக்கோ.

8. வள்ளுவன்

ஏழே சொற்களில் ஏழுலகை ஆளுகிற எழுத்தாணியின் பிரம்மன்.

9. கரிகாற்சோழன்

உலகிற்கே நீர் மேலாண்மையைத் தந்த சோழ வல்லாண்மை.

10. இராசராசன்

சோழப் பேரரசின் உச்சம். இம் மன்னனைப் பற்றி கற்பனை இல்லாத ஒரு முழு வரலாறு இன்னும் எழுதப்படவே இல்லை.

11. கவிதை எப்படி எழுதுவது...?

உணர்வுகளைக் கொண்டு எழுதுங்கள்.

22. தமிழ்நெஞ்சம் இதழைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

கடல் கடந்தும் தமிழ் வளர்க்கும் தமிழ்நெஞ்சம் இது. கவிஞர்கள் அனைவருக்குமான தமிழ் மஞ்சம் இது.

23. தமிழ்நெஞ்சம் அமின் உங்கள் பார்வையில்...

கடல் தாண்டிப் போனாலும் தமிழை நேசிப்பவர் அமின்... இலக்கிய உலகில் படைப்பாளிகளைப் போற்றும் இன்னொரு ஜமீன்.

# சுந்தரகாண்டம்



## நௌஷாத் கான். லி

என் பெயர் ரசூல், நான் ஒரு கிறுக்கன் மனதில் தோன்றியதை எல்லாம் குழந்தைத் தனமாக எழுதுவேன் என்னை நேசிக்கும் பலர் நிறைய வாசி அதன் பின் எழுது என்பார்கள் ஆனால் இந்த பாலை மண்ணில் எனக்கு கிடைத்த தனிமையில் எழுதாமல் தூங்கி விட்டால் அன்று என்னவோ போல் இருக்கும் பத்து மணிநேரம் வேலை என்றாலும் அறை செல்லும் மீதமுள்ள சொற்ப நேரத்தில் உறக்கத்தை விட நிறைய எழுதுவதையே விரும்புவேன் வாசிக்க வேண்டும் என்று மனம் சொன்னாலும் என்னை சுற்றியுள்ள மனிதர்களின் மூலம், பயணங்களின் மூலம் ,நாட்டு நடப்புகளின்மூலம் தினம் தினம் கிடைக்கும் கருவை கொண்டு ஒரு நாளைக்கு ஒரு கதையாவது எழுதினால் தான் தூக்கமே வரும் ..ஊரில் கதையெல்லாம் எழுத நேரம் கிடைத்தாலும் எழுத முடியாது ஏனென்றால் நான் கதை எழுதுவது அம்மாவுக்கு பிடிக்காது, படித்த மனைவிக்கோ அறவே பிடிக்காது. இப்போது குழந்தை பிறந்து விட்டதால் ஊர் போன நேரத்தில் கதையை பற்றியெல்லாம் சிந்தித்தது கூட கிடையாது.

ஒரு மாத கால விடுமுறை போனதே தெரியவில்லை, இதுவரை அப்பா இறப்பு மற்றும் என் முதல் குழந்தை இறப்பு தவிர மற்ற எந்த துன்பத்திற்கும் கண்கலங்காதவன், தவமிருந்து பெற்ற என் இரண்டாம் குழந்தையை விட்டு திரும்ப அமீரகம் வரும் போது என்னையும் அறியாமல் கண் கலங்கி விட்டேன். நான்கு மாத குழந்தை என்றாலும் அந்த ஒரு மாதம் முழுவதும் என்னையே ஒட்டி கொண்டாள்.. அவள் சிரிப்பு ,அழுகை, வாசம் இப்பவும் என்னை சுற்றியே ஞாபகங்களாய் சுற்றி திரிகின்றன. இன்னும் பன்னிரண்டு மாசம் இந்த பாலையின் வனவாசத்தை எப்படி கடக்க போகிறேன் என்றே தெரியவில்லை.

என் முதல் காதலுக்கு பிறகு ஆத்மார்த்தமாய் காதல் செய்தது என் மகளை தான். அவள் தவழப்போவது, நடக்க போவது, பேசப்போவது என அவள் வாழ்வின் ஒவ்வொரு நொடி துளிகளையும் காணமுடியாத அயல்நாட்டுக்காரர்களில் நானும் ஒருவன் என்று நினைக்கும் போதே அந்த பாழாய் போன கண்ணீர் என்னை எட்டி பார்க்காமல் இல்லை. இதுவரை அடுத்தவர் முன்னாடி நான் அழுவதையே விரும்பாதவன், எவ்வளவு துன்பம் வந்த போதும் சிரித்த முகத்துடன் போலி புன்னகை மன்னனை போலவே வெளியே காட்சி அளிப்பேன் ஏனோ இந்த முறை என்னால் என் கண்ணீரை அடக்க முடியவில்லை. என் கண்ணீரை பார்த்து அம்மா அழுததும், மனைவியின் முகம் வாடி போனதும், ஒன்றுமே தெரியவில்லையென்றாலும் எங்களை பார்த்தே அந்த நான்கு மாத குழந்தையும் அழுதது ஏனோ இதயத்தில் இமைக்கா நொடிகளாய் இணைந்து விட்டது.

இந்த பாழாய் போன பணத்துக்காக - குடும்ப தேவைக்காக இந்த வன வாசத்தை வரமாய் ஏற்றுக்கொள்ளும் துர்பாக்கியசாலிகளில் நானும் ஒருவன் என்று நினைக்கும் போதே துக்கம் தொண்டையை அடைக்கிறது.

நிச்சயம் காலங்கள் மாறும். இன்ஷா அல்லாஹ் திரும்ப நான் ஊர் செல்லும் போது என் மகள் அத்தா என்று சொல்லும் அந்த நாள் தான் என் வாழ்வின் சுந்தரகாண்டம்.

பல கவலைகளோடு திரும்ப அயல்நாடு வருவது வருத்தம் என்றால் கம்பெனி கொடுத்த கனெக்சன் பிளைட் டிக்கெட் அதனினும் கொடுமை அதுவும் இந்தி பேசக்கூடிய பாம்பேயில் பன்னிரண்டு மணிநேர வெய்ட்டிங் நரகம் தான்.

அந்த ஒரு நாள் எப்படி போகுமோ என்று சிந்திக்க தொடங்கும் போதே பைத்தியம் பிடிக்காத குறைதான், ஏர்போர்ட்டில் நெட் யூஸ் பண்ணலாம் என்றால் இந்திய நாட்டு சிம் என்னிடம் இல்லை ஏனென்றால் ஊர் செல்லும் போது அம்மாவின் சிம்மை பயன்படுத்தி விட்டு, திரும்ப அயலகம் வரும் போது ஊர் சிம்மை அம்மாவிடமே கொடுத்து விட்டு வந்து விட்டேன்.

நெட் இல்லாமல் கொஞ்சம் வெறுமையாக இருந்தது, ஊர் ஞாபகங் களை ஏர்போட்டில் இருந்து கொண்டு அசை போட்டால் கண்ணீர் மட்டும் தான் மிஞ்சும். எழுதியே பழக்கப் பட்டவன் அந்த தனிமையை போக்க வேறு வழியில்லாமல் கையில் இருந்த சிறுகதை தொகுப்பு இரண்டை ஒரு இரண்டு மணிநேரத்தில் படித்து முடித்தேன் ,ஒவ்வொரு நூலும் ஒரு இருநூற்றி ஐம்பது பக்கங்களாவது இருக்கும் எப்படி தான் படித்து முடித்தேன் என்று எனக்கே தெரியவில்லை.அதன் பின் ஒரு வழியாக தமிழ்நாட்டை சார்ந்த ஒரு பையனை ஒரு ஐந்து மணி நேர தனிமைக்கு பிறகு அந்த பாம்பே ஏர்போர்ட்டில் கண்டு பிடித்தேன், பிளைட் வரும் வரை இருவரும் ஊர் விஷயங்களை பேசி கொண்டிருந்தோம் பசி வயிறை கிள்ளியது வேறு வழியில்லாமல் ரூபாய் நூறுக்கு ஒரு டீயும் ரூபாய் நூற்றி எண்பதுக்கு தோசையும் வேண்டா வெறுப்பாக பசி கொடுமைக்காக வாங்கி சாப்பிட்டோம். அந்த பாம்பே ஏர்போர்ட்டில் அந்த தோசைக்கு அவன் வைத்த தேங்காய் சட்டினி ஜில்லுன்னு இருந்துச்சு, மிளகாய் சட்டினி ஊறுகாய் போல இருந்துச்சு, சாம்பாருக்கு பதில் புளி குழம்பு என்ன கருமம் பிடிச்ச ஊர்டா என்று திட்டி கொண்டு என் தமிழ்நாட்டின் நினைவுகளை அசைபோட்டு கொண்டே சாப்பிட்டு முடித்தோம்.

ஒரு வழியாக பிளைட் வந்ததும் அந்த தமிழ் நாட்டை சார்ந்த நபரிடம் விடை பெற்று கொண்டு அபுதாபி வந்து சேர்ந்தேன். பணம் மட்டும் இருந்துச் சுன்னா தமிழ்நாட்டை போல ஒரு சொர்க்கம் இல்லை, பாழாய் போன பணம் இல்லாததால பாஷை தெரியாத ஊர்ல கஷ்டப்பட்டு பாஷை கத்துக்கிட்டு கண்ட நாட்டுக்காரன் கிட்ட கைகட்டி வேலை பார்க்குறோம். பத்துமணிநேரம் வேலை, வெள்ளிக்கிழமை லீவு, யாருமில்லாத தனிமைன்னு வாழ்க்கை வெறுமையா போய்க்கிட்டு இருந்தாலும் ஊர்ல பேசுற தொலைபேசி உரையாடல் தான் காயப்பட்ட மனசுக்கு கொஞ்சம் ஆறுதலாய் அமையுது ,அதுவும் இந்த ஊர்ல எல்லாம் நெட் இல்லைன்னா பைத்தியமே பிடிச்சிடும் ஏதோ ஆண்டவன் புண்ணியத்துல நெட் வசதி இருக்கு ,ஏதோ அந்த வசதியாலே நாட்டு நடப்பு, சினிமா, ஊர் விஷயங்கள்னு தெரிஞ்சிக்க முடியுது ..என்ன தான் கிடைச்சாலும் நம்ம சொந்த ஊர் போல வருமா சொல்லுங்க.

ஆசாபாசங்களை தொலைச்சிட்டு குடும்பத்துக்காக போராடுற நாங்க மெழுகு வர்த்தி தான், வெளிச்சம் வெளியே தெரிஞ் சாலும் வலி எங்களை தவிர யாருக்குமே தெரியுறது இல்லை.

எங்க வனவாசத்துக்கு பன்னிரண்டு மாசத்துக்கு ஒரு முறை ஒரு மாசம் மட்டும் தான் தீர்வு கிடைக்கும் ஆனா ஆயுசுக்கும் தீர்வு கிடைக்குறது சந்தேகம் தான். என்னை போன்ற அயல் நாட்டுக்காரர்கள் அந்த ஒரு மாத சுந்தரகாண்டத்தின் நினைவுகளிலேயே தான் உயிர் வாழ்கிறார்கள்.

# நூல் மதிப்புரை

## ஆண் - ஆத்திசூடி

நூலாசிரியர் :
முனைவர் நா.நளினிதேவி
வைகை பதிப்பகம்
விலை : ரூ 40 /- ( india )
தொடர்புகளுக்கு : 97913 52820




சமகால அவ்வையாரின் அமுத மொழியாக பெண் ஆத்திசூடி, ஆண் ஆத்திசூடி என இரு நூல்கள் வந்துள்ளன.

இரண்டையும் படித்தாயிற்று. எனினும், முதலில் கருத்தை கவர்ந்த ஆண்-ஆத்திசூடி. எப்போதும், பெண்களுக்கே அறிவுரை வழங்கும் உலகில், ஆணுக்கென சில வரையறைகளையும், அறிவுரைகளையும் தைரியமாக, விவேகத்துடன், உறுதியுடன் முன் வைத்திருக்கும் இந்நூல் போற்றத்தக்கது.

இக்காலச் சூழலுக்கு மிகவும் தேவையான ஒன்று. எவ்வகை நூலும் காலத்திற்கு ஏற்ற வகையில் புத்தாக்கம் செய்யப்பட வேண்டும்.

நான் வாசித்த வரையில் குரான் இன்று வரை புத்தாக்கம் செய்ய தேவையற்ற, இன்று வரை சிறப்பான வாழ்வியல் கருத்துக்களை கொண்ட நூலாக உணர்கிறேன்.

அவ்வகையில் ஆத்திசூடிக்கு புத்தாக்கமும், ஆண், பெண் இருபாலருக்குமான வாழ்வியல் விதிகளை வகுக்க வேண்டிய கட்டாயம் இருந்தது உண்மையே.

அதை, மிகச் சரியான நேரத்தில் முனைவர் நா.நளினிதேவி அம்மா செய்திருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும்.

சிறப்பான படங்களுடன், ஆங்கில மொழியாக்கமும், தமிழில் உரையுடனும் கூடிய ஆண் ஆத்திசூடி, ஆண், பெண் மற்றும் குழந்தைகள் அனைவரும் படித்து அதன் வழி நடக்க வேண்டிய நூல் ஆகும்.

வள்ளுவரோ, அவ்வையோ யாராயினும் அவர்தம் புகழுக்காக அன்றி, அவர்தம் கருத்துக்களை நடுநிலையோடு ஆய்ந்து அல்லவை நீக்கி, நல்லவை இணைத்து புதியதோர் ஆத்திசூடியை எழுதி இருப்பது, அவ்வையும், வள்ளுவரும் மகிழக்கூடிய நற்செயலாகும்.

அவ்வையும், வள்ளுவரும் இருந்திருந்தால் உறுதியாக திருத்திய பிரதியை முன் வைத்திருப்பார்கள்.

அனைத்து ஆத்திசூடியையும் சொல்ல இயலாது, சொல்லவும்கூடாது, படித்து, சுவைத்து வழிநடங்கள் ஆண்களே ... ஆண்கள், அவ்வழி நடக்க துணை செய்யுங்கள் பெண்களே...

பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசையால் வீழ்ந்தவர் கோடி. இன்றைய காலக்கட்டத்தில் முகநூலிலும், பிற இணைய வழியிலும் வாழ்வு இணையரை விடுத்து பிற ஆணிடமும், பெண்ணிடம் தகாத சொற்களை

பா வேந்தன்


அன்புவல்லி

பொதுவெளியில் நாகரிகம் அல்லது பெண்ணியம் என்ற பெயரில் பேசுவது வாடிக்கையாக உள்ளது.

பெண்ணையோ, ஆணையோ இவ் வகை சொற்கள் ஊடாட்டத்துக்கு உட் படுத்துவதும், பிறன் மனை நாடா பேராண் மையை இருபாலரும் மறந்த நிலையும் வளர்கின்ற இந்நாளில்...

அம்மையார் அவர்கள் சுதந்திரம் வேறு, பிறன் மனை நாடா பேராண்மை வேறு, நட்பு வேறு, காதல் வேறு என வகைப்படுத்தி இருப்பதோடு, பெண்ணை காதல் என்ற பெயரில் ஏமாற்றாதே என்று எழுதியிருப்பது, இன்றைய காலத்திற்கு சாலப்பொருந்துவதாகும்.

- இணையரை போற்று
- ஊடாட்டம் தவிர்த்திடு
- நெருங்கி வஞ்சியேல்
- மையல் தவிர்

போன்ற ஆத்திசூடி பெண்ணை ஏமாற்றாதேஎன்பதின்அடிப்படையிலும்...

ஆணே அனைத்தும், ஆளுமை, தானே அனைத்தும் என்ற இணையரின் மெல்லிய உணர்வை மதிக்காது நடக்கும் ஆண்களுக்கு சவுக்கடியாக சில ஆத்திசூடி...

- ஆண் மையம் அகற்று
- எல்லாம் உனதன்று
- போர்க்களம் அன்று வீடு (Do not convert home into a battle ground by your unfair demands)
- கூறாக்காதே பெண் (Divide not women for petty selfish motives)

கூறாக்காதே பெண் என்ற ஆத்திசூடியை ஓராண்டுக்கு முன் படித்திருந்தால் நம்பியிருக்க மாட்டேன், ஒரு ஆண் இதை செய்ய மாட்டான் என்றே சொல்லி யிருப்பேன். ஆனால் இன்றைய நிலை அதுவல்ல என்பதே உண்மை.

இது போன்று, ஒரு ஆண் எப்படி பெண்ணை போற்ற வேண்டும் என்பதையும் மிக நேர்த்தியாக நூல் முழுதும் சொல்லி இருக்கிறார்.

மிக அற்புதமான நூல். அறப்பிறழ்வுகளை அகற்றுவதற்கான அற்புத நூல்.

ஆங்கில மொழியாக்கத்தை பாவேந்தன் அவர்களும், தமிழ் உரையினை அன்புவல்லி தங்கவேல் அவர்களும் வழங்கி உள்ளனர்.

பல இடங்களில், தமிழில் பொதுவாக சொல்லபட்டிருப்பதை, ஆங்கிலத்தில் குறிப்பாக சொல்லியிருப்பது அற்புதம்.

Demy size ல் இருபாலருக்குமான ஆத்திசூடியை ஒரு புத்தகமாக போட்டிருக்கலாம் என்பது என் விருப்பம். ஏனெனில் பள்ளி மாணவர்களும் மற்றோரும் எளிதில் கைபையில் எடுத்து செல்லலாம், கூடவே இருபாலருக்குமான ஆத்திசூடியும் ஒரு சேர பரிசளிக்க பயன் தரும் என்பது என் யோசனை அல்லது அவா.

இக்காலத்திற்கு தேவையான நூல். வருங்கால சந்ததியினருக்கு ஆண் பெண் இருவரிடையே நிலவ வேண்டிய அறத்தை இருப்பத்தியோராம் நூற்றாண்டு அவ்வையாக முனைவர். நா.நளினிதேவி அம்மா எழுதியருளி உள்ளார் என்றே சொல்ல வேண்டும்.

வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் அம்மா...

**- லீலா அம்மு**



# காலாவதியற்ற இலட்சியம்

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

காய்ந்து போன இலைகளுக்கிடையே முதன் முதலாக விழும் நீர்த்துளியாய் ஹனியாவின் தொண்டையை நனைத்தது அவள் பருகிய இரு சொட்டுத் தண்ணீர்.

"என்ன நீ..? இப்படி வேலை செய்து செய்தே நோயாளி ஆகியாச்சா..? குடும்பத்துக்கும் பெண் பிள்ளைகளுக்குமா ஓயாம கஷ்டப்பட்ட... இப்ப ஒன்ன ஏறெடுத்துப் பார்க்கக் கூட யாருமே இல்லையே..." ஹனியாவின் நிலை கண்டு நொந்து போனாள்.. அவர்கள் முன்னர் குடியிருந்த வீட்டின் அயல் வீட்டவளும் ஹனியாவின் நெருங்கிய தோழியுமான முனீரா.

"பிள்ளைகளென்றாலும் ஒரு நன்றிக்கடன் இருக்கோணும்" மீண்டுமாய் அலட்டிக் கொண்டவளைக் கண்டு கொள்ளாமல் தன் பேச்சை மாற்றினாள் ஹனியா. நேரத்தின் நகர்வு வைத்தியசாலையின் பார்வையாளர்களை வெளியேற்ற ஆயத்தம் செய்ய அவளிடமிருந்து விடை பெற்ற முனீராவை வழியனுப்பியவள் கட்டிலில் சாய்ந்தாள் மெதுவாக.

கரடுமுரடுமாய் ஆங்காங்கே கொப்புளம் ஒட்டிக் கொண்ட கைகள் அவளைப் பார்த்து மெதுவாக நகைத்தன.

தன் ஆரம்பக் கல்வி முதல் உயர்தரக் கல்வி வரை அனைத்தையுமே தனது ஊரான கண்டியிலேயே முடித்தவளின் பேரவா தானொரு மிகச் சிறந்த வைத்தியராக வர வேண்டும் என்பது தான்.

வசதியில் குறையில்லாத ஹனியாவுக்கு வாழ்வில் முதல் தடையாக அமைந்தது அவளது திருமணம் தான். அதன் பின்னரான எல்லாமே கனவு போல் நடந்தேற கணவன் சியாமுக்கு அவள் ஒரு வீட்டுக்குள் அடங்கிய பெட்டிப் பாம்பாக இருப்பதில் தான் ஆசையும் கூட.

மூன்று பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்து அவர்களை வளர்த்து அதிலேயே தன் வாழ்நாளைக் கழித்த ஹனியாவுக்கு வயதொன்றும் அப்படி அதிகமில்லை.

தன் நினைவுகளுக்குள் சுழன்றவளை திடுக்கிட வைத்தது ஒரு சிறுவனின் அழு குரல்.

வாகன விபத்தில் சிக்கித்தவித்த சிறுவனுக்கு மருத்துவம் செய்ய ஓடோடி வந்த வைத்தியர் பத்மாவை ஆச்சரியப்பட வைத்தது அங்கே நடந்த காட்சி ஆம் அங்கே சிறுவனுக்கான முதலுதவி நடந்து கொண்டிருந்தது. இத்தனை கச்சிதமாக அந்த சிறுவனைக் கையாளும் அந்த வைத்தியர் யார்?

ஆம் சந்தேகமின்றி அவள் ஹனியா தான். இழக்காத அவளது மாறாத் துணிச்சலுடன் அங்கே சிங்கப் பெண்ணாக ஹனியா.

# ரயிலில்...

நாழிக் கணக்காய் உச்சம் கொடுத்த
உச்சி சூரியன் மெல்லச் சாய
அந்தி மாலை கொஞ்சமாய் குளிர
மழை மேகங்கள் பஞ்சமின்றிப் படர்ந்தன.

உடல் தடவும் தென்றல்
உயிர் நாடியைத் தீண்ட
ஊமையாய் படுத்திருந்த உணர்வுகள்
உயிர் பெற்று எழுந்தன

கொஞ்சமாய் மழை தூற
தஞ்சமாய் வளி குளிர
நெஞ்சம் நிறைந்தது,
காதல் காப்பியமொன்றிற்கு
பீடிகை இட்டது.

முன்னூறு மைல் மணி வேகத்தில் ஓடி
மூச்சிரைக்க ஏறி
முழு மூச்சாய் தேடி
இருக்கை ஒன்றை பெறுவதே
ரயிலில் தேவைக்கான விதி.

காதல்
விதி விலக்கானது
மதியை மயக்க வல்லது
நியதியின் படி நடைபெறுவது.

அன்றைய ரயிலோ
ஆரவாரம் அற்றது
பயணிகளைக் குறைவாய்ப் பெற்றது
அன்பின் தண்டவாளத்தில்
ஓட விடப்பட்டது

அன்று மட்டுமே மெதுவாய் ஏறி
நிம்மதியாய் ஓர் இருக்கையை
பெற்றுக் கொண்டேன்

மூன்றாம் வகுப்பு
கொம்பார்ட்மென்ட்டின்
வலது பக்கமாய்
முதல் வரிசையில்
ஜன்னலோர இருக்கை அது.

கொஞ்சமாய் தூறும் மழையை
கொஞ்சலாமென்று
ஜன்னலைத் திறந்தால்
மஞ்சல் நிறத் துப்பட்டா
மறையாமல் தெரியுது
என் கண்கள் சுழல மறுக்குது.

அடுத்த பிளாட்பாரத்தில் இருந்தவள்
அங்குமிங்கும் பார்க்கிறாள்.
சட்டென்று கையை விட்டு
குடையொன்றை எடுக்கிறாள்.



குடைக்குள் குறுகியவள்,
குறும்பாய் நடக்கிறாள்.
குதூகலமாய் வந்து,
ரயிலில் தொற்றிக் கொள்கிறாள்.

என்னெதிரே வந்தவள்,
எனை ஏற இறங்கப் பார்க்கிறாள்.
ஏதோ எண்ணியவளாய்
எனை விட்டுச் செல்கிறாள்.

கொம்பார்ட்மன்டை வலம் வந்தவள்
காலி இடம் ஒன்றை பார்க்கிறாள்
என்னெதிரே அமர்கிறாள்
ஏதேதோ முணுமுணுக்கிறாள்!

தங்கத்தோடு பயணிக்காதே என
அரசு எச்சரித்து இருந்தும் - அவள்
தங்கத் தோடு அணிந்திருந்தாள்!
தங்கமும் ஜொலித்தது !
அவளும் ஜொலித்தாள் !

என் மனம் கவர்ந்த அவள்
என் எதிரே இருப்பதால்
எண்ணங்கள் சுழலுது - ஆனாலும்
எதுவும் செய்ய முடியவில்லை !

ஜன்னலோரமாய் சாய்கிறேன்
மௌனத்தின் மொழியில் மழையோடு
கொஞ்சம் பேசலாமென்று...

தெறித்து விழுந்த
ஒற்றை மழைத்துளி சட்டென்று
முன்னெற்றியில்
முத்தமொன்றை பதித்தது

முத்தத்தின் ஸ்பரிசம்
மழையின் மொழியை
மொழிபெயர்த்தது - அது
எனக்கு தெம்பைத் தந்தது

சமயம் பார்த்து
அவள் கருவிழிக்குள்
என் கண்ணைப் பதித்து
மின்னலாய் ஒரு புன்னகையை
தூது விட்டேன்.

சட்டென்று நிமிர்ந்தவள்,
சற்றே சுதாகரித்துக் கொண்டாள்
கண்ணசைத்து
கொஞ்சமாய் புன்முறுவலித்தாள்.

அந்த ரயில்
குளிர் மிகு காட்டுக்குள்
பாசமெனும் சுரங்க வழியாக
அன்பெனும் தண்டவாளத்தில்
காதலின் கோட்டைக்குள்
இன்ப மழையில்
நனைந்து சென்றது.

கொஞ்சமாய்ப் பேசி
அறிமுகப் படுத்திக் கொண்டோம்.
மௌனமும், கண் ஜாடையும்,
புன்னகையும்
அதிகமாய்ப் பேசின.

அவள்
ஆஸ்பத்திரியிலிருந்து வந்திருந்தாள்.
பலவீனமான இதயம் கொண்டவள்.
அவளுக்கு இன்னும்
ஆறுமாதமே ஆயுளென
உறுதிப் படுத்தப் பட்டவள்
என அறிமுகம் செய்தாள்.

கடுகதியாய் ஓடும் ரயிலுக்கு
சடுதியாய் பிரேக் போட்டது போல
ஆயிற்று எனக்கு
குலுக்கி எடுத்தது
சட்டென்று நின்றது.

மீண்டும் மௌனம்
செயற்கைப் புன்னகை
கொஞ்சம் ஆறுதல் வார்த்தைகள்
என உதிர்த்தேன்.

புன்னகைத்தாள்!
கதவை நோக்கி நகர்ந்து
காற்றுக்கு பறந்த கருங்குழலை
சரி செய்தபடி
போய் வருகிறேன் என்றாள்.

அடுத்த தரிப்பிடத்தில் இறங்கி
குதூகலமாய்...
நடந்து
தேய்ந்து
மறைந்து
காணாமல் போனாள்.

**- முபர்ரிஜ்**

வெண்பாப் பயணம் 7






# ஞாபகமறதி

சோப்புசீப்பு வெச்செ.
  படுக்கையும் கட்டிவெச்சே.
ஆப்பிள் அரைடசனும்,
  ஆரஞ்சும், கோப்பும்
மறக்காம எல்லாமே
  வெச்சாலும், வெக்க
மறந்தது எந்தன்
  மனசு.

சத்யராஜ்குமார் கிரிஷ்னசாமி.

.

குழந்தை இறப்பு
  குமுறும் நிகழ்வாய்ப்
பழகி யமனிதரைப்
  பார்த்தும் - வழக்கமாய்ப்
புன்னகை சிந்தாது
  புண்ணாய்ப் புழுங்கியே
இன்பம் மறந்த
  உணர்வு.

திலகவதி பாஸ்கர்

.

அடியில்தான் வைத்தேனா?
  அல்ல(து) இடுக்கா?
நடுவிலா? எங்கடா
  வைத்தேன்? - அடயெந்தப்
பக்கம்? மறந்தஎன்
  மண்டைக்குக் கொஞ்சமும்
அக்கறை இல்லையே
  ஏன்.

கு.லோகநாதன், மதுரை.

பூட்டி வெளிவந்து
  போகக் கிளம்பியபின்
ஆட்டியே பார்க்க
  அதைமறந்தேன், - வாட்டமுற
மீண்டுவந்து பூட்டை
  மெதுவாய் அசைத்தறியத்
தூண்டிவிடும் தொல்லை
  மனத்து.

கண்ணன் கோபாலன்

.

கண்ணோடு சேர்ந்திருந்த
  கண்ணாடி தேடுகிறேன்
எண்ணெழுத்தை ஓதநான்
  என்செய்வேன்? – மண்படிய
விட்டேனா? வெங்காயம்
  வெட்டுகையில் போட்டேனா?
கிட்டாமல் போனதெங்கே?
  கேள்

விசு. இம்மானுவேல், பெங்களூரு

.

அணிந்திருந்த ஒன்றினை
  அங்கெங்கே வைத்துப்
பணியாற்றச் சென்றபின்பே
  பார்த்தேன்! மணியினை
வீணாக்கித் தேடிவந்தேன்!
  மீண்டும் விரைவாகக்
காணா ததுவருமோ
  கைக்கு.?

மாலதி திரு

துண்டினைத் தேடித்
துணைவரிடம் கேட்கின்றேன்
வண்டார் குழலி
வருத்தமேன் - செண்டாடும்
உன்றனது தோளில்
உரிமையாய் உள்ளதை
இன்று மறந்தாயோ
இங்கு .

சரஸ்வதி பாஸ்கரன்

.
பாங்காய்க் குளிர்பதனப்
பெட்டி திறந்தபின்
ஆங்கெதற்காய் வந்தேன்?
மறந்தினள் - ஏங்கும்
மனத்தை ஒருநிலைக்கு
மாற்றின் மறதிதீரும்;
எனதினிய நெஞ்சே
இரங்கு.

இராணி லட்சுமி

.
தோளிலே துண்டு
தொலைந்ததாய் தேடுகிறேன்
கேளுவார் பேசுவர்
கேனையென - நாளுமெந்தன்
வேலை இதுவென
வேதனிக்கும் பெண்டாட்டி
மூளைப் பிசகென
சொல்!

பொன்மணிதாசன்

.
சாவியினைத் தேடடவே
சாபம்தான் பெற்றேனோ
பாவி தினமும்
பரிதவித்தேன்..கூவி
அழைத்தாலும் யாரும்
அதைத்தேட இல்லை
இழையோடும் துன்பமே
இங்கு..

மைதிலி தயாளன்

.
கண்ணாடி காணாமல்
கண்டயிடம் தேடினேன்
எண்ணத்தில் உள்ளதை
எப்படிக் கூறுவேன்
எங்கெல்லாம் வைத்தேனோ
என்னவெல்லாம் செய்தேனோ
நங்கைக்குத் தேடி
நவில்.

செல்வி முத்து

.

பத்திரத் தைப்படித்துப்
பலகை யிடுக்கிலிட்டேன்.
சொத்தைச் சரிபார்க்கும்
சோதனையில் - வைத்த
இடந்தெரியாமல் இல்லாளை
எங்கெனக் கேட்டேன்
மடையன்விற் றதனை
மறந்து

நெடுவை இரவீந்திரன்

.
நெஞ்சமெங்கும் பாயும்
நெருடலினால் வாடுகின்றேன்
துஞ்சும் மனது
துயிலையும்_ வஞ்சிக்க
நெஞ்சமதின் கேள்வி
நெடியதாய்ச் சுட்டதே
கொஞ்சுமொழி எங்கே?
கொடிது.

வா.சண்முகம்

.
கண்ணிருந்தும் காணா
திருக்கும் குருடரைக்
கண்டதுண்டா யாரும்
ககனத்தில் - கண்டிடுவீர்
கண்ணாடி மாட்டி
கதறுகிறேன் காலையில்
கண்ணாடி காணவில்லை
யென்று

ஞால ரவிச்சந்திரன்

.
கண்ணாடி வைத்தயிடம்
காணாமல் அங்குமிங்கும்
பண்பாடி உள்ளம்
படபடத்தேன் - கண்ணாடி
பார்த்ததன் பின்னே
பகுத்துணர்ந்தேன் என்தலைமேல்
கோத்ததனை வைத்தவிதம்
கூர்ந்து!

பத்மினி கேசவகுமார்

.
அலைபேசி, சாவி,
அலுவலட்டை நாளும்
தொலைந்ததெனத் தேடித்
தொடர்வேன் - வலைவீச
அம்மாவை இன்றும்
அழைக்கின்றேன்! அம்மாவோ
பெம்மானைச் சேர்ந்தாள்
பிரிந்து!

சுந்தர ராசன்

வெண்பாப் பயணம் 7

கண்ணில் இடத்தானே
   கொண்டிட்டேன் அஞ்சனத்தை!
வண்ணமலர் சூடிய
   வேளையில் - எண்ணத்தில்
கொண்டதும் எங்கே
   கழன்றது? மன்னவன்
கண்டிடும்முன் வார்ப்பேன்
   கயல்.

வானதி சந்திரசேகரன்

.
இங்கேதான் வைத்தேன்
   இரண்டுகொத்துச் சாவியை
எங்கேதான் போனதோ?
   எட்டடி - வங்கிற்குள்
வாழும் எலியொன்று
   வந்தெடுத்துப் போனதோ?
பாழும் வளைக்குள்ளே
   பார்.

சு.வி.லட்சுமி

.
என்றோ துளிர்த்த
   இளவயதுக் காதலை
இன்னும் மறக்க
   இயலவில்லை - என்மனைவி
இன்றுசொன்ன காய்கறியை
   எண்ணம் மறந்திருச்சே
என்னகாய் வாங்க
   இனி?

க.சங்கரபாண்டியன் , வடுகபட்டி

.
மறந்துதான் போகின்றேன்
   மற்றவை நாளும்
திறந்த புலன்வழி
   தாக்கி யடிக்க
பிறப்பழிக்கும் கோவிந்தா
   பக்தியோங்கி நாமம்
மறவா மனமாக
   மாற்று

சுரேஷ் ஸ்ரீனிவாசன், கோவை

.
கண்ணிமைக்கும் நேரமே
   காணாமல் சென்றதே
பெண்ணின் அழகினில்
   பேருவகை  - மென்காதின்
வண்ணங்கள் கொண்ட
   வகையான காதணி
எண்ணம் நிறைவாக
   ஏற்பு/

பாண்டிச்செல்வி கருப்பசாமி
கோவை

சின்ன வயதில்
   சிறந்த கவிதைகளை
என்னமாய்க் கற்றுளத்தில்
   ஏற்றினேன் - இன்றவைகள்
என்மறதி தானுண்ட
   ஏப்பமாய்ப் போயினவே
என்னவென்று சொல்வேன்
   இதை?

ஜாய் சத்தியா

.
கண்ணாடி யெங்கேயோ
   காணாமற் போனதென்று
மண்ணுக்கும் விண்ணுக்கு
   மாய்குதித்தேன் - பெண்டாட்டி
வந்தாள் நகைத்தாள்
   வருந்தியவென் மூக்கின்மே
லிந்தாவென் றாளே
   எடுத்து

இரா.அழகர்சாமி

.
மறதியெனும் நோய்க்கு
   மருத்துவம் பார்த்தேன்!
சிறப்பாய் எழுதினார்
   தீர! - மறவா(து)
இருநூறு நீட்டிவிட்டே
   இன்பமுடன் வந்தேன்!
மருந்துவாங்கும் தாளை
   மறந்து!

பாவலர் அருணா செல்வம்

.
இப்பதான் பார்த்தேன்
   இருந்துச்சே இங்கதான்
இப்படிப் போய்வந்தேன்
   எப்படியோ- தப்பிடுச்சே
வச்சபொருள் இவ்வீட்டில்
   வச்சயிடம் இல்லாமல்
பிச்சை யெடுக்கும்
   பொழப்பு

செ.இராசா

.
நினைவு நிலையோ
   மறப்பு மதுபோல்
கனவும் கலையோ
   கடிதாய் -  மனமது
மாறக் கொடிதே
   மறதியும் மாமனத்
தேறல் மடுக்கக்
   களி!

சீனிவாசன் பழநி
,

கண்ணில் அணிந்திருந்தும்
காணாமல் நான்தேட
எண்ணம் சிதறியதால்
ஏமாற்றம் - கண்ணாடி
எங்கே இருக்கிறதோ
ஏனோ தடுமாற்றம்
தங்கை உதவ
தணிந்து.

நிறைமதி நீலமேகம், பெண்ணாடம்.

.

எங்கதா(ன்) போச்சோ
இளவட்ட நொண்டிமறி
பங்கப் படுறே(ன்)நா
பாவம்டா – மங்கா
கெடமுழுக்க தேடியும்
கிட்டலை யேடா
அடகிறுக்கா தோளப்பார்
தொட்டு.

பொன். இனியன்

.

நாள்காட்டித் தாள்கிழிக்க
நான்மறந்து, வானவில்லாய்த்
தோள்காட்டும் பேரெழில்
தோழியவள் ~ வாள்காட்டும்
கண்ணால் வசையுண்டேன்;
காலச் சுழலினிலே
கண்ணைக் கெடுக்கும்
கருத்து....!

ஜ.க.நாகப்பன்

.

எடுத்துத் துடைத்தேன்
எனதுமூக் காடி
விடுத்த இடங்கள்
விளங்கா - கடுத்தே
அடுத்ததாய் நானும்
அலைமோதித் தேட
விடுக்கா திருந்தது
மூக்கு.

கு. கமலசரஸ்வதி

.

குளிக்கச் செலும்முன்பு
துண்டைநான் தேடி
வெளியேவீட் டுள்ளே
விரையக் - களித்துச்
சிரிக்கின்றான் என்மகன்தான்
சிந்தையின்றித் தோளில்
சரிந்திருக்கும் காட்சிதனைக்
கண்டு.

பாவலர் கருமலைத்தமிழாழன்

.

நேரிசை வெண்பா

எடுக்க மறக்கின்றேன்
என்றன்கைப் பேசி
அடுக்களை வேலையில்
ஆழ்ந்து - கடுப்பில்
எடுக்காத கைப்பேசி
வேண்டுமா வென்று
வெடுக்கெனக் கேட்டாரே
வெந்து

கவிதா சீனிவாசன்

.

எனைத்தேடி நாள்தோறும்
நானும் இளைத்தேன்
தனைத்தேடும் வாழ்விதனில்
தாழா! - வினைத்தேடி
வந்ததனால் வாய்ப்பிதனின்
மேன்மை தெரியாது
சிந்திப்ப தோசொல்
சிறப்பு?

சுரேஜமீ

.

தோள்மேலே ஆட்டினைத்
தொங்கவிட்டுத் தானலையும்
ஆள்போலத் தானானேன்
ஐயகோ ? - தாள்கட்டு
சட்டைக்குள் தானிருக்க
தானாய்ந்தே ஓய்ந்தபின்
சட்டையை வீசச்
சரிந்து.

படைக்களப் பாவலர் துரை. மூர்த்தி

.

தத்துவம் பேசியே
தாகந் தணிப்பவளே
நித்திரையால் நானும்
நினைவிழந்தேன் - பித்தனாய்
சித்திரை மாதத்தில்
சித்திரம் நீவரையச்
சித்தந் தெளிதல்
சிறப்பு

கவிஞர் வீக பொன்னையா

.

வைத்த பொருளது
வைத்தயிடம் தானிருக்க
வைத்த மனமோ
வருந்திநித்தம் - மாத்திநான்
யோசிக்க வாசலிலே
யாசித்து நிற்பவன்போல்
மாசுண்ட கண்கொண்டேன்
நான்.

சேந்தன்குடிச் செந்தமிழாழன்

.

வெண்பாப் பயணம் 7

சவரத் தகடெடுக்கச்
　சட்டென்று செல்லும்
விவரமா யென்னை
　விளிக்கத் – தவறா(து)
ஆவலாய்ப் பேசியபின்
　அங்கிங்கு தேடியே
பாவ(ம்) அலைகிறேன்
　பார்.

செல்லமுத்து பெரியசாமி
.

கண்ணில் இருக்கின்ற
　கண்ணாடி எங்கென்று
பண்ணிய சேட்டைகள்
　பார்த்திட - மண்ணில்
இதுபோல எண்ணார்
　எவரும் மனத்துள்
மதியுமே கெட்டேன்
　மறந்து .

கவிஞர்.அ.முத்துசாமி , தாரமங்கலம் .
.

எங்கேவச் சேனோ
　எவரு மெடுத்தாரோ
மங்கித்தான் போச்சே
　மதியுந்தான்! தங்க
மதிப்பை யறியாம
　லேமறந்து போனேன்
பதியை நினைத்தால்
　பயம்.

நா.பாண்டியராசா.
.




தமிழ்நெஞ்சம்

இம்மாத வெளியீடு

24 புதிய எழுத்தாளர்கள்
இந்நூலில் எழுதி
இருக்கிறார்கள்.
வரவேற்பை விரும்புகிறோம்.

நூலின் விலை
160 இந்திய ரூபாய் மட்டுமே...

தொடர்புகளுக்கு

+ 91 9841978029



# வெண்பா போட்டி (பயணம்) 8

போட்டியின் கால அளவு - மே 26 முதல் ஜூன் 12 வரை முழுமையாகப் படிக்கவும்

## தலைப்பு : பிறந்தநாள் வாழ்த்து வெண்பா

ஒருவர் பல வெண்பாக்கள் எழுதினாலும், முதல் வெண்பா மட்டுமே போட்டிக்காக ஏற்கப்படும்

வணக்கம் பாவலர்களே.....

தமிழ்நெஞ்சம் மாத இதழ் ஆசிரியரும், நூல் பதிப்பாளரும், வளரும் கவிஞர்களின், எழுத்தாளர்களின் நூல்களை வடிவமைக்கும் ஒப்பற்ற கலைஞரும், எல்லார்க்கும் இனிய நண்பருமான திரு தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள் சொல்வதே இம்மாதப் போட்டியின் தலைப்பாகும்...

இதோ எ - கா வெண்பா....

**எண்ணம்போல் வாழ்க்கை**
**இனிக்கட்டும்; தொட்டுவிடும்**
**விண்ணன்ன செல்வம்**
**விளையட்டும்; - திண்ணம்**
**உயிரான செம்மொழியாய்**
**உன்றன் புகழும்**
**பயிராய்ச் செழிக்கட்டும்**
**பார்.**




அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே...அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.

காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்....

தளர்வுகள் : - தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....
தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு, மற்றும் தமிழ்நெஞ்சம் அமின்

# நல்ல வார்த்தைகள் மிகப்பெரிய தர்மமாகப் போற்றப்படும்

**ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்**
**காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.**

குறள் விளக்கம்:

ஆக்கமும் கேடும் சொல்லிலிருந்தே வெளிப்படுவதால் ஒருவர் தான் சொல்லு கிற சொல்லில் தவறு நேராமல் கவனம் கொள்ளல் வேண்டும்.

நேசங்களை பகிர்ந்து கொள்வதன் ஆரம்பம் வார்த்தைகள்; அதே நேசங்கள் இனிமே வேண்டவே வேண்டாமென மனம் தூர எறிய காரணமாவதும் வார்த்தைகளால்தான். சந்தோஷங்களை அள்ளி தருகின்ற வார்த்தைகள் தான் சமாதானப் படுத்தவே முடியாத அளவுக்கு கஷ்டங்களையும் கொட்டித் தருகின்றது.

பெரும் சாம்ராஜ்யங்கள் வீழவும் ஒரு கற்பகத் தருவான குடும்பங்கள் சிதையவும்கூட காரணமாகின்றது! அவ்வ ளவுக்கு பலம் வாய்ந்தது வார்த்தைகள்!!!

மனம் அதிகம் சஞ்சலப்பட்டு நிற்கும் நேரங்களில் ஒரு ஆறுதல் வார்த்தையைத் தான் அதிக பட்சமா எதிர்ப் பார்ப்போம். கண்ணீர் விட்டு துயரங்கள கழுவும் நேரங்களில் ஆழ்மன எண்ணங்கள்வார்த்தைகளாகத்தான் வெளியேறும்.

ஏதோ ஒரு துரோகம் துவண்டு போக செய்யும் நொடிகளில், மனம் நம்பிக்கையான வார்த்தைகள் தான் உள்வாங்கும்.. விரக்தியின் விளிம்பில் மனசு அல்லாடும் தருணங்களில் ஒரு நேசத்தின் வார்த்தைகளுக்கு தான் மனசு தலை சாய்க்கும்!!!

எல்லா உணர்வுகளையும் வெளிப் படுத்த மனிதன் கொண்ட ஒரே வழி வார்த்தைகள்!!

வண்ணமயமான வார்த்தைகள் ஒளிமயப் படுத்தும்.., வெட்டுவாள் போன்ற வார்த்தை களால் உயிரறுத்து போகும்!!

அதியுயர் நேசங்களால் பேசப் படும் ஒவ்வொரு வார்த்தையும் கொண்டாடப்படும்! அதே போல பலமடங்காக இரணப்படுத்தும்!!

வாக்குறுதிகளாக மொழியப்பட்ட வார்த்தைகள் பாதுகாக்கப்பட வேண் டியதே! மறுக்கப்படும் நொடிகள் மீளா விளைவைத் தந்து செல்லும்!!

வார்த்தைகள் அம்புகள் போல.., தெரிந்தோ தெரியாமலோ வில்லை விட்டு நீங்கினால் சேதாரங்கள் எதிர்க்கொள்ள வேண்டியது நிச்சயம்!!

ஒரு வார்த்தை;
வாழவும் வைக்கும்..,
மடியவும் வைக்கும்..,
தூக்கியும் நிறுத்தும்..,
தூரவும் எறியும்..,
வேடிக்கையாகவும் நோக்கும்..,
வடுவாகவும் மாறும்..!

- அஃப்ரா ஜமீல்

# திருவிழா

திருவிழா வரும்போதெல்லாம்
அவள் ஞாபகம்
வராமல் போவதில்லை

சுவாமி தூக்கிக் கொண்டு
அவள் வசிக்கும்
தெருவுக்குள் போகும் போது
வாசலில் அவசர அவசரமாக
தண்ணீர் தெளிப்பதும்
கோலம் போடுவதும்
அர்ச்சனைத் தட்டைக்
கொடுக்கும் போது
ஓரக்கண்ணால் பார்ப்பதும்
உள்ளுக்குள்
ஆலங்கட்டி மழையல்லவா
பெய்து நனைக்கும்!

திருவிழா காணச் செல்லும் போது
பட்டுப் பாவாடை சரசரக்க
என் வீடுதாண்டும் போதும்
சடையை முன்னும் பின்னும்
போட்டுக் கொண்டு
யாரையோ பார்ப்பது போல்
திரும்பித் திரும்பிப் பார்த்ததும்
இன்னமும்
உள்ளுக்குள்
இன்பஊற்றாகவே இருக்கிறதே!

விதவிதமாக ராட்டினங்கள்
விதவிதமான கடைகள்
எல்லாவற்றிலும்
சுற்றுவது போலவும்
வாங்குவது போலவும்
நீ நின்று நின்று சென்றதும்
நானும் பின்னே
நண்பர்கள் புடைசூழ
வந்ததும்
இன்னும்தான்
என் மனசுக்குள்
சுற்றிச் சுற்றி வருகிறதே!

இராம.வேல்முருகன்
வலங்கைமான்

கனகா பாலன்

# பேருந்தில்...

அக்கா தங்கையாக இருக்கக்கூடும், அப்படித்தானிருந்தது முகஜாடை.

என் கணிப்பின்படி அக்காவாக இருந்தவள், 150 கிராம் அளவிலான சேவுப் பொட்டலத்திலிருந்து இரண்டு மூன்றாக அள்ளியள்ளி தின்று கொண்டிருந்தாள். தின்பதிலும் பேச்சிலும் மும்முரமாக இருந்ததில், கம்பியின் மேல் வைத்திருந்த, அவளது வலது கைமுட்டி பாதியளவு வெளியிலிருந்தது.

"ஏமா, கையத் தூக்கி உள்ள போடும்மா" டிரைவர் சத்தமாகச் சொல்ல, சுதாரித்துக் கொண்டாள்.

தொடர்ந்த அவர்களின் உரையாடலிலிருந்து புரிந்து கொள்ள முடிந்தது. தங்கையின் மகளை தனிக்குடித்தனத்திற்கு அமர்த்தப் போகிறார்களென்று.

"பொங்கப் பெருக்கன்னு என்னால முடிஞ்சத வாங்கிக் கொடுத்துட்டேங்க்கா, பீரோலு வேணும்னு கேட்டா, அவுக அப்பா இப்ப முடியாதுன்ட்டாக ,புள்ளை மொகம் சோந்து போச்சு " வருத்தத்துடன் சொன்னாள் தங்கை.

"கையோட வாங்கிக்கொடுத்துட்டா நல்லாருக்கும்ல.."

"என்ன செய்ய,பணமில்லைங்காகளே இவுக..." என்றவள் சற்று நிறுத்தி.. "அதுக்குத் தான் நான் ஒரு ரோசனை வச்சிருக்கேன். அவுகளுக்குத் தெரியாம ,நான் வேலை செஞ்சி ஒதுக்குன ரூவா கொஞ்சம் இருக்கு, அதுக்கு மேலே கடனவுடன வாங்கி, அந்தப் புள்ளக்கி வாங்கிக் கொடுக்கலாம்னு பாக்கேன்.."

"உம்புருஷன் எப்படி? என்ன? ஏது?ன்னு கேட்டு பெரச்சனை பண்ணுவாம்ல.."

"நான் ஒரேமுட்டா எங்க அக்கா நம்ம பிள்ளைக்கி வாங்கிக் குடுக்கான்னு சொன்னாக் கேள்வியில்லைல்ல.."

"சரிப்பட்டு வருமாட்டி இது "

"நீ எதுக்கு பயப்படுத? நானுல்ல அஞ்சனும்.."

அக்காக்காரிக்கு தங்கை நம்மிடம் எதிர்பார்க்கிறாளோ என்று தோன்றியிருக்கும் போல.. இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், தங்கையிடமிருந்த தண்ணீர் பாட்டிலை வாங்கி மடக்கு மடக்கென்று குடித்தாள்.

சரியாக அந்நேரம் பார்த்து, மகளிடமிருந்து பெரியம்மா போனுக்கு கால் வந்தது. பேசிவிட்டு வைத்தவள். "மேலுக்குப் போடுத சோப்பு வாங்கியாரச் சொல்லுதா, பேரு என்னவோ சொன்னாளே, மறந்து போச்சே " என்று மறுபடியும் போன் பண்ணப் போனாள்.

அதற்குள் "அதாங்க்கா, செவப்பு காயிதத்துல சுத்தி இருக்குமே" நாலைந்து சோப்புப் பெயர்களை மாற்றி மாற்றி சொல்லிக் கொண்டார்கள். கடைசியில் "ஆங்... செந்தாலு" கண்டுபிடித்துவிட்டாள் மகளின் அம்மா.

அந்த "செந்தாலு" ஒலித்த தொணியில் கமகமன்னு வாசத்தோடு இருந்த என் கிராமத்து மொழிய மட்டும் இறக்கிவைக்க முடியாது போல எப்பவுமே...

# துன்பத்தில் துணைநிற்பது நட்பே

பாவலர் கருமலைத்தமிழாழன்

இன்பத்தில் உறவினரோ பங்கு கொண்டே
இனிமையாகப் பொழுதுபோக்க துணையாய் நிற்பர்
அன்புதனைப் பொழிவதுபோல் அணைத்த வாறே
அருகமர்ந்து கதைபேசி மகிழ்வர் போற்றி !
என்பினையும் தருவதாக உறுதி கூறி
எழிலான சொற்களிலே குளிர வைப்பர்
இன்னல்தாம் வந்தபோதோ கையை விட்டே
இருக்கின்ற இடம்விட்டு மறைந்து போவர் !

பணத்தாள்கள் மூட்டையாகக் குவிந்தி ருந்தும்
பாசத்தாய் மனைவிமக்கள் இறந்த போது
மணமில்லாத் தாள்பூவாய் அழகி ருந்தும்
மனத்துயரைப் போக்குதற்கோ முடிந்தி டாது !
பிணத்திற்கோ அதன்மீது போர்த்தும் பூவில்
பிறக்குமணம் உணர்தற்கே இயலாப் போல
கணமானப் பதவிகளோ கூட்டம் சேர்க்கும்
கவலைகளுக்கு மருந்தாக உதவி டாது !

கர்ணனுக்கோ அவன்செய்த தர்மம் வந்து
கடைசியிலே துணையாக நிற்க வில்லை
தர்மத்தைக் குலைத்ததுரி யோதன னுக்கோ
தக்கநட்பே துன்பத்தில் தோளா யிற்று !
அர்ப்பணிப்பு குணமுள்ள நட்பொன் றேதான்
அரும்உயிரைக் கொடுத்தேனும் துயரைப் போக்கும்
கர்வந்தான் இல்லாமல் பழகி மானம்
காத்தின்னல் களைவதெல்லாம் உண்மை நட்பே !



# கண்ணுக்குள்ளே உன்ன வச்சேன்

வரப்போரம் வாய்க்காலில் சலசலன்னு நீரோட
வாட்டமா உட்காந்து வஞ்சியுன நினைச்சேனே
நெஞ்சாங் கூட்டுக்குள்ள நிறைஞ்சு நிற்பவளே
நினைப்பால துடிக்கும் ஓசை கேட்கலையா..?

கம்மாக் கரையிலே காதலோடு நின்னேனே
கள்ளப் பார்வையோடு கடந்து போயிட்ட
பார்த்த நொடியில பேச்சும் வரல
பக்குவமா பேச தோதாய் அமையல...

சும்மாடு சுமந்து சும்மாவே போனாலும்
கவனம் சிதறுது கலப்ப கைநழுவுது
மானாட்டம் ஓடுற அன்னமாட்டம் நடக்குற
மாமனிடம் பேசம மல்லுக்கு நிக்குற...

உண்ணவும் பிடிக்கல உறங்கவும் பிடிக்கல
உன்னோட பேசிட ஏங்கித் தவிக்கிறேன்
பூத்த மல்லிகைய பாத்து நோகுறேன்
பொஞ்சாதி நீயாக கனவும் காணுறேன்...

ஆசையைச் சொல்ல அன்றாடம் நினைக்கிறேன்
அத்தையிடம் பேசிடும் நாளுக்கு ஏங்குறேன்
சம்மதமுன்னு சாடையிலே நீயும் சொல்லிப்புட்டா
பரிசம் போட மாமனும் வந்துவிடுவேன்

காலங்கள் ஓடுது ஆசையும் கூடுது
மடியில் கிடந்திட மனசும் ஏங்குது
கண்ணுக்குள்ளே உன்ன வைச்சேன் கண்ணம்மா
என் கனவு நனவாவது எப்பம்மா...?

**காயத்ரிசுந்தர்**
**சென்னை**

# கண்ணுக்குள்ளே உன்ன வச்சேன்

அத்த மக நெனப்பு உள்ளத்தில் சிக்குதடி
பாக்காத பொழுதெல்லாம் வீணாகப்  போகுதடி
இதயத்தில் உனக்கென்று இடமும் இருக்குதடி
நித்தம் கண்டிடவே மனசும் தவிக்குதடி

ராத்திரியில் வருகின்ற கனவுகளும் நீயடி
விடிகிறதே காலை அது கூட ஏனடி
கண்களில் எந்நாளும் சேர்ந்திட்ட மங்கையே
ஓரக்கண்ணால் பார்க்காதே தடுமாறுது நெஞ்சமே

நாணத்தில் சிரிக்கையிலே வேர்த்தே நனைகிறேன்
புன்னகைப் பூக்கையிலே எனை நானும் மறக்கிறேன்
கொசுவத்தில் எனையும் முடிந்திட்டப்  பேரழகே
விட்டுச் செல்லாதே என்றென்றும் எனதுறவே

மலரும் உன்னாலே கோபமாய்ப்  பாக்குதடி
எனை விட அழகா எனச் சட்டென்று கேக்குதடி
மண் மீது உன் பாதம் இதமாய் பதியையிலே
பூமியும் மகிழ்ந்திடுவாள் நாளெல்லாம் இளங்குயிலே

இமைகளுக்குள் உன்னை வைத்துக் காத்திருப்பேன்
மூச்சினிலே காலமெல்லாம் கலந்து நிற்பேன்
கடக்கின்ற போதினிலே வருகிறது சுகந்தம்
இறுதி வரை வந்தே தந்திடுவாய் வசந்தம்

வயல் ஓரம் நடக்கையிலே வலிக்கிறதாப் பாதம்
தூக்கித் தான் வந்திடுவேன் மறுத்திட்டப் போதும்
கிட்டத்தில் வருகிறது சேருகின்ற காலம்
உறவுகளும் எட்ட நின்று வாழ்த்திடுமே நாளும்

**தஞ்சை பழ வள்ளியப்பன்**

# கண்ணுக்குள்ளே உன்ன வச்சேன்

தெளிஞ்சு ஓடும் ஓடையில  தெறிச்சு விழுந்த கல்லு போல
பதிஞ்சதே உன் பார்வ  அச்சாரமா எம் மனசில
பட்டா போட்டு அமர்ந்தாயே பாவி மக நெஞ்சத்தில
பரிதவிச்சு காத்துருக்கேன் அத்த மகன் உனக்காக

ஆச மச்சான் வரவையெண்ணி  அணுவணுவா துடிக்கிறேனே
இராப்பகலா கண விழிச்சு தலையணைய நனைக்கிறேனே
எம்மனதின் ஏக்கமதை எடுத்துச் சொல்ல யாருமில்ல
களவு போன எம்மனச  கண்டறிய வழியுமில்ல

நித்தமும் உனைக்காண சித்தங் கலங்கி அலைகிறதே
சின்ன மனசுக்கு தெரியலையே  சிப்பிக்குள்ள இருப்பதற்கு
அவன் பதித்த இதழ் முத்தம்  நினைவலையாய் தொடர்கிறதே
நெனச்சு நெனச்சு பாக்கையில உயிர்க்கொடி தான் பூக்கிறதே

நித்த நித்தம் உன் நெனப்பு நெஞ்சுள்ள வாட்டுதையா
என் ஆசையெல்லாம் நிறைவேற  காலமெப்போ வழிகாட்டும்
உன்வரவை யெண்ணி யெண்ணி தடம் வழியப் பாக்குறேனே
பாத்துப் பாத்து நெதநெதமும் பூத்துப் பூத்து போகுறேனே

அள்ளியெனை அவனெடுத்து ஆனந்தமாய் கொஞ்சிடவே
அந்நாளும் எந்நாளோ! ஏக்கத்துடன் காத்திருப்பேன்
கண்ணுக்குள்ள உன்ன வச்சு காலமெல்லாம் காத்திருப்பேன்
கண்டாங்கி சேல ஒன்னு வாங்கி வந்து கரம் பிடிக்க

என்னவனை எதிர்பார்த்து ஏங்கி ஏங்கி தவிக்கிறேனே
மன்னவனும் வருவானே எனையழைத்து செல்வானே
நீ வந்தா போதும் மாமா! எந்த சொந்தமும் எனக்கு வேணா
எந்த சொந்தமும் எனக்கு வேணா!!!

**திருமதி ச.லில்லிராஜா.**
ஆசிரியை

# வேதாளம் பதில்கள்

## தொடரும் கேள்விகளை கேட்கலாம்.

சிலப்பதிகாரம் குறித்து வேதாளம் என்ன கருதுகிறது?

மனோகரன், விருதுநகர்

சிலப்பதிகாரம் ஒரு புரட்சிக் காவியம். மன்னர்களை இறையவனைப் பாடுபொருளாகப் பாடுவதை விடுத்து நாட்டு மக்களைக் காவியத் தலைவனாகவும் தலைவியாகவும் எண்ணிப் பாடிய காப்பியம்.

■ ■ ■

கல்லணையைப் பார்த்திருக்கிறதா வேதாளம்?

சுகுமார், மண்ணடி, சென்னை

ஏனில்லை? பலமுறை பார்த்ததுண்டு. இரண்டாயிரம் வருடங்களாகத் தமிழனின் பொறியியல் தொழில்நுட்பத்தைப் பறைசாற்றும் சான்றாக நிற்பதைப் பார்த்து வியந்ததுண்டு.

■ ■ ■

இன்று நாம் பேசும் தமிழை வள்ளுவர் கேட்டால் அவருக்குப் புரியுமா?

தனிததமிழன், காஞ்சிபுரம்

உறுதியாகப் புரியும். ஆனால் நாம் எழுதியதைப் படிக்கத் தெரியாது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பேச்சு வழக்கில் மாறாத ஒரே மொழி உலகத்தில் தமிழ் மட்டுமே! ஆனால் எழுத்து வடிவம் மாறிவிட்டது.

■ ■ ■

குறுந்தொகையில் வேதாளத்தைக் கவர்ந்த வரிகள் எவை ?

கண்ணதாசன் க, சென்னிமலை

வெறெது ? செம்புலப் பெயல் நீர்தான். தன்னை ஆக்கியோன் பெயர் தெரியாவிட்டாலும் அவருக்குச் செம்புலப் பெயல்நீரார் என்று பெயர் கொடுத்த வரிகள் கொண்ட அந்தக் கவிதை குறுந்தொகையில் எனக்குப் பிடித்த வரிகள் (அடிகள்).

யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே

■ ■ ■

தமிழ் ஒரு மந்திர மொழி என்பது உண்மையா?

அப்துல் கஃபூர், மயிலை

அதிலென்ன சந்தேகம். நீங்கள் கேட்பதைக் கொடுக்கும் மொழி தமிழ்மொழி .விரும்பி மனதாரக் கேளுங்கள் . உறுதியாகக் கொடுக்கும் மொழி தமிழே என்பது தெரியும் !

■ ■ ■

அந்தாதியில் கவிதைகள் எழுதுவதற்கு ஏதும் காரணம் உண்டா?

இளம்பரிதி, நீடூர்

ஆம் அந்தாதியில் எழுதப்பட்ட கவிதைகளை/ செய்யுள்களை எளிதில் மனப்பாடம் செய்ய இயலும் . அடுத்தடுத்த பாக்களை நினைவில் கொள்ள அந்தாதி உதவும்.

■ ■ ■

ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பது உண்மையா?

கவியரசன், நெல்லை

இலங்கையைப் பார்த்துமா இந்தக் கேள்வி?

■ ■ ■

பாலை என்பது தமிழகத்தில் உண்டா?

நெடுஞ்செழியன், `மயிலாடுதுறை

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் இவைநான்கும் பொய்த்துப் போனால் அவ்விடம் பாலை எனக் கருதப் படும்.




இது தமிழ் மொழியைத் தமிழ் மொழி வரலாற்றிலேயே முதல் முதலாகக் குழந்தையாகப் பாவித்து மரபு இலக்கண முறைப்படி எழுசீர் ஆசிரிய விருத்தத்தில் எழுதப்பெற்ற பிள்ளைத்தமிழ் நூல் ஆகும்.

கண்ணே மணியே என்று வழக்க மாகப் பாடப்பெறும் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய 10 பருவங்கள் இந்நூலில் வித்தியாசமான முறையில் உள்ளது.!

இந்த 10 பருவம் போகப் புதிதாக இக்காலதிற்கேற்ப கணினி, செம்மொழி என்ற 2 புதுப் பருவங்கள் சேர்க்கப்பெற்றுள்ளது.

செம்மொழிப் பருவம் பட்டாபி ஷேகம் போல வர்ணிக்கப் பெற்றுள்ளது.

12 பருவங்களும், தமிழ் உயிரெழுத்து கள் 12ஐ நினைவூட்டுவதாக அமைந்து அவ்வுயிரெழுத்தே அந்த 10 பாடல்களின் முதல் எழுத்தாக ஆரம்பிக்கும்படி புதுமை யாக உள்ளது.

இந்த நூல் எந்த சாதி, சமய, மத, இன வேறுபாடின்றி தமிழின் சிறப்பையும், தமிழ் நாட்டின் சிறப்பையும், தமிழர்களின் பெருமையையும் போற்றுகிறது. 10 பருவங்களிலும் ஆங்காங்கே தமிழகத்தில் உள்ள 10 விதமான மலைகள், நீர்நிலைகள் கட்டில்கள், தொட்டில்களில் தமிழைச் சீராட்டி, 10 விதமான பறவைகள் மலர் கள் கனிகளாக வர்ணித்து, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. வி.திருவள்ளுவன், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு.இராம.கதிரேசன், திருவாரூர் மத்தியப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத்தலைவர் திரு. இரவி, அழகப்பாப் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் திரு. மா.கண்ணப்பன், திருவாடானை அரசினர் கலைக்கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் திரு.பழனியப்பன் போன்றவர்களின் அணிந்துரை, வாழ்த்துரை, வாழ்த்து மடல் மற்றும் மதிப்புரையோடும் மணிவாசகர் பதிப்பகத்தால் பதிப்பிக்கப்பெற்று காரைக்குடி கம்பன் திருவிழாவில் தமிழறிஞர் சோம.லெ. அவர்கள் புதல்வர் சோமசுந்தரம் அவர்களால் 17.03.2022 அன்று வெளியிடப்பெற்றது.

இந்நூலை எழுதிய ஆசிரியர் - மெ. சண்முகம் B.Sc., B.Ed., (ஓடாப்புலி நிவாஸ் ‘2020’, 94. மெ. மெ. வீதி, காரைக்குடி, 630001, சிவகங்கை மாவட்டம். அலைபேசி - 9976402342, 8248748170)

நூலை இணையத்தில் இலவசமாகப் படிக்க

நூல் மதிப்புரை

# காதல் நெஞ்சம்

காதல் கொண்ட நெஞ்சத்தில்
காத்து கிடக்கும் கற்பனைகள்
நோதல்  கொண்ட மனத்தினிலே
நொடியில் மாற்றம் தேடுகிறேன்
பாதம் வணங்கி நின்றிடுவேன்
பாவை உள்ளம் கொள்ளையிட
காத தூரம் சென்றாலும்
கௌவி இழுத்து வளைக்கின்றாள்

என்ன ஏதோ ஆகிறது
ஏனோ வருத்தம் தோய்கிறது
கன்னல் சுவையும் கற்கண்டும்
கழுத்து வரையும் கசக்கிறது
இன்னும் ஏக்கம் தீரவில்லை
இதயம் வலிக்க பாவையில்லை
கன்னம் சிவக்க நடந்ததெல்லாம்
காதல் கொண்டு திரிந்ததெல்லாம்

காற்றில் மறைந்து போயினவோ
காலம் மாற்றி விடுகிறதோ
நேற்று நடந்த நினைவுகளில்
நெஞ்சு வலிக்கச் செய்கிறதே
தோற்றம் கண்ட மயக்கத்தில்
தொல்லை தந்து நகர்கிறதே
தூற்றும் அலரில் பயமுந்தான்
துடிக்க வைத்து நகர்கிறதே

வேடம் தரித்து நிற்கின்றேன்
வெளியே கொஞ்சம் நடிக்கின்றேன்
பாடம் சொல்லித் தந்தவளைப்
பழகி மறைந்து சென்றவளைச்
சேடிப் பெண்போல் தேடுகின்றேன்
தெய்வ மாகத் தொழுகின்றேன்
நாடி வருவேன் விரைவாக
நங்கை உன்னை நான்தேடி

- தமிழ்நெஞ்சம் அமின்






பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com ஜூன் 2022


**சித்தன்னவாசல் ஓவியமே சிந்தை மயங்குதடி**

சித்தன்னவாசல் ஓவியமே சிந்தை மயங்குதடி
சித்திரப் புன்னகையில் நெஞ்சம் அவிழுதடி

கண்ணோரம் என்ன துள்ளும் மீன்களோ?
பெண்ணே உந்தன் வசீகரம் தூண்டிலோ?

முந்தானை கட்டிய முழுநிலா மண்ணில்
சிந்தனைக்கு எட்டாத செந்தேன் உன்னில்

மன்மதப் பார்வை எய்யுதே கணைகள்
மதி மயங்கிடும் அழகோ இதழில்

சிவந்த கன்னங்கள் சிதறிட வைக்குதே
சிகை எழிலோ நெஞ்சத்தைத் தைக்குதே

வெண்பஞ்சு மேகமோ ஏந்திழை மேனி
பொன்வண்ணம் பூசுகிறாள் பூலோக இராணி

மந்தார வனப்பே மயிலின் இறகே
வந்தாயே நீயும் வாழ்வு சிறக்க


**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை